
நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க - கனடாகிளை வழங்கும்

# நெல்லைத் தீபம் 2007

O.S.A. CANADA




Web:www.nmmv.ca

HOMELIFE GTA REALTY INC.

Gnani & Judy

வீடு, வியாபார
நிலையங்கள்
வாங்க விற்க

ஞானேந்திரன் நரசிங்கம்
Sales Representative
416.937.8090



ஜூடி ஞானேந்திரன்
Sales Representative
416.629.9797



To Buy or Sell Home, Business & Investment properties.

HOMELIFE
HIGHER STANDARDS

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3

MRS KITCHEN நிறுவன அரங்க ஆதரவில்

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அபிவிருத்தி ஒன்றியம் - கனடா

பெருமையுடன் வழங்கும்

# நெல்லைத் தீபம் - 2007

## பல்சுவைக் கலை விழா

நவம்பர் 03, 2007 சனிக்கிழமை மாலை 5:30 மணி

முதன்மை விருந்தினர்

திரு. ஆழ்வார் சீவரத்தினம்

B.sc. Dip. in. Education

இளைப்பாறிய உப அதிபர் - N.M.M.V.

மேடை அமைப்பு: Mega Financial Group

VIDEO ஒளிப்பதிவு: SKL Canada Inc.

இடம்: Middlefield Collegiate Institute

525 Highglen Ave. Markham, ON.

Web: nmmv.ca

Email-nmmv.canada@gmail.com

# பாடசாலைக் கீதம்

இயற்றியவர்: பண்டிதர் வீரகத்தி
இராகம்:- சிம்ஹானந்தனப்பிரியா
தாளம்: ஏகம்
மெட்டு அமைப்பு: சங்கீத பூஷணம் திரு. கார்த்திகேசு

பல்லவி
வாழ்க வாழ்க வாழ்கவே - எங்கள்
கலைக் கோயில் என்றும் (வாழ்க. . )

அனுபல்லவி:
நெல்லியடி மதிய மகாவித்தியாலயம்
நிகரில்லாத கலையின் ஊற்று குருகுலபீடம் (வாழ்க. . )

சரணங்கள்
கண்விழித்த கமலமன்ன கவர்ச்சிபொங்கு பார்வையும்
கனல் தெறித்த வீறு கொள்ளும் ஆண்மை ஓங்கு நெஞ்சமும்
எண்ணிலாத இலட்சியங்கள் சூழும் இதய வேகமும்
விண் முகட்டிற் பாயவைக்கும் விந்தை அறிவு நிலையமாய் (வாழ்க . .)

இன்ப வாழ்வு பூக்கும் வண்ணம் இனிய கலை விஞ்ஞானமும்
என்றும் எங்கும் உண்மைகாணும் பேறுகொள் மெய்ஞ்ஞானமும்
அன்பினாலே வெற்றியீட்டும் அரிய பண்பு நெறிகளும்
ஆக்கி எம்மில் ஆற்றல் ஏற்றும் அறிவு நீர் வீழ்ச்சியாய் (வாழ்க. .)

கல்விப் பண்ணை வளர நாளும் களை பிடுங்கி அறிவுநீர்
மெல்ல மெல்ல சொரிந்துநிற்கும் மேன்மை மிக்க குரவர்கள்
செல்வம் என்று போற்றும் எங்கள் உயிரில் வாழும் செந்தமிழ்
அல்லல் நீக்கி ஆட்சி காண அருள் வழங்கு வாணியாய் (வாழ்க . .)

என்பும் உரியர் பிறர்க்கு என்ற இனிய கொள்கை அழகிலே
அன்பு நெறியில் பணிகள் ஆற்றி அருமைத் தமிழின் நிழலிலே
தென்பு பெற்று தெய்வ ஒளியில் திசை கடந்த புகழிலே
இன்பம் காட்டும் வாழ்வு நல்கும் இணையிலா் சாந்தி நிலையமாய்

வைத்தகாலைப் பின்வையாமல் வழ்விலே முன்னேறுவோம்
வையவாழ்வு சொர்க்கம் என்று வாகை சூடிக் கூறுவோம்
நித்தம் எம்மைக் காக்க என்று நிமலன் பாதம் சூடுவொம்
அத்தன் கருணை வெள்ளம் மூழ்கி அமரகீதம் பாடுவோம்!
அமரகீதம் பாடுவொம்! அமரகீதம் பாடுவோம்!!!

## தமிழ்த்தாய் வணக்கம்



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீச
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே

- புரட்சிக்கவி பாரதி -

## கனடிய தேசிய கீதம்



ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள்
உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய் வலுவாய், இயைபாய்
நீ எழில் கண்டுவப்போம்!
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
எம்நிலப் புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!
ஓ கனடா! நாம் நின்னைப் போற்றி
அணிவகுத்தோம்!
ஓ கனடா! நாம் நின்னைப் போற்றி
அணிவகுத்தோம்!

*- கவிநாயகர் வி. கந்தவனம்*

இதழாசிரியரின் 

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஆன்றோர் வாக்கு. "வாசிப்புப் பழக்கம் மனிதனை முழுமையாக்குகின்றது" என்கின்றார் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். தமிழனிடம் உள்ள குறைபாடுகளில் ஒன்று தான் அறிந்தவற்றை மற்றவர்களுக்காகப் பதிந்து வைத்துப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்குத் தந்துவிடாதது. பண்டைய இலக்கியங்கள், வரலாற்று ஆவணங்களை நாம் இன்று பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக உள்ளோம். எமது வரலாற்று ஆதாரங்களுக்கு நாம் வெளிநாடுகளில் உள்ள நூலகக் காப்பகங்களை நாடவேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம் என்றால் எம் நிலையை என்ன என்பது. எந்த ஒரு நிகழ்வையும் பதிந்து வைத்து எந்தெந்தக் காலகட்டத்தில் என்னென்ன நடந்துள்ளன என்பதனை அறிந்து கொள்ள வழிசெய்வது முக்கியமானது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களாகிய நாம் இன்று உலகெங்கும் பரந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றாலும் கூட ஒரே சூழலில் அயலில் உள்ளவர்களைக் கூட அறிந்திராதவர்களாக, வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கின்றோம். பல்வேறு பாடசாலைகளின் பழைய மாணவர்கள் தாங்கள் கல்வி பெற்ற பாடசாலையை மறந்துவிடாது அந்தக் கல்வித்தாயின் மீது தீராத காதல் கொண்டவர்களாக உள்ளனர். அவளை நினைவிருத்திக் கொண்டு ஆண்டொரு முறையாவது சந்தித்து சகோதரத்துவம் பொங்க உறவாடி மகிழ்ந்து குதூகலிப்பதோடு மட்டுமன்றி தமக்கு அறிவுப் பசியைப் போக்கிய கல்வித்தாய்க்குத் தமது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். அந்த நிலையைப் பின்பற்றி நெல்லியடி பழைய மாணவர்கள் இணைந்து செயற்பட முன்வைத்துள்ள "நெல்லைத் தீபம் - 2007" விழா, நாம் எடுத்துவைத்துள்ள முதல் படியாகும்.

எமது கருத்துக்கள், நோக்கங்கள், செயற்றிட்டங்கள் பற்றி அனைவரும் அறிந்துகொள்ளவும், நாம் வாழும் சமுதாயத்தின் தன்மைகளையும் தேவைகளையும் அறிந்துகொள்ளவும் ஒரு ஆதாரமாக "நெல்லைத் தீபம் - 2007" இதழ் உங்கள் கரங்களில் தவழ விடப்பட்டுள்ளது. இந்த இதழ் சிறப்பான முறையில் வெளிவருவதற்கு உதவிய எமது நெல்லை மாதா பெற்றெடுத்த செல்வங்களின் பேராதரவும், உதவியும், ஊக்கமும்தான் காரணம் எனலாம்.

நெல்லைத் தீபத்தில் எமது வாரிசுகளின் படைப்புக்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்னும் வேணவா எம் உளத்தில் உதித்தபோதிலும் போதியளவு படைப்புக்கள் எமக்குக் கிடைக்கவில்லை என்னும் அதங்கத்தை வெளிக்கொண்டுவர வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இம் மலருக்கான நிதி உதவிகளைப் பலர் நல்கிய போதிலும் ஆக்கங்களைத் தர முன்வராதமைக்கு இது எங்கள் கன்னி முயற்சி என்பதும் ஒரு காரணமாக அமைகின்றது. நாம் எமது இதழ் சிறப்புடையதாக அமையவேண்டும் என்பதற்காகச் சில கற்றறிந்த பெரியோர்களை நாடியதன் பயனாகச் சில கருத்தாழமுள்ள ஆக்கங்களை இவ்விதழில் உள்ளடக்கியுள்ளோம். அவர்களின் ஆக்கங்களினால் எமது இதழ் சிறப்புடையதாக அமைந்துள்ளது. அவர்களுக்கு நாம் நன்றிக் கடப்பாடுடையோம். எமது குறுகியகால இந்த முயற்சியை வாசகர்களாகிய நீங்கள்தான் மதிப்பீடு செய்து எமக்கு ஆலோசனைகளை நல்குவதோடு எதிர் வரும் காலங்களில் நல்ல ஆக்கங்கள் கிடைக்கவும் வழி செய்யவேண்டும் என வேண்டுகின்றோம்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் என்னும் பெரு விருட்சத்தைப் பாதுகாப்பது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். அந்த விருட்சம் தொடர்ந்தும் நிழல் தரத்தக்கதாக நீரூற்றி உரமிட்டுப் பாதுகாக்கவேண்டியவர்கள் புலம்பெயர்ந்து வாழும் எம்மவரே அன்றி வேறுயாருளர். வெளி நாடுகளில் கிளைகளைப் பரப்பி நிற்கும் எமது விருட்சத்திற்கு நாமனைவரும் இணைந்து உறுதியினையும் பாதுகாப்பையும் பலப்படுத்தவேண்டிய கட்டாயமும் தேவையும் உளது என்பதனை உணர்ந்து செயற்படவேண்டும்.

நூற்றாண்டை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் எமது கலைக்கோவிலின் சிற்பங்கள், சித்திரங்கள் சிலிர்த்துச் சிறக்கவேண்டும். அதன் வளர்ச்சிப் படியினை மனதிருந்திச் சிந்தித்துச் செயற்படுவோம்!

இம்மலருக்கு ஆக்கங்களைத் தந்துதவிய அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரியத் தருவதோடு, இந்த இதழை உருவாக்குவதில் தோழோடு தோழ் நின்று உழைத்த பணியாளர் குழுவினருக்கும், விடயதானங்களைப் பெற்றுத் தந்ததோடு மட்டுமன்றி, தனது வேலைப் பழுவின் மத்தியிலும் எழுத்துப்பிழைகளை திருத்தியும் உதவிய பொதுச் செயலாளரும் முன்னை ஆசானுமாகிய க.குலராஜேந்திரன் அவர்களுக்கும், இவ்விதழை வடிவமைத்து தொழில் நுட்ப உதவிகளை நல்கியதோடு வெளிவருவதற்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்ட திரு.த.மதீஸவரன், திரு. க. வர்ணகுமாரன் ஆகியோருக்கும் எனது அன்புகலந்த நன்றி!

இவ்விதழின் ஆக்கத்திற்கு தேவையான விளம்பரங்களைப் பெற்றுத் தந்தவர்களுக்கும், பெருமனது கொண்டு தந்துதவியவர்கள் அனைவருக்கும் என்றென்றும் கடப்பாடுடையோம்.

த. சிவபாலு
இதழ் குழு சார்பாக

**Executive Committee**

**President**
Mr. C. Ambihavaran
416-792-0662

**Vice President**
Mr. K. Kantharupan
416-291-3997

**General Secretary**
Mr. K. Kularajendram
416-286-0895

**Asst. Secretary - Arts**
Mrs. N. Sivayogan
416-999-3405

**Asst. Secretary - Sports**
Mr. T. Ganapathipillai
416-412-3883

**Treasurer**
Mr. N. Thiraviam
416-332-8738

**Asst. Treasurer**
Mr. K. Varnacumaaran
416-844-7390

**Committee Members**
Mr. T. Matheeswaran
Mr. K. Thavarupan
Mr. S. Vinayagamoorthy
Mr. K. Pushphanathan
Mr. M. Manoharan
Mr. S. Ganeshamoorthy
Mrs. R. Tharmarajah
Mrs. M. Amirthalingam

**Auditors**
Mr. K. Sivagnanam
Mr. A. Rasaratnam

**Editor**
Mr. T. Sivabalu

தலைவரின் செய்தி!

எமது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் கனடா வாழ் பழைய மாணவர்கள் இணைந்து ஒரு கலைவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட புத்தூக்கம் கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளமையை மகிழ்ச்சியுடன் தெரியத்தருவதில் பெருமையடைகின்றேன்!

கரவெட்டிப் பிரதேசத்தை முழுமையாக உள்ளடக்கியுள்ள பெருநிலப்பரப்பில் உள்ள நெல்லியடியில் அமைந்துள்ள எமது கல்விக்கூடம் இலங்கைத் தீவகத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் உள்ள தமிழ் பேசும் இனத்தினரின் கல்வி விருத்திக்குத் தன்னாலான பணியை எப்பொழுதுமே ஆற்றி வந்துள்ளது. வடமராட்சியில் தலை நிமிர்ந்து நிற்கும் பாடசாலைகளில் முன்மாதிரியான ஒரு பொதுமை நோக்கத்தோடு அமைக்கப்பட்ட பாடசாலையாக, பல்வேறு திறத்தினரையும் பல்வேறுபட்ட பிரதேசத்தவர்களையும் உள்வாங்கிக் கொண்டு அவர்களுக்கு வாழ்வின் ஈடேற்றத்திற்கான கல்விப்பசியைத் தீர்த்து வைத்துவந்துள்ளது, தீர்த்தும் வருகின்றது. இதற்கு அர்ப்பணிப்போடு செயற்பட்ட அதிபர்களும், ஆசிரியர்களுமே காரணம் எனத் துணிந்து கூறுவேன்.

எமது கல்வித்தாய் நாட்டின் அண்மைக்கால சூழ்நிலைகள் காரணமாகத் தனது அழகிழந்து, பொலிவிழந்து, செயலிழந்து, நலிவடைந்து காட்சியளிக்கின்றாள். அரசியல் காரணங்களினால் யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் பாதிக்கப்படும் சூழ்நிலைக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைக்கு எமது கலைக்கோயிலும் விலக்காக வில்லை. இலங்கை இராணுவம் பாடசாலை என்று கருதாது முகாமிட்டதன் காரணமாக எமது பாடசாலை சீரழிவுக்குத் தள்ளப்பட்டமை அனைவரும் அறிந்ததே.

எனவே வெளிநாடுகளில் இன்று வாழுகின்ற எமது கலைத்தெய்வத்தின் மைந்தர்களாகிய நாம் அனைவருக்கும் அவளின் மீள் கட்டுமானப்பணிகளில் பங்குகொள்ளவேண்டிய பாரிய கடப்பாடு உண்டு. எனவே பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் இணைந்து எமது கலைக்கோயிலைப் புனரமைத்து உன்னத நிலையை எட்ட வழிசமைக்க வேண்டும். கனடாவில் உள்ள எமது ஒன்றியத்தைப்போன்று உலகின் பலபாகங்களிலும் பரந்து வாழுகின்ற எமது அன்னையின் மைந்தர்கள் அனைவரும் கருணை உள்ளங்கொண்டு பங்களிப்புச் செய்வதன் மூலம் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்பதனை உறுதியோடு முன்வைத்து, அனைவரும் உதவவேண்டும் என இவ்வேளையில் வேண்டிக்கொள்வதோடு, நாம் வெளியிட்டுள்ள இம் மலரில் பாடாசலை அதிபரின் பாடசாலை அபிவிருத்திக்கான கோரிக்கைகள் அடங்கிய செய்தியும் இடம்பெற்றுள்ளமை கருத்திற்கொள்ளத்தக்கது. எனவே எமது ஒன்றியம் மேற்கொள்ளும் இந்த விழா(2007) எமது கல்லூரியின் பழைய மாணவர்களை ஒன்றிணைக்கவும், பல பயனுள்ள செயற்பாடுகளுக்கு ஊக்கம் தருவதாகவும் அமைய இறைவனை வேண்டி வாழ்த்துவதோடு, இந்த விழாச் சிறக்கப் பாடுபட்டு உழைக்கும் அனைவருக்கும் நன்றியறிதலையும் தெரியத்தருகின்றேன்!

வாழ்க எமது கலைக்கோயில்! சிறக்கக் கலைவிழா!

சி.அம்பிகாவரன்

*Address: 19 Canmore Blvd, Scarborough, Ontario, M1C 3T3, Canada   Web: www.nmmv.ca   E-mail: nmmv.canada@gmail.com*

# RUBAN Auto Tech

5635 Finch Ave. E, Unit 7A Scarborough. ON

உங்கள் மனநிறைவுக்கு நாங்கள் உத்தரவாதம்

உங்கள் சகலவிதமான திருத்த வேலைகளுக்கும் எம்மை நாடுங்கள்

* Tune Up
* Brakes
* Air Condition
* Insurance Claims
* Computerized Wheel Balancing
* Under Coating Rust Roofing
* Transmission
* Engine
* Body Work

**Domestic - European Japanese Cars & Vans We are specialized in HONDA**

**Call: Ruban**

**Tel: 416 335 9031 Fax: 416 335 9033**

Century 21


**Percy Fulton Ltd.**
Brokerage*

2911 Kennedy Road
Toronto, ON M1V 1S8

**Bus (416) 298-8200**
Fax (416) 298-6602
Cell (416) 930-4600
Email vigaiya@sympatico.ca


*Independently Owned And Operated. ®/™ Registered Trademarks of Century 21 Real Estate LLC Used Under License. ®/™ Trademarks of AIR MILES International Trading B.V. used under license by Loyalty Management Group Canada Inc. and Century 21 Canada Limited Partnership

## VIG AIYADURAI
Sales Representative



Office 2006

# நெல்லியடி ம.ம.வி. பழைய மாணவர்களின் கலைவிழா-2007 சிறப்புற வாழ்த்துக்கள்!!



## வீடுகள், வியாபார நிலையங்கள் வாங்க, விற்க

**நம்பிக்கையுடன் அழையுங்கள்**

**துரைராஜா ரமேஷ்** (B.Sc. Eng.)
*(வீடு விற்பனை முகவர்)*
Direct: **416.917.9957**

**ஜெயந்தன் சீவரட்ணம்** (P.Eng.
*(வீடு விற்பனை முகவர்)*
Direct: **416.400.9715**



Office: **416.321.6969**

HOMELIFE HIGHER STANDARDS

HOMELIFE/GTA Realty Inc
Brokerage*
* Independently Owned and Operated
1711 McCowan Rd., Suite 206
Toronto, ON. M1S 2Y3



# MEGA Financial Group

**PH 28 - 4168 Finch Ave. E.**
**Scarborough ON. M1S 5H6**

INDUSTRIELLE ALLIANCE
TRANSAMERICA
Canada Life
Manulife Financial
Unity Life of Canada
Canada Protection Plan
EMPIRE FINANCIAL GROUP
RBC Insurance
UL Mutual

- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drugs Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- Life Insurance Products
- RRSP'S & Investments
- RESP - Education Saving Plan
- Final Expense Products
- Pre Arranged Funeral Plans through Ogden Funeral Home

அனைத்து வகையான காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்



## Raj Nadrajah

President & Financial Advisor

**Office: (416) 293-5559 Ex 27**
**Fax: (416) 293-9409**
**Direct: (416) 666-1120**

Email: raj@megafinancial.ca
Web: www.megafinancial.ca

Apex 416 297 0707

## J/NELLIADY MADHYA MAHA VIDYALAYAM

**KARAVEDDY, SRI LANKA**

*Established in 1921*

T.P.No: 021-226 3017
021-226 4141
Fax :021-226-3017

**Principal:**
**Mr.S.Sethurajah. SLPS -1**
B.A. Dip. In. Ed. PGDEM. M.Sc. (Ed. Mgt.), M.Phil.(Ed.)

**Deputy Principal:**
**Mrs. M.Mahendra**
B.Sc.,Dip. in. Ed.

அதிபரின் ஆசிச்செய்தி :

மனித வாழ்வி மறக்கவொண்ணா முக்கிய மூலகங்கள் மதா, பிதா, குரு என்பது எல்லோருமறிந்தவையாகும். ஒருவர் அன்னையையும் தந்தையையும் வேறென்றோடு மாற்றீடு செய்துகொள்ள முடியார்து. தயாயும் தந்தையும் ஒரு மனிதனின் இவ்வுலக வாழ்வின் முகவரிகள். அவ்வகையில் அவர்களோடு வளர்ந்து வாழ்நத வீடு முக்கியம் பெறுகின்றது. அதேபோல் தத்தம் தலைவிதிப்படியே ஒவ்வொருவருக்கும் அமைந்த ஆசிரியர்களோடு அறிவாலும் அன்பாலும் பிணைந்து வளம்பெற்ற காலத்தின்நிலைக்களனான பாடசாலைகளும் ஒவ்வொரு மனிதனுக்கும் வழ்வின் இரண்டாவது முகவரியாகின்றன. இதன் காரணமாகவே கற்றவர்கள் தாம் பயின்ற கல்லூரிகளை தமது தாய், தந்தையர்கள் வாழும் வீட்டைப்போல் விசுவாசிக்கின்றனர். இவ்வகையிலர் யா.்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் நாடளாவியரீதியிலும் உலகளாவியரிதியிலும் தனது ஞானக்கொடியைப் படரவிட்டுப் பூரித்து நிற்கின்றது. இன்று இக்கல்லூரியின் மைந்தர்கள் கடல்கடந்து பல நாடுகளில் கல்தவியிலும் செல்வத்திலும், மக்கள் பொதுப் பணிகளிலும் மேலோங்கிக் கோலேச்சிகின்றனமை கண்கூடு. இக்கல்லுஸரியின் கனடா வாழ் புத்திரர்களும் புத்திரிகளும் அபிமான அன்புள்ளங்களும் ஒன்று சேர்ந்து "நெல்லைத் தீபம்" என்னும் மலரினை வெளியிட்டு வைப்பதனையிட்டு கல்லூரித்தாய் பூரிப்படைகின்றாள்.. காலச்சூழல் சாதகமின்மையும் காலத்திற்கேற்ற வளர்ச்சிகக்கான வளக்குறைவுகளும் நெருக்குகின்றபோதிலும் கல்லூரியின் கனடா வழ் பழைய மாணவர்கள்விழிப்படைந்து வெளிப்படுத்தும் இம்மலருக்கு நல்லாசி வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.
வாழ்க கல்லூரி, வாழ்க அதன் நாமம்.

செல்லத்துரை சேதுராஜா
அதிபர்,
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.



## பிரதம விருந்தினரின் ஆசிச் செய்தி



எமது அன்பான பெற்றோர்களே! பெரியோர்களே! இளையோர்களே! எமது பழைய மாணவர்களே! தமிழ் உறவுகளே! வணக்கம்!

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் ஒன்றியம் இன்று புனரமைக்கப் பட்டுள்ளது. மிகவும் தூரநோக்கு எண்ண அடிப்படையில எல்லாத் துறைகளிலும் பிரதிபலிக்க அமைந்த செய்ற்திறமை மிக்க நிர்வாகக் குழு இவ்வாண்டிற்காககத் தெரிவாகியுள்ளது. உறுப்பினர்கள் தொர்ந்தும்இணைக்கப்ட்டுக் கொண்டிருக்கின்றனர். குறுகியகால, நீண்டகாலச் சயெற்திட்டங்களுக்கூடாக எமது வளரச்சிக்குத் தேவையான கல்வி கலாச்சாரம், விளையாட்டு, பொழுதுபோக்குப் போன்ற பல அம்சங்களைக் கொண்டு எமது சமூகத்தை மையப்படுத்தி ஒரு வளச்சிப்பாதையில் செல்லவிருப்பது பாராட்டத்தக்கது.

செய்றதிட்டங்களின் கன்னி நிகழ்சியான இன்றைய நிகழ்ச்சியும், இவ்வாண்டின் ஏனைய செயற்திட்டங்கள் அனைத்தும், தொடர்ந்தும் இவ்வொன்றியம் செய்யும் காரியங்கள் எல்லாவற்றிலும் வளசர்சசி பெற்று நலன் பெற நான் எல்லாம் வேண்டி இறைவனைப் பிரார்திக்கின்றேன்.

கல்வி அமைச்சர் சி.டபிள்யு. டபிள்யு. கன்னகங்கரா அவர்களால் செயற்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தச் சட்டத்தின் பயனாக அமைந்த இலவசக்கல்வி மூலம் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்ட மத்திய மகா வித்தியாலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அப்பொழுது Model School எனப் பெயர் கொண்டிருந்த இக்கல்லூரி நெல்லியடி மத்திய மாக வித்தியாலயம் என மாற்றப்பட்டு தரம் உயர்த்தபடப்பட்டது. அக்கால கட்டத்தில், கல்வி அதிகரி மட்டத்தில் பணிபுரிந்த மாமேதை கலாநிதி.சிவப்பிரகாசம் அவர்கள், இங்கு அதிபராகக் கடமை புரிந்தார். பொருள் வசதியற்று ஏனைய பள்ளிக்கூடங்களினால் அனுமதி மறுக்கப்பட்ட பிள்ளைகளும், 5ம் வகுப்பு புலமைப்பரிசில் தேர்வில் சித்தி அடைந்தவர்களும், பின்தங்கிய கிராமப்பற பிள்ளைகளும், சமூகக் கெள்கைகளினால் ஒதுக்கி வைக்கப்பட்டோரின் பிள்ளைகளும், ஊக்கமுள்ள, ஊர், அயல் ஊர் பிள்ளைகளும், இங்கு ஆங்கிலக்கல்வி கற்பதற்கு இவரால் ஊக்குவிக்கபட்டனர். இன்றும் இது தொடர்கின்றது. இதே காலகட்டத்திற்றான் 1945-46களில், நான் ஆங்கிலம் மூலம் கல்வி கற்பதற்கு 6ம் வகுப்பிற்கு அனுமதிபெற்றேன்.

1970-80களில் 1ம் தர உயர்தர வகுப்பு ஆசிரியராகவும், துணை அதிபராகவும் இக்கல்லுரியில் பணிபுரிவதற்கு கல்வி அமைச்சினால் பணிக்கப்பட்டு சேவையாற்றினேன்.

நாம் வாழ்ந்த பூமிக்காகவும், நாம் கல்வி கற்ற கல்விக் கூடத்திற்காகவும், எமது இன எதிர்காலச் சந்ததியினருக்காகவும் நாம் செய்யவேண்டிய கடமைகளும் சேவைகளும் பல உள. பாடசாலையின் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டுள்ள எங்கள் ஒன்றியத்தின் மூலம் இவற்றைச் செய்யமுடியும் என்னும் நம்பிக்கை பிறக்கின்றது.

இன்று நாம், நாடிழந்து, உறவுகளைத் துறந்தவராய், பெற்றவரை மறந்தவராய், ஊரவரை, அயலவரை, உதறித்தள்ளியவர்களாய், ஒற்றைமரமாய் வாழும் கதி ஏற்பட்டள்ளது. ‘எங்கிருந்தாலும் வாழ்வோம், எப்படியும் வாழ்வோம்’ என்பதல்ல வாழ்வு, பெற்றோரும் பிள்ளைகளுமாய், முதியோரும் இளையோருமாய், ஒன்றிணைந்த சமூகமாய், தமிழனாய் தரணி எங்கும் மொழியாலும், இனத்தாலும், கலை, கலாச்சாரத்தாலும் ஒன்று பட்ட நாங்கள் இன்று எமக்குக் கல்வியறிவூட்டிய ஒருதாய் மைந்தர்களாய் “யாதும் ஊரே யாவரும் கேளிர்“ என்று அன்று சொன்னவன் இன்று நடப்பதைக்கண்டுதானோ சொல்லி இருக்கிறான் என்று எண்ணத் தோன்றுகின்றது. என்னே தீர்க்கதரிசனம்!

இத்தனையும் காண ஒன்றியத்தில் இணையுங்கள். எமது சமூகம் நலிவடைந்தால் நாம் அனைவருமே நலிவடைந்து விடுவோம். எமது சமூகவளர்ச்சியிலேயே எமது பெருமை, எதிர்காலம் எல்லாம் தங்கியுள்ளது. நாம் சாதிக்க எத்தனையோ உள்ளன. அவற்றைச் சாதிப்போம். “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு” எனவே எமது கரங்களை இணைத்து எமது ஒன்றியத்தைப் பலப்படுத்துவோம்! ஒன்றியத்தின்மூலம் பல பணிகளை எமது நெல்லியடி கல்விக்கோயிலுக்கு ஆற்றுவோம் என வேண்டி, ஒன்றியத்தின் அளப்பரும் முயற்சிகளைப் பாராட்டுவதோடு எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகின்றேன்.

வணக்கம்

ஆழ்வார் சீவரத்தினம்.
முன்னைனாள் ஆசான்.

Saba Kulathungam, M.D., F.A.C.P., F.A.C.C.
DIPLOMATE OF THE AMERICAN BOARD OF INTERNAL MEDICINE
FELLOW OF THE AMERICAN COLLEGE OF CARDIOLOGY
8020 BELEIR ROAD
BALTIMORE, MD 21236

TELEPHONE: (410) 668-3000

## கல்வித் தலம்

தொடக்கத்தில் கோவில்களே கல்விச்சாலைகளாகவும் அமைந்தன. அதற்குக் காரணங்கள் பல. பிற்காலத்தில் பாடசாலைகள் வேறாகக்கட்டப்பட்டபோதும் கட்டிடத்தில் ஒரு பாகத்தில் ஒரு கோவில் அமைக்கப்பட்டது. இன்று பல மதத்தினருக்கும் பொதுவாக பாடசாலைகள் தனியே கட்டப்பட்ட பொழுதும், அவைகள் அஞ்ஞானத்தை அகற்றும் தலங்களாகவே மதிக்கப்படுகின்றன.

அப்படி அமைக்கப்பெற்ற பாடசாலைகளில் ஒன்றுதான் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். அங்கு சென்ற மூன்றே வருடத்தில் என் வாழ்க்கையை முற்றிலும் மாற்றியமைத்த அப்பாடசாலைக்கும் அங்கும் மூலத்தானத்திலிருந்து இருளகற்றிய அதிபர் திரு. ஏ.ரி. சபாரத்தினத்திற்கும் என் நன்றி நிரம்பிய வணக்கத்தை, கனடா பழைய மாணவர் சங்கத்தின் முதல் இதழ் மூலம் சமர்ப்பிக்கின்றேன்.

இப்பாடசலை மாணவர் முன்னேற்றத்திற்கு திரு. ஏ. ரி சபாரத்தின் பெயரில் என்னால் முடிந்தவை எதையும் மனமுவந்து செய்வேன் என்று கூறி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் தழைத்து வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

நன்றியுடன்

ச. குலத்துங்கம்
October 21, 2007.



**கலை, கலாச்சாரச் செயலாளரின் பார்வையில் . . . .**

அறிஞனாயிரு, கலைஞனாயிரு, அற்புதம் செய்யும் சிற்பியாயிரு
அற்புதம் செய்யும் சிற்பியாயிரு, அரசனாயிரு புருஷனாயிரு
மனிதயேத்தைப் போற்றும் மனிதனாயிரு

எங்கள் கலை, கலாச்சாரத்தைப் பேணி வளர்க்கும் எமது இளம் சமுதாயத்தினரையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலத்தின் வழிவந்த அனைத்து பழைய மாணவர் குடும்பங்களையும் ஒருங்கிணைத்து 'நெல்லைத் தீபம் 2007' என்ற முதலாவது நிகழ்வை நாம் ஒன்றிணைந்து நடத்துதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

இந்த நிகழ்வுக்கு கலை, கலாச்சாரச் செயலாளராக இருந்து நெல்லைத் தீபம் நிகழ்வை நடத்த என்னாலான எல்லாவிதமான ஒத்துழைப்பையும் நல்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். நாம் கல்வி கற்ற பாடசாலையின் வளர்ச்சிக்காக எல்லோருமே ஒன்றிணைந்து சகல வழிகளிலும் ஆதரவு வழங்கவேண்டும் என்ற நல்ல கருத்துக்கு ஒற்றுமையாக நின்று செயற்படுவோமாக!

"பசுமை நிறைந்த நினைவுகளே, பாடித்திரிந்த பறவைகளே!
பழகிக் களித்த தோழர்களே! பறந்து வருவீரே!
நெல்லைத் தீபத்தை ஏற்றிப் போற்றுவீரே!

திருமதி நளினி சிவயோகன்.


கலை, பண்பாட்டுச் செயலாளர்

A1 Choice Supplies

COUPON# 5635

# RESTAUR  NT SPECIAL

**Restaurant Supplies Blowout Sale!**





**Noodles Container 250/Cs**

**$ 19.65**

**Take out 8" container 200/Cs $ 23.50**

**Take out 9" container 200/Cs $ 27.65**



**Pick Up Or Have Us Deliver To You**

*Special pick up pricing available*

**BUY DIRECT FROM WHOLESALER & SAVE**

705 PROGRESS AVE, UNIT# 28 (PROGRESS /BELLAMY)
SCARBOROUGH, ON, M1H 2X1
TEL: 416-291-3002 FAX: 416-291-3390
E-MAIL: sales@aonechoice.com WEB: www.aonechoice.com


-7-

# CHOLA CATERER'S

உங்கள் இல்லங்களில் நடை பெறும்
எந்த வைபவமானாலும்
தரமான பொருட்களைக் கொண்டு
தாயகத்துச் சுவையில் சுடச்சுட
அறுசுவை உணவுகளை
உங்கள் இல்லத்திற்கே
கொண்டு வந்து தருகின்றோம்

We do cater all kind of occasions





**Call: Gobi**
**Tel: 416 288-9339**

1217 Ellesmere Rd
Scarborough, ON
(Midland & Ellesmere)
M1P 2Y5

# Nelliady Madya Maha Vidyalayam

## Alumni Assciation -UK

3, Croydon Lane, Banstead, Surrey, SM7 3AS

**PRESIDENT**

**Mr.T.Vasudevan**

**Mob: 07903 425 671**
**Tel: 020 8646 2845**

**GENERAL SECRETARY**

**Mr.Sellathurai Yoganathan**

**Mob: 07915 616 147**
**Tel: 020 8942 8813**

**REASURER**

**Mr. V. Sritharan**

**Mob: 07775 811 232**
**Tel: 020 86656651**

**VICE PRESIDENT**

**Mrs. S. Sahadevan**

**Mob: 07944 930 821**
**Tel: 020 8644 4493**

**ASSISTANT GENERAL SECRETARIES**

**MR. Sabaratnam Thayalan**
**Mr. Chelvatheebam Chelvam**

**Mob: 07939817 798**

**ASSISTANT TREASURER**

**Mr. Kathiramalai Uthayakumar**

**Mob: 0793 831 682**
**Tel: 020 8684 1804**



MESSAGE

Congratulations to NMMV Develop Ontrium, Canada - for your contribution to the lives and welfare of our community. I am very happy to learn that you are bringing out a souvenir titled "Nellaiththeepam 2007". The NMMVAA UK is proud of today's society, and wants to ensure that everyone has the life chances that they deserve. This is a key aim of 'Improving Opportunity and Strengthening Society', the strategy to increase community cohesion.

The NMMV has a key role to play in this work. It is an integral part of our Association and we have to make a valuable contribution both economically and socially. By this event it helps others to contribute to creating a society where there is mutual understanding, trust and respect.
I hope that it would be very magnificent in all sense and I extend my hearty wishes for your activities to promote Nelliady Madya Maha Vidyalayam. Wish you all success.

Yours Sincerely,

S. Yoganathan
General Secretary
NMMVAA UK
10-26-2007

Sub-Committees: Sports Committee, Cultural Committee, Educationa Committee

# முல்லையூர் லிங்கம்

## மணி வேலுப்பிள்ளை

எனக்கும் லிங்கத்துக்கும் ஒரே ஊர்: முல்லைத்தீவு. என்னுடைய வீடு முல்லர் வீதியில் இருக்கிறது. அவனுடையது கடற்கரை வீதியில்...

நானும் லிங்கமும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். ஒரே திடலில் விளையாடியவர்கள். ஒரே கடலில் நீராடியவர்கள்... பொழுது சாயும் வேளை, தரைக்காற்று கடல்கடந்து வீறுகொள்ள, தென்னோலைகள் கடல்நோக்கித் திசைகாட்ட, மீனவர்கள் அதே திசையில் படையெடுக்க, அதுவரை கடல்காற்று வாங்கியோர் எதிர்த்திசையில் நடைபயில, நாங்கள் இடைநடுவே புகுந்து விளையாட... நினைக்க நினைக்க இனிக்கும் காலகட்டம்.

உண்மையில் நாங்கள் லிங்கத்துக்கு எவ்வளவோ கடமைப்பட்டவர்கள் என்றே சொல்ல வேண்டும். இளமையில் வேறு எவருக்கும் கிடைக்காத இன்பத்தை அவன் எங்களுக்கு அள்ளித் தந்தான். அப்படி என்ன பெரிய இன்பம்? அவனுடைய தமிழைத்தான் சொல்லுகிறேன்.

லிங்கம் பேசிய தமிழ் விசித்திரமானது. ஏழுவாய் பயனிலை ஏறுமாறாய் இருக்கும். "தின்னுவோம் ஆய்ஞ்சு வாங்கோடா போய் மாங்காய்" என்றுதான் சொல்லுவான். "வாங்கோடா போய் மாங்காய் ஆய்ஞ்சு தின்னுவோம்" என்று சொல்லவே மாட்டான். "வந்தது பள்ளிக்கூடத்திலிருந்து நேற்று கடிதம்" என்றுதான் சொல்லுவான். "நேற்று பள்ளிக்கூடத்திலிருந்து கடிதம் வந்தது" என்று கடைசிவரை சொல்லமாட்டான்.

லிங்கத்தின் தமிழை "லிங்கத் தமிழ்" என்று நாங்கள் சொல்லி வந்தோம். நாங்கள் செய்த பேறு: தமிழில் வேற்றுமை உருபுகள் சொல்லின் இறுதியில் சேர்வதால் சொல்தொடரியலை மீறும் வசனத்திலும் கருத்து விளங்கும். அதாவது "லிங்கத் தமிழ்" எங்களுக்கு விளங்கும். அது லிங்கத்தின் மகிமை அல்ல, தமிழின் மகிமை!

ஆங்கிலத்தில் வேற்றுமை உருபுகள் தனித்து நிற்கும். அங்கே சொல்தொடரியலை மீறினால் பெரிய விபரீதம்தான் உண்டாகும். நல்ல வேளை, லிங்கத்துக்கு ஆங்கிலம் ஓடாது. ஓடினால் முயஅயடய றநவெ வழ துயககயெ என்ற வசனத்தை துயககயெ றநவெ வழ முயஅயடய என்றுதான் சொல்லுவான்!

நாங்கள் லிங்கத்தின் தமிழை எள்ளி நகையாடுவோம். அவன் எங்களை விரட்டி அடிப்பான். நாங்கள் எட்டி நின்று ஏளனம் செய்வோம். அவன் கல்லாலும் மண்ணாங்கட்டியாலும் எறிவான். நாங்கள் ஓடி ஒளிவோம். நாங்கள் வேறு காரணத்துக்காகச் சிரித்தாலும், தன்னையே பகிடி பண்ணிச் சிரிப்பதாக எண்ணி எங்களுடன் சண்டைக்கு வருவான்.

அந்தக் காலத்தில் முல்லைத்தீவு காவலகத்தில் சில்வா என்ற சிங்களவன் வேலை பார்த்து வந்தான். அவன் அடிக்கடி சைக்கிளில் வலம் வருவான். அவனை எல்லாரும்
"சில்வா மாத்தையா" என்றுதான் குறிப்பிடுவார்கள். சிங்களத்தில் "மாத்தையா" என்றால் "ஐயா."

ஒரு தடவை நாங்கள் பள்ளிக்கூடத்து மாமரத்தில் மாங்காய் ஆய்ந்து சப்பியவாறு கடற்கரைக்குப் போய்க் கொண்டிருந்தோம். எங்களை வழிமறித்த சில்வா "அடோ, தாறது ஒண்டு மாங்கா" என்று தனக்குத் தெரிந்த தமிழில் கேட்டான். உடனே லிங்கம் "தாறது ஒண்டு மாங்கா சில்வா மாத்தையா நான்" என்று சொல்லி ஒரு மாங்காயை நீட்டினான். பளார் என்று லிங்கத்தின் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. லிங்கம் "ஐயோ, ஆத்தையரோ" என்று குளறிக்கொண்டு ஓடினான். நாங்கள் கிலிகொண்டு ஆளுக்கொரு திக்கில் ஓடித் தப்பினோம்.

நடந்த விபரீதத்தைப் புரிந்துகொள்வதற்கு நாழி ஆகவில்லை. சில்வாவும் லிங்கமும் தத்தம் பாணியில்தான் தமிழ் பேசியிருக்கிறார்கள். ஆனால் தனது தமிழை லிங்கம் நையாண்டி பண்ணுவதாக சில்வா நினைத்துவிட்டான். மறுபுறம் சில்வா தன்னை வேண்டுமென்றே அடித்ததாக லிங்கம் சொல்லித் திரிந்தான்.

முல்லைத்தீவில் இந்தக் கதையைச் சொல்லிச் சிரிக்காதவர் எவருமே இல்லை. ஆனால் லிங்கமோ சில்வாவோ அதைப் பகிடியாய் எண்ணவில்லை. முல்லைத்தீவில் தன்னை நையாண்டி பண்ணிய ஒரே ஒரு ஆள் லிங்கம்தான் என்பது சில்வாவின் வாதம். தன்மீது கைவைத்த ஒரே ஒரு ஆள் சில்வாதான் என்பது லிங்கத்தின் வாதம். லிங்கத்துக்கு விழுந்த அடி எங்களுக்கோ வெறும் பகிடி. அவனுக்கோ அது ஒரு வடு. "அடித்து நொருக்காவிட்டால் லிங்கம் நான் இல்லை சில்வாவை ஒரு பொலிசுக்காரனாய் வந்து நான்" என்று சூளுரைத்தான் லிங்கம்.

இதற்கிடையே மேல் படிப்புகாக நாங்கள் வெவ்வேறு கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டோம். சிலர் திருகோணமலைக்கும், சிலர் யாழ்ப்பாணத்துக்கும், சிலர் மட்டக்களப்புக்கும், சிலர் கொழும்புக்கும் அனுப்பப்பட்டோம். லிங்கம் தமிழில் சித்தி அடையாதபடியால், மேல்படிப்புக்கு அனுப்பப்படவில்லை. நான் மட்டக்களப்பில் படித்துக் கொண்டிருந்தேன். லிங்கத்தை என்னால் மறக்க முடியவில்லை. அடிக்கடி அவனை நினைத்து வாய்விட்டுச் சிரித்தேன்.

வழக்கம்போல் ஒரு பண்டிகைக்காக நான் முல்லைத்தீவுக்குத் திரும்பியபொழுது லிங்கத்தைச் சந்திக்க முடியவில்லை. அவன் வன்னிக்குப் போய் போராளிகளுடன் சேர்ந்துவிட்டான் என்று சொன்னார்கள். எனக்கோ லிங்கம் இல்லாத முல்லைத்தீவும் ஒரு முல்லைத்தீவோ என்று சலிப்புத் தோன்றியது. எனது வாழ்க்கையில் முதல் தடவையாக எந்தவித சிரிப்பும் இல்லாமல் லிங்கத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தேன். அவன் பேசிய தமிழைத் தவிர அவனைப் பற்றி வேறெதுவும் தெரியாதவனாக, போராட்டத்தில் ஈடுபடும் அளவுக்கு அவன் ஓர்மம் கொண்டவன் என்பதைக்

கண்டுகொள்ளாத பேதையாக இருந்துவிட்டேனே என்று என்னை நானே கடிந்து கொண்டேன். போராளிகள் முல்லைத்தீவைக் கைப்பற்றியபோது நான் மட்டக்களப்பில்தான் இருந்தேன். அதனை அடுத்து லிங்கம் ஊர் திரும்பிய சேதி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

அடுத்து பண்டிகைக்கு நான் மிகுந்த வேட்கையுடன் முல்லைத்தீவுக்குப் புறப்பட்டேன். முல்லைத்தீவுப் பேருந்து நிலையத்தில் இறங்கி வீட்டை நோக்கி வீறுநடை போட்டேன். கடல்காற்று என்னைத் தள்ளிக் கொடுத்தது. சீருடை அணிந்த போராளிகளின் வாகனங்கள் குறுக்கு மறுக்காய் விரைந்து கொண்டிருந்தன. ஆங்காங்கே அவர்களுடைய கொடிகளும் பதாகைகளும் படங்களும் காணப்பட்டன. தேவாலயத் தெருவில் கால் வைத்தபோது அதன் பெயர் ஆலயத் தெரு என்று குறுக்கப்பட்டிருந்ததை அவதானித்தேன். முல்லர் வீதியை நெருங்கிபோது அது முல்லை வீதி என்று மாற்றப்பட்டிருப்பதைக் கண்டேன். முல்லைத்தீவின் மூலைமுடுக்கெல்லாம் உருமாறியிருக்கும் உன்று உள்மனம் சொல்லியது.

முல்லைவீதியும் ஆலயத் தெருவும் குறுக்கிடும் சந்தியில் சீருடையும் தொப்பியும் அணிந்த காவலர் ஒருவர் ஒரு பீப்பாயில் ஏறிநின்று பாதசாரிகளுக்கும் வாகனங்களுக்கும் திசைகாட்டிக் கொண்டிருந்தார். காவலர் திசைகாட்டுவது முல்லைத்தீவில் இதுவே முதல் தடவை. ஆதலால் அவர் திசைகாட்டும் சிறப்பை ஆசைதீரப் பார்த்து மகிழ்ந்தேன். நான் ஆலயத் தெருவிலிருந்து முல்லை வீதிக்குத் தாவியபோது, "நில்லடா, வேலாயுதம், நேரம் கொஞ்சம்..." என்று அந்தக் காவலர் கூவினார். வசனத்தில் புரிந்தது லிங்கம்தான் என்று. சடாரென்று நின்று திரும்பிப் பார்த்தேன். தொப்பியும் சீருடையும் என்னை ஏய்த்துவிட்டன! என்னைப் பீடித்த வியப்பும் சிரிப்பும் அகல நாழி ஆகிவிட்டது. லிங்கத்தின் வாய்ப்பேச்சில் மெய்மறந்த காலம் போய் அவனுடைய கையசைப்பில் குதூகலிக்கும் காலம் மலர்ந்ததோ என்று வியந்தேன்.

அப்புறம்தான் அவன் செய்யும் கடமையைச் சரிவர அவதானித்தேன். லிங்கம் இடைக்கிடை என்னைப் பார்த்து முறுவலித்தாலும், தனது கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பதாகவே புலப்பட்டது. ஆனாலும் எனது கண்களுக்கு ஆட்களும் வாகனங்களும் ஏதோ ஒரு குழப்பத்தில் நகர்வது போலவே தென்பட்டது. நான் கண் வெட்டாமல் லிங்கத்தை அவதானித்தேன். ஆட்களும் வாகனங்களும் குழம்பிய காரணம் புரிந்தது. ஆலயத் தெருவில் ஏற்கெனவே விரைந்துகொண்டிருந்த வாகனங்களைத் தடுத்து நிறுத்தாமலேயே முல்லை வீதியில் காத்திருக்கும் வாகனங்களை முன்னேறும்படி கைகாட்டினான். அதன் பிறகுதான் ஆலயத் தெருவில் அசையும் வாகனங்களைத் தடுத்து நிறுத்தினான்! லிங்கத்தின் கையசைப்பு அவன் வாய்ப்பேச்சுக்கு நிகராய் இருந்தது கண்டு மெய்சிலிர்த்தேன். என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. குபீரென்று சிரித்துவிட்டேன். லிங்கம் என்னை முறைத்துப் பார்த்து, "பொத்தடா, வேலாயுதம், வாயை" என்று கத்தினான். அதைக் கேட்டு நான் சிரித்த சிரிப்பில் தடுமாறிய வாகனங்கள் இன்னும் அதிகம் என்றே சொல்ல வேண்டும்.

அப்புறம் பீப்பாயை விட்டிறங்கிய லிங்கம் என்னை முல்லைத்தீவு காவலகத்துக்குக் கூட்டிச் சென்றான். நாங்கள் நடந்து கொண்டிருந்தபோது எங்களுக்குப் பின்புறமாக ஒரு காவலக ஜீப்பு வந்து நின்றது. லிங்கம் என்னையும் அதில் ஏறச் சொன்னான்.

முல்லைத்தீவு காவலகத்தில் லிங்கமும் வேறு தனிக்கட்டைகளும் தங்கும் மாடத்துக்கு அவன் என்னைக் கூட்டிக்கொண்டு போனான். தனது கட்டிலில் என்னை இருக்கச் சொல்லிவிட்டு, ஒரு பணியாளைக் கூப்பிட்டு, "கொண்டுவா வெட்டி இளநீர் இரண்டு!" என்று சொன்னான்! நான் அட்டகாசமாய்ச் சிரித்தேன். பணியாள் சிரிப்பை அடக்கிக்கொண்டு போய்விட்டான். லிங்கம் என்னைப் பார்த்து முறைக்க முறைக்க நான் தொடர்ந்து சிரித்துக் கொண்டிருந்தேன். வழக்கமான விசாரிப்புகளுக்குப் பிறகு லிங்கம் தெரிவித்த சங்கதி என்னைத் துணுக்குற வைத்தது:

"கொடுத்துவிட்டேன் சில்வாவுக்கு முதலும் வட்டியுமாய்!" என்றான் லிங்கம்.

"ஐயோ, பாவம். அப்படிச் செய்திருக்கக் கூடாது" என்றேன் நான். அதை அவன் காதில் விழுத்தவில்லை.

"ஒரு காலம் சில்வாவுக்கு, ஒரு காலம் லிங்கத்துக்கு" என்றான்!

"லிங்கம், சில்வா உனக்கு வேண்டுமேன்றே அடிக்கவில்லை. அவனை நீ என்ன செய்தாய்?" என்று கேட்டேன்.

"அறைந்தான் தெரியுந்தானே என்னைக் கையாலே அவன்?"

"தெரியும்."

"உதைத்தேன் அவனைக் காலாலே நான்!"

"கொடுமை! கொடுமை!"

லிங்கம் என்னை முறைத்தான். இப்பொழுது எனக்குச் சிரிப்பு வரவில்லை. எரிச்சல் எரிச்சலாய் வந்தது. "பாவி, என்ன காரியம் செய்தாய்?" என்று கத்தினேன். லிங்கம் திகைத்துப் போனான். அப்பால் நடமாடிய காவலர்கள் எங்களை ஓரக் கண்ணால் பார்த்தார்கள். எனது வாழ்க்கையில் முதல் தடவையாக லிங்கத்தின்மீது எனக்கு வெறுப்பு ஏற்பட்டது. அவனிடம் சொல்லிக் கொள்ளாமலேயே புறப்பட்டுவிட்டேன். லிங்கம் எனது கையைப் பிடித்து இழுத்தான். "சில்வா என்ன ஆனான்?" என்று கேட்டேன். "இருக்கிறான் சிறையிலே வன்னியிலே. கதைக்கிறான் நல்ல தமிழ் தனிமையிலே" என்றான். இந்த லிங்கத்தை எண்ணிச் சிரிப்பதா? அழுவதா?

16ஆவது ஆண்டில் கால் பதிக்கும்

# AIR LINK
## Travel Ltd.

AIR CANADA

CATHAY PACIFIC

Emirates

GULF AIR

KLM

KOREAN AIR

KUWAIT AIRWAYS

QATAR AIRWAYS القطرية

Lufthansa

SINGAPORE AIRLINES

SriLankan Airlines

الاتحاد ETIHAD AIRWAYS

**எங்கள் அனுபவம் உங்கள் பிரயாணத்தை இலகுவாக்கிறது**

இன்னும் பல விமான நிறுவனங்களுடாக....

மிகவும் குறைந்த கட்டணத்துடனும் சிறந்த சேவைகளுடனும்
உங்கள் பயணத்தேவைகளை நிறைவுடன்
செய்து தரக்கூடிய ஒரே ஸ்தாபனம்

# Tel: 416-292-6200

**Fax: 416-292-7478**

Email:sales@airlinktravel.ca
www.airlinktravel.ca

5200 Finch Ave. E, Suite# 115, Toronto, ON, M1S 4Z4

## இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம்

பூப்புனித நீராட்டு விழா,
பரத நாட்டிய அரங்கேற்றம்,
பிறந்த தின விழாவிற்கான
தலை, முக அலங்காரங்கள்
சடை நாகம், மணமாலைகள், ஆண் நாள் மாலை
என்பவற்றை Veil (Gold & White) பெற்றுக்கொள்ளலாம்.

எங்களிடம் மணப்பெண்ணிற்கான
பூச்செண்டு, (Bouquet), பூக் கூடைகள்
(Flower Girl's Baskets). அரக்கு
தலைநகை செற் என்பவற்றை
வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்



**BRIDAL DRESSING & HAIR STYLING**

Tel: 416.335.6553
Cel: 647.292.6553
Thaya (Mrs.Moorthy)
(Mc Cowan & Finch)

## Children's Education Trust of Canada

Offered to the public by
CHILDREN'S EDUCATION FUNDS INC.

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா



| Depository | Trustee | Investment Advisors |
|---|---|---|
| Scotia Bank | The Bank Of Nova Scotia Trust Company | Scotia McLeod<br>T.D. Waterhouse<br>CIBC Wood Gundy<br>Flora Capital |

For More Information
Please Contact : **S.V. Moorthy**

Res : 416-335-6553
Cell : 416-508-0370
Fax: 416-335-7807
Email: SVMoorthy23@yahoo.com

AIR MILES Travel and More

# Buy & Sell Residential and Commercial Properties



**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**
**நிகரில்லாத கலையின் ஊற்று**
**குருகுலபீடம் வாழ்க வாழ்க வாழ்கவே**


**Raj. A. Rasaratnam** B.Com.
*Sales Representative*

**416-726-8055**
**416-299-8570**

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/ GTA Realty Inc.**
Real Estate Brokerage*
*Independently own and operated

**1711 McCowan Rd., Suite #206,**
**Scarborough, ON. M1S 3Y3**

**Bus: (416) 321-6969**
**Fax: (416) 321-6963**






**Mortgage arrangement,**
**Business incorporation**
**and corporate tax preparation**

# 416-726-8055

# யா / நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஒரு நோக்கு . . .



- த.சிவபாலு B.Ed. Hons, M.A.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து

என்பது வள்ளுவர் வாக்கு. கல்வி சென்ற இடமெல்லாம் சிறப்பைத் தரும் கற்பக விருட்சம். அந்த விருட்சத்தை ஒவ்வொரு தனி மனிதனிடமும் வளர்த்துவிடுவது அவன் கற்ற கல்விக்கூடம். கல்வியைப் பரப்பி புத்தொளி புகவைத்து ஒளிபரப்பி வருகின்றன பாடசாலைகள். ஆரம்ப காலத்தில் ஈழத்தில் திண்ணைப் பாடசாலைகள்தான் கல்வியைப் போதித்து வந்துள்ளன. சமயக் கல்வியை கோயில்கள் போதித்தன. இந்த நிலையில் எல்லோருக்கும் கல்வி கிடைக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனால் ஐரொப்பியரின் வருகையினால் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது என்பது வரலாறு கூறும் உண்மை. சமயம் பரப்புவதற்காக ஆலயங்களையும் அதனோடு ஒட்டிப் பாடசாலைகளையும் நிறிவினர் ஐரொப்பியர். போர்த்துக்கேயர், அதன்பின்னர் வந்து ஒல்லாந்தர், இவர்களின் பின்னர் வந்து நாடு முழவதனையும் ஒரணியின் கீழ்க் கொண்டுவந்து ஒரே தன்மைத்தான ஆட்சியை நிலை நிறுத்தியவர்கள் ஆங்கிலேயர். இவர்கள் இலங்கையின் வடபாலமைந்த யாழ் தீபகற்றத்தில் உள்ள மக்களின் கல்வித்திறன், தங்களோடு ஒத்துழைக்கும் தந்மை, நாகரிக வளர்ச்சி என்பனவற்றைக் கருத்தில் கொண்டு கல்வியை இலகுவாகப் புகட்ட முடியும் என்ற நோக்கத்தோடு அவர்களின் கவனம் வடபால் ஈர்க்கப்பட்டது. இலங்கைத் தீவடங்கிலும் ஏற்படுத்தப்பட்ட பாடசாலகளில் அமெரிக்கன் மிசன், கத்தோலிக்கப் பாடசாலைகள் போன்றவற்றின் தொகை யாழ் குடாநாட்டிலேயே அதிகளவில் காணப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள, வடமராட்சிப் பிரதேசத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன், காட்லிக் கல்லூரி போன்ற பிரபலமான பாடசாலைகள் ஐரொப்பியரால் நிறுவப்பட விக்னேஸ்வரக்கல்லூரி, ஞானசாரியார்க் கல்லூரி போன்ற கல்லூரிகள் ஊர்மக்களின் ஆதரவோடு இந்து சபையால் ஆரம்பிக்கப்டடன. இந்த அடிப்படையில் நோக்கும் போது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் சமய அடிப்படையில் அன்றி கல்வியை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் நோக்குடன் 1921ம் ஆண்டு ஒரு மாதிரிப் (Model School) பாடசாலையாக ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும் நோக்குடன் அக்கால கட்டத்தில் அரசாங்க ஆதரவோடு ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் ஆட்சியியல் வரலாற்றில் இலங்கையரின் கை ஓங்கத்தொடங்கியதன் பயனாக 1940 களில் இலங்கை அரசிடம் காணப்பட்ட மேலதிக நிதியினைப் பயன்படுத்திப் நாடெங்கும் பல பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டன அல்லது அமைக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் கல்வி அமைச்சுக்குப் பொறுப்பாக விருந்த சி.டபிள்யு, டபிள்யு, கன்னங்கரா அவர்களின் திட்டத்தின் படி அனைத்துப் பிரதேசங்களிலும் அனைத்து வளங்களும் கொண்ட மத்திய மகாவித்தியாலங்கள் அமைக்கப்படவேண்டும் என்னும் நோக்குடன் வடமராட்சிப் பகுதியில் நெல்லியடியில் அமைக்கப்பட்டதே எங்கள் “நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்” ஆகும். 1946ம் ஆண்டு முன்னைய கட்டிடத் தொகுதிக்கு விஞ்ஞான கூடத்தோடு கூடிய இரண்டு மாடிகளைக் கொண்ட 14 வகுப்பறைகள், அலவலகம், கழஞ்சியம், நூலகம் என்பன உட்பட மிகப் பிரமாண்டமான ஒர கட்டிடத் தொகுதியும், ஆண்களுக்குத் தனியானதும் பெண்களுக்குத் தனியானதுமான, தங்கியிருந்து கல்விமேற்கொள்ளத் தக்க விடுதிகள் இரண்டும் விளையாட்டு மைதானமும், மாட்டுப் பண்ணையும் கொண்டதாக இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டது. இதன் பயனாக ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் புலமைப் பரிசில் பெற்று வந்து தங்கியிருந்து கற்கும் மாணவர்களைக் கொண்ட ஒரு சிறந்த பாடசாலையாக இது ஆக்கப்பட்டது. இதனால் பாடசாலையின் கல்வி விருத்தி மிகத் துரிதமாக வளர்ச்சி கண்ட அதேவேளை ஆசிரியர்களின் தொகையும் மாணவர்களின் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது. இப்பாடசாலை ஆறாம் வகுப்புத் தொடக்கம் 12ம் வகுப்பு வரையான கலை, விஞ்ஞான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாகத் தரமுயர்ந்து மிகப் பிரபலமானதாக விளங்கியது.

இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் வளர்சி பெற்று அக்கட்சியின் உறுப்பினர்கள் அதிகளவில் பாராளுமன்றம் சென்றபோதும், தமிழர் பிரதேசங்களில் இருந்து யாரும் அக்கட்சிகளின் பிரதிநிதிகளாகச் செல்லாத நிலையை முறியடித்து பாராளுமன்றம் சென்ற பெருமைக்கு உரியவர் பொன்.கந்தையா அவர்கள் இப்பாடசாலையின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வேளை இப்பாடசாலையி பொன். கந்தையா கட்டிடத் தொகுதி எனப் பெயரிடப்பட்ட மாடிக் கட்டிடம் கட்டப்பட்டது.

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு இலவச விடுதி வசதிகள் வழங்கப்பட்டன. இதற்கான செலவின் ஒரு பகுதியை கல்வித்திணைக்களம் பொறுப்பேற்றுக் கொண்டது. நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வந்து சேர்ந்த பெருந்தொகையான மாணவர்கள் விடுதிகளிலும், பாடசாலைச் சூழலிலுள்ள தனியார் வீடுகளிலும் தங்கித் தமது கல்வியைப் பெற்றுக்கொண்டனர். குறிப்பாக வசதி குறைந்த குடும்பச் சூழலிலிருந்து வந்த மாணவர்களின் அறிவுப் பசியைப் போக்கி அவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக்கான அடித்தளத்தினை வழங்குவதில் எமது பாடசாலை பெரும்பங்காற்றியது. அவ்வாறு கல்வி கற்ற பலர் கல்விமான்களாகவும், துறைசார் வல்லுநர்களாகவும், அரச, அரச சார்பற்ற துறைகளில் உயர் பதவிகள் வகிப்பவர்களாகவும் விளங்கி வருகின்றனர்.

1980ம் ஆண்டு வரை வீறுநடைபயின்ற எமது வித்தியாலயம் இக்காலங்களில் நாட்டிலேற்பட்ட அரசியல் குழப்ப நிலைகளாலும் முகாமைத்துவக் குறைபாடுகளாலும் மந்தமான இயங்குநிலையை அடைந்தது. நாட்டில் நிலவிய குழப்ப நிலைமைகளினால் தூர இடங்களில் இருந்து வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கை பெரு வீழ்ச்சியடைந்தது. தொடர்ந்து 1987ம் ஆண்டில் வடமராட்சிப் பிரதேசமெங்கும் விஸ்வரூபமெடுத்த கடும் யுத்தச் சூழலில் சிக்கி எமது வித்தியாலயத்தின் அனைத்துப் பௌதிக வளங்களும் சிதைவடைந்துபோயின. அலுவலகத் தொகுதி, உயர்தர விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், வகுப்பறைகள் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டிருந்ததும் காண்போர் கருத்தைக கவரும் வகையில் நுழை வாயிலுக்கு அண்மையில் கம்பீரமாக நிமிர்ந்து நின்றதுமான மாடிக்கட்டிடம் முற்றாக தகர்ந்து அழிந்து போனது. பல ஆண்டுகள் கடந்த நிலையிலும் அதன் ஒரு பகுதிச் சிதைவுகள் இன்றுங்கூட ஒரு வகைக் கம்பீரத்துடன் தனது பழைய நிலைக்குச் சாட்சியாக நிற்கிறது. யாழ் மாவட்டத்தில் உயர்தர வகுப்புக்களில் விவசாய விஞ்ஞான பாடத்தினைக் கொண்டுள்ள இரண்டு பாடசாலைகளில் எமது நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் ஒன்று என்பது அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது.

இவ்வாறான பௌதிகவளரீதியான அழிவுகளுக்குட்பட்டுங்கூட தனது கல்விச் செயற்பாடுகளில் தொய்வு ஏற்படாத வகையில் மிகுந்த பிரயத்தனத்துடன் தனது தகைமையைத் தக்க வைத்துக் கொண்டிருந்தவேளையில் மற்றுமொரு பேரழிவு வித்தியாலயத்தின் நிர்வாக, ஆளணி வளத்தின் மீது நிகழ்ந்து அதன் கட்டுமானத்தையே ஆட்டங்காணச் செய்தது. சமூகப் பொறுப்புணர்வு, தூர நோக்குச் சிந்தனை என்பன சிறிதளவுமற்ற தன்னலமிக்க ஒருசில தனி மனிதர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் 1991ம் ஆண்டில் எமது வித்தியாலயத்தின் பெண்கள் பகுதி தனியாகப் பிரிந்து சென்றது. இப் பிளவின் விளைவுகளை எமது வித்தியாலயம் இன்றும் அனுபவித்தக் கொண்டிருக்கின்றது. 2000க்கு மேற்பட்ட மாணவர் தொகையுடன் பெரும் ஆளணி வளத்துடன் ஒரு தேசியப் பாடசாலையாக எப்போதோ தரமுயர்த்தப் பட்டு இருக்கவேண்டிய எமது வித்தியாலயம் இன்று அவ்வாய்ப்பினைப் பெறுவதற்கு பெரும் பிரயத்தனப்படவேண்டிய நிலையிலுள்ளது. யாழ் மாவட்டத்தில் உயர்தர வகுப்புக்கு விவசாய விஞ்ஞானத்தை ஒரு பாடமாக மேற்கொள்ளத்தக்க வாய்ப்பினைக் கொண்டுள்ள பாடசாலைகள் இரண்டே இரண்டுதான். ஒன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். மற்றது வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகும்.

1995ம் ஆண்டின் பின்னர் மீண்டும் பௌதிக, ஆளணி வளத் துறைகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. நாட்டில் அமைதிச் சூழல் ஏற்படத் தொடங்கியபின் வித்தியாலயத்தில் ஏற்பட்ட நிர்வாக முகாமைத்துவ மாற்றங்களும் அபிவிருத்திக்குச் சாதகமான புறச் சூழ்நிலைகளும் மீண்டும் தொடங்கும் மிடுக்காக சகல துறைகளிலும் வித்தியாலயத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏறுமுகம் காட்டி வருகின்றன. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பாரிய உதவிகளோடு சிறப்பான நூலகம், ஆய்வுகூடங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதி, கட்புல செவிப்புல அறை, தகவல்-தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம், ஆண், பெண் மாணவர் விடுதிகள் என்பன கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து பயன்பாட்டுக்குத் தயாரான நிலையில் உள்ளன.

பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேறுகள் திருப்திகரமான நிலையிலுள்ளன. மொழித்திறன் போட்டிகள், கணித விஞ்ஞானப் போட்டிகள், பொது அறிவுப் போட்டிகள் போன்றவற்றிலும் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப்பெற்று வருகின்றனர். விளையாட்டுத்துறையில் தடகள வீர வீராங்கனைகளும், கால்பந்தாட்ட அணிகளும், சதுரங்க அணிகளும் வலய, மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளில் பங்குபற்றும் தகுதியுடன் விளங்குகின்றன. இவற்றுக்கு அதிபர், ஆசிரியர்களின் அயராத உழைப்பும் பெற்றோர், மாணவர்களின் ஆர்வமும் பெரும் பங்களிப்புச் செய்கின்றன.

வித்தியாலயத்தின் பல தரப்பட்ட தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு திணைக்கள அதிகாரிகளும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும், பெற்றோரும் நலன் விரும்பிகளும், பழைய மாணவர் சங்கத்தினரும், பழைய மாணவர்களும் தம்மாலியன்ற ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர். எல்லோரும் ஓர்முகப்பட்டுச் செயற்படுவோமாயின் எமது வித்தியாலயம் தனது முன்னைய கீர்த்தி நாமத்தைப் பெறும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதற்கு வெளிநாடுகளில உள்ள பழைய மாணவர்களும், நலன்விரும்பிகளும் முனைப்போடு செயற்படச் சங்கற்பம் பூண்டுள்ளமை கட்டியம் கூறிநிற்கின்றது.

அதிபர்கள் வரிசையில்:

**Present Principal**
Mr.S.Sethurajah

**Past Principals**
01. Mr.V.Sithamparappillai.
02. Mr.T.Sithamparappillai.
03. Mr.S.Kasinathar.
04. Mr.S.Thuraiyappa.
05. Mr.V.Sinnaiya.
06. Mr.R.Rasainar.
07. Mr.S.Thuraiyappa.
08. Dr.S.Sivaprakasam.
09. Mr.A.T.Sabaratnam.
10. Mr.Ratnasabapathy.
11. Mr.K.Sivasithamparam.
12. Mr.V.K.Nallaiya.
13. Mr.K.Kunaratnam.
14. Mr.S.Roykanthraj.
15. Mr.V.Arulanantham.
16. Mr.S.Sitampalm.
17. Mr. S.Sethurajah

# மார்பு அடைப்பு (Heart attack) தடுப்பது எப்படி?

*வைத்திய கலாநிதி க. ஜெயலிங்கம் MD,FRCPC, ABIM (இருதய, உள்ளக மருத்துவ நிபுணர்)*

இருதயம் என்பது ஒரு தனித்துவமான தசைகளினால் ஆக்கப்பட்ட ஒரு மிக முக்கியமான உறுப்பு. இது எங்கள் நெஞ்சறைக்குள் இரு நுரையீரல்களுக்கு இடையில் அமைந்துள்ளது. இது கருவில் இருக்கும் குழந்தைப் பருவத்தில் துடிக்கத் தொடங்கி, இது நிற்கும்போது மனிதனுடைய வாழ்வு முடிவடைகின்றது. சில மனிதர்களில் இரவு பகலாக நூறு வருடங்களுக்குமேல் தொடர்ச்சியாக வேலை செய்கின்றது. இதன் நிறை சராசரியாக 350 கிராம் அளவிருக்கும். இது ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட ஒரு இலட்சம் (100000) தரம் அடிக்கின்றது.

மார்படைப்பு என்பது இருதய தசைகளுக்கு குருதியை வழங்கும் இரத்தக் குழாய்களுக்கு (Coronary, Artery) அடைப்பு ஏற்படுவதினால் ஏற்படுகின்றது. இந்த இரத்தக் குழாய்களின் அடைப்பின் வீதாசாரத்தைப் பொறுத்து மாரடைப்பின் அறிகுறிகள் தென்படுகின்றன. இருதயத்திற்கு மூன்று பிரதான நாடிகள் குருதியை வழங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் ஒன்று அடைபட்டால்கூட மார்படைப்பு வந்து மனிதர் இறக்கவும் நேரிடும். ஒவ்வொரு மனிதருக்கும் இந்த நாடிகள் வயது போகப்போக, மெதுவாக அடைபடுகின்றன. இந்த அடைப்பு விரைவாக ஏற்படாமல் தடுப்பதிற்றான் ஒவ்வொரு மனிதருடைய பொறுப்பும் இருக்கின்றது.



**இந்த இருதய நாடிகள் விரைவாக அடைபடுவதற்குப் பல காரணிகள் உள. அவையாவன:**

1. *நீரிழிவு நோய் (Diabites)*
2. *இரத்த அழுத்தம் (High Blood Pressure)*
3. *கூடாத கொழுப்பு (Cholesterol)*
4. *அளவுக்குக் கூடிய நிறை (Obesity)*
5. *புகைபிடித்தல் (Smoking)*
6. *பரம்பரை வியாதி (Family History)*
7. *வயது 55க்கு மேல் இருத்தல் (Age)*
8. *உடற்பயிற்சி இல்லாமை (Lack of Exercise)*
9. *மனவழுத்தம் கூடியிருந்தல் (Stress)*

மார்பு அடைப்பு மெதுவாகவோ அல்லது திடீரெனவோ வரக்கூடும். பல்வேறு விதமான அறிகுறிகளைக் காட்டக்கூடும். இருதய தசைகளுக்கு இரத்தோட்டம் கூட்டும்போது ஏற்படக்கூடும். நெஞ்சு நோவை'Angina' என்று சொல்லக் கூடும்.


சிலவேளை இரத்தோட்டம் முற்றாகத் தடைப்படும்போது இருதய தசையின் ஒருபகுதி செயலிழப்பதினால் வருவதை மார்படைப்பு (Heart attack) என்ற கூறப்படும். சில மனிதர்கள் எந்தவித அறிகுறியும் இல்லாமல் நித்திரையில் மரணம் அடைவதும் உண்டு.

**மார்பு அடைப்பு வருவதற்கு முன் பல அறிகுறிகள் தென்படலாம். அவையாவன:**

1. *உடற்பயிற்சி அல்லது கடின வேலை செய்யும்போது நெஞ்சில் அழுத்தம் (Pain) ஏற்படுவது.*
2. *சில வேளைகளில் நெஞ்சில் நோ இல்லாமல் உடலின் வேறு இடங்களில் நோ (Pain) ஏற்படலாம், அதில் முக்கியமாக கழுத்து, தாடை, இடது தோழ்மூட்டு, இடது மேற்கை, முழங்கை அல்லது நெஞ்சின் பின்பக்கத்தில் நோ ஏற்படலாம்.*
3. *இருதய அடைப்புக்குரிய அறிகுறி ((Pain) மட்டும் அல்லாமல் வேறுவிதமாகவும் ஏற்படலாம், நஞ்சுப்பிரிவு, நெஞ்சு பாரமாக இருகத்தல் மூச்சு எடுப்பதில் சிரமானக இருத்தல் போன்றவையாகும்.*
4. *சிலர் நெஞ்சுடன் சம்பந்தமில்லாமல் வித்தியாசமான அறிகுறிகளும் தென்படலாம். உதாரணமாக உணவு, சமிபாடடையாமல் இருத்தல். (Indigestion), சத்தியெடுத்தல் (Vomiting), ஓய்வு நிலையில் இருக்கும்பொழுது வியர்வை வருதல் (Sweat ing), காரணமின்றி மன இடைஞ்சல் ஏற்படுபவை போன்றவையாகும்.*

**இருதய நோய் வரமுன்பதுதான் மிக முக்கியமானதாகும்:**

1. *ஒவ்வொரு மனிதனும் தங்கள் உயரத்திற்கேற்ப தங்களுடைய உடல் நிறையைக் குறைத்து வைத்திருக்கவேண்டும்*
2. *சுகாதாரமான உணவு (Healhty Food) வயதிற்கேற்ப உட்கொள்ளவேண்டும்.*
3. *புகைபிடிப்பவர்கள் புகைபிடித்தலை நிறுத்தவேண்டும்*
4. *நீரிழிவு நோய் உள்ளவர்கள் குருதி வெல்லத்தை (Sugar) குறைக்கவேண்டும்.*
5. *இரத்த அழுத்தம் உள்ளவர்கள் மாத்திரை (ஆநனைஉைநெ) எடுத்துக் கட்டுப்படுத்த வேண்டும்.*
6. *உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.*
7. *மது பானம் அளவாக உட்கொள்ளவேண்டும்.*
8. *மன அழுத்தம் கூடாமல் பார்க்கவேண்டும்*
9. *ஒவ்வொரு வருடமும் குடும்ப வைத்தியரைச் சந்தித்து வருடாந்த உடல் பரிசோதனை செய்யவேண்டும்.*
10. *மார்படைப்புக்கு உரிய அறிகுறிகள் இருந்தால் குடும்ப வைத்தியரின் மூலம் வைத்திய நிபுணரைப் (Specialist) பார்த்து அதற்குரிய பிரத்தியேக பரிசோதனைகள் செய்தல் வேண்டும்.*
11. *மார்படைப்புக்குரிய அறிகுறிகள் சடுதியாக ஏற்படுமானால், உடனடியாக 9-1-1ஐ அழைத்து வைத்தியசாலையில் அவசர (Emercngy) பிரிவுக்குச் செல்லவேண்டும்.*



**இறுதியாக, உங்கள் இருதயம் நலமானதாக இருப்பதற்கு நீங்கள்தான் மிக முக்கியமான வைத்தியராகப் பணியாற்றவேண்டும்.**

# M&M Auto Sales




Mervin Antonipillai

4066 Sheppard Ave. East
Scarborough, Ontario
M1S 1S8

Phone: 416-335-0040
Cell: 416-676-1528
Fax: 416-335-0041




Computer Class Room




Gym Room

# KNN FINANCIAL CORPORATION

2648 Victoria Pk Ave. Toronto ON M2J 4A6
Telephone 416-494-3334 Fax 416-494-2224
Knntax@aircomplus.com

Income Tax Planning / Refund within 24 hrs / E-File
Personal, Rental business, Small business and Corporation Tax returns
Investment Planning RRSP, RESP, and non registered investments
Loan available with Prime minus one Low interest rate mortgages with all banks
First, Second or refinancing Pay off all your debts and keep one single payment.
Insurance Planning-with Major companies such as RBC, Canada Life, ManuLife, AXA, AIG, and More Critical Illness protection plan- Pay monthly premiums and get all Your Money back. Life, disability and Business over expense insurance
Mortgage insurance and more



# காலத்தை வெல்வோம்

ஆறுமுகம் பாஸ்கரதாஸ்
இளைப்பாறிய இந்து கலாச்சார அமைச்சுப் பணிப்பாளர்

கல்லூரிக் காலமாயினும்
பால பாடம் படித்த
பள்ளிக் காலமாயினும்
அக்காலமெலாம்
வெறுமனே கடந்தவை அல்ல!
மனதில் என்றும் நீங்காத
தடம் பதித்தவை,
மறந்திடமுடியாத் தேர்
வடம் பிடித்தவை.

வாழ்வினிலே ஓர்முறை வரும்
வசந்த காலம் என்பார்கள்
இளமையை - அது
பள்ளிக்கும் பொருந்தும், கற்ற
கல்லூரிக்கும் பொருந்தும்

கல்லூரி நாட்களை
அசை போட வைக்கும்
"ஆட்டோகிராப்"என்போமா?
பழமையைப் புதுப்பிக்க
விழையும் "பள்ளிக்கூடம்"
என்போமா?
"சொல்ல மறந்த கதை"களெல்லாம்
மென்று சொரியும்
மென்பொருள்கள் என்போமா?

படித்து "கிழித்த"
பருவங்கள் பற்றிப்
பேசுவார் சிலர்.
பருவக் கவர்ச்சியில்
இல்ககியம் படைத்து
புதறிய பெருமையெலாம்
புகலுவார் சிலர்.

ஆயின்
அன்பும் அறிவம்
அகத்தின் தெளிவும் தந்த
ஆசு இல்லா
ஆசிரியப் பெருந்தகையோர்
புற்றி எண்ணி எண்ணி
மகிழ்பவரோ பலப்பலர்.

காலத்தை வென்று
நீடித்து நிற்கும்
நட்மபுகள் பற்றிப்
பெருமிதங் கொள்வோரும்
மிகப் பலரே.

எண்ணங்கள் பலவாக
நிறைந்த போதும்
நட்புகள் பற்றிப்
பெருமிதம் கொள்வோரும்
மிகப் பலரே.

எண்ணங்கள் பலவாக
நிறைந்த போதும்
கற்பனைகள் சிறகடித்துப்
பறந்த போதும்,
காணும் இதுவெல்லாம்! கனாக்
காணும் காலம் புதுவெள்ளம்
காணட்டும் என்றே
கருத்தொருமித்தனர் இன்று
கல்லூரித் தோழரெலாம்
ஒன்றிணைக்கும் மன்றத்தார்.

சங்கம் அமைத்துச்
சாதிக்க விழையும்
செயல்வீரர்க்குத் தோள்கொடுப்போம்
போதித்துநின்ற பள்ளிக்குப்
பொலிவூட்டும் பணிகளிலே.
வேர்கொண்டு நின்றார்க்குச்
சீர்செய்வதெங்கள் கடப்
பாடு என்போம்.

அதுமட்டமல்ல
அன்புத் தோழர்களே!
இன்னுமொன்றுளது
ஒரு செய்தி நாம்
உய்யும் வகை காட்டும்
அறிவோர் தரும் செய்தி

புலம்பெயர்ந்து வாழ்கின்ற
அன்பரெலாம் தம்
மனங் கொள்ளச் சூழ்கின்ற
தேவை உண்டு
அது தாய்த் தமிழென்னும்
இனிய கற்கண்டு.

புலம் பெயர்ந்து மட்டுமா
வாழ்கின்றாய் என்றன்
தமிழ் மகனே உன்றன்
மொழி பெயர்ந்து
வாழ்கிறாயே தகுமோ என்று

வடிக்கின்றாள் கண்ணீர்! நெஞ்சம்
துடிக்கின்றாள் தமிழன்னை!
மேற்குலகின் நலமெல்லாம்
பெற்றதுவும்,
பொருட்சிறப்பில், தொழிற்பாட்டில்
கல்விலே சிறப்புற்றதுவும்
பெருமகிழ்ச்சி!
தடையில்லை இதற்கெல்லாம்
ஆனால்-
தடை போட்டார் யார் இன்பத்
தமிழ் பேச -அதுவும்
தாம் வாழும் வீட்டினிலே
தமிழினக் கூட்டினிலே

ஆங்கிலமாயினும் அதுவேறு
மொழிகளே ஆயினும் இருக்கட்டும்மே!
அவையெல்லாம் கல்வி
அறிவுக்கும், தேடு தொழில்
செறிவுக்கும் ஆகட்டுமே.

ஆதனால்,
வீட்டுமொழி நமது
நாட்டு மொழி எம்தாயர்
ஊட்டுமொழி எம் இனிய
தமிழைத் தாயை
மறந்திருத்தல் என்ன வழி?

மண்ணுக்காய்ப் போராடி
மாவீரர் மாள்கையிலே
மண்விட்டு வந்துதாய்
மொழி பேணல்
யார் கையிலே?
நினைத்தோமா தமிழ் உணர்வை
நிறைத்தோமா?

நாளை நமதாகும்
நாடும் நமதாகும்
வேளை வரும்போது
ஏன்னாகும் எமது நிலை.

விரும்பிய சுதந்திரம்
ஆரும்பியதென்று
தாய்ப்புலம் திரும்பிடும்
தருணங்கள் வாய்க்கின்றபோது
அரும்புகள் எம் அன்புச் செல்வங்கள்
என்ன மொழிசொல்வாரங்கே?

இங்கிலீஷா, பிரஞ்சா, ஜேர்மனா

இதுபோன்று வேற்றுமொழி
பேசிடக் கேட்டால்
நாட்டு நல்லோர் மனம்
கூசிட நேரும்
இதற்காகத் தானா
இத்தனை இழப்புகள்
என்று மயங்கிட நேருமே.

"மெல்லத் தமிழினிச் சாகும்" என்ற
புரட்சிப் பாவலன் பாட்டிலே
வந்ததெல்லாம் மெய்யா
புலம் பெயர்ந்தோர் படும்
பாட்டினைத்தானா அவன் தன்
பாட்டினில் ஏற்றினன் என்று
அங்குற்றோர் ஏங்குவரே!

ஆதலினால்-
தமிழ்க் குலமே!

வீட்டினிலே தமிழ்க் கூட்டினிலே
தமிழ்க் குஞ்சுகள்
எம்மினப் பிஞ்சுள்
தமிழ் பேசட்டுமே! தமிழ்
மழலை கேட்கட்டுமே!

இதுவரை இதைச்
செய்யாதோர்
இனியாகினும்
இதனை உணரட்டுமே

உணராவிடிலோ,
இன்னும் இரண்டோ
மூன்று தலைமுறைக்குப் பின்னாலே
இங்கு இருக்குமா தமிழ் இனம்?
தமிழ் பேசும் இனம்!
தமிழ்ப் பேர் இருக்கலாம்!
தமிழ்ப் பேச்சு இருக்குமா?

எனவே-
இளமை மாறாத் தேன் தமிழ்
எங்கள் இனிய தமிழ்
என்றும் தங்கிட வகைசெய்வோம்.
தமிழிலே என்றும் உரை செய்வோம்.

வசந்தம் எம் வாழ்வில்
எப்போதும் வீசுகவே!

## புத்தரின் பக்தர்கள்

(துறையூரான்)

கருணா மூர்த்தி காருண்ய சீலர் மனித
மேம்பாட்டுக் குழைத்த உத்தமர்
அருமை அரியாசனம் உதறி விட்டு
கானகஞ் சென்று கடுந்தவ மேற்று
பெருமை பெற்று பேரொளியாய் என்றும்
விளங்கும் புத்தரென்ற புண்ணியரே
வாருங்கள் விரைவாய் வந்து பாருங்கள்
உங்கள் அடியார்களின் அவலட்ச ணத்தை

பயங்கர வாதம் என்ற போர்வையில்
பச்சிளம் பாலரைப் பாமர மக்களை
கயவர்கள் குண்டு வீசிக் கொல்கிறார்
கண்மூடித் தனமாய் சுட்டுப் பொசுக்கிறார்
பேய்களுஞ் செய்யாச் செயல் பல செய்து
பாரை ஏமாத்திப் பத்தினி வேடம் போடுறார்
வாய்மூடிக் கண்டுங் காணாதது போல்
உலகம் உறங்குகிறதா உணர் வில்லயா?

நாய்க்குக் கொடுமை செய்தால் நாலு வருடம்
சிறையெனக் கருணை காட்டும் கனடியரே
தாய்க்குந் தனயர்க்கும் தாங்கொணாத் துன்பமதை
தயங்காது செய்கிறார் தறுதலை இராணுவத்தார்
பேய்க்கும் பிசாசுக்கும் இரங்கும் புண்ணியரே
பேதை மக்களுக்கு இரங்கப் பின் நிற்பதேனோ?
வாய்ப்பேச்சில் வலுவில்லை என்றே எம்மவர்
போர்க்களம் புகுந்தார் எனப் புரியுங்கள்

பள்ளி மாணவரைப் பதைபதைக்கச் சுடும்
பாவிகளே நீங்கள் புத்தரின் பக்தர்களா?
எள்ளி நகையாடுகிறது உலகம் உங்களைப்
பார்த்து எக்கட்டம் விட்டுச் சிரிக்கிறது
கிள்ளி எறியும் அநாதைகளின் ஆவி
கிளர்ந்தெழுந்து பழி வாங்கும் கெதியில்
மெள்ள ஊழ்வினை வந்துங்களைச் சூழும்
மேலிடத் தீர்ப்புக்குப் பதில் சொல்ல நேரும்

## நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அபிவிருத்தி ஒன்றியம் - கனடா


### ஆயுட்கால அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| 01. | திரு. குமாரசாமி சிவஞானம் | 416-754-2494 |
| 02. | திரு. நாகலிங்கம் சிவயோகன் | 416-286-8753 |
| 03. | திரு. தாமோதரம்பிள்ளை செல்வரத்தினம் | 416-297-6508 |
| 04. | திரு. செல்வலிங்கம் செந்தில்குமரன் | 416-278-5540 |
| 05. | திரு வி. விஜேந்திரதாஸ் | 416-726-1647 |
| 06. | திரு. நரசிங்கம் ஞானேந்திரன் | 416-937-8090 |
| 07. | திரு. மணி. வேலுப்பிள்ளை | 416-284-5250 |
| 08. | திரு. ஆழ்வார் சீவரத்தினம் | 905-471-8426 |
| 09. | திருமதி சிவனேஸ்வரி தேவகுமார் | 416-282-8918 |
| 10. | திரு. சரவணமுத்து வினாயகமூர்த்தி | 416-508-0370 |
| 11. | திரு. சுப்பிரமணியம் ரவீந்திரன் | 416-756-9901 |
| 12. | திரு. கந்தையா அருளம்பலம் | 416-261-1666 |
| 13. | திரு. என். மோகனதாஸ் | 416-209-9670 |
| 14. | திருமதி. அருணா கிருஷ்ணகுமார் | 906-2099670 |
| 15. | திரு. மாணிக்கம் மனோகரன் | 905-201-1375 |
| 16. | திரு. பொன்னம்பலம் பாலராஜன் | 416-494-9637 |
| 17. | திரு. எல். குணரட்ணம் | 416-754-8296 |
| 18. | திருமதி. நளினி சிவயோகன் | 416-286-8753 |
| 34. | திரு. சீவரத்தினம் ஜெயானந்தகுமார் | 905-472-5985 |
| 20. | திரு. கணபதிப்பிள்ளை வர்ணகுமாரன் | 416-286-1307 |
| 21. | திரு. சோமசுந்தரம் விஜேந்திரன் | 905-472-6450 |
| 22. | திருமதி. கஜேந்தினி ஜெயராஜன் | 416-754-4144 |
| 23. | திரு. ஆறுமுகம் இராசரத்தினம் | 905-471-4440 |
| 24. | திருமதி. ஜெயந்தி பரராஜசிங்கம் | 416-321-9445 |
| 25. | திருமதி. குமுதினி சத்தியசோதி | 905-201-9637 |
| 26. | திரு. சுப்பையா சத்தியசோதி | 905-201-9637 |
| 27. | திரு. ஏரம்பமூர்த்தி விக்னேஸ்வரராஜா | 416-896-1323 |
| 28. | திரு. சூடாமணி சாந்தகுமார் | 416-893-8747 |
| 29. | திருமதி. சுமதி சாந்தகுமார் | 905-273-7946 |
| 30. | திரு. மார்க்கண்டு பத்மநாதன் | 905-294-8365 |
| 31. | திரு. கதிரவேற்பிள்ளை வரதராஜா | 416-302-2862 |
| 32. | திரு. சண்முகராஜா தயாபரன் | 416-321-6969 |
| 33. | திரு. சுப்பிரமணியம் இராஜகணபதி | 416-829-0970 |

### சாதாரண அங்கத்தவர்கள் 2007/2008

| | | |
|---|---|---|
| 01. | திரு. பாலகிருஷ்ணன் புவிபாலன் | 416-724-9766 |
| 02. | திரு. கந்தையா குலராஜேந்திரன் | 416-286-0895 |
| 03. | திரு. நாகரத்தினம் திரவியம் | 416-232-8738 |
| 04. | திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு(சிவா) | 416-412-3883 |
| 05. | திருமதி. கமலேந்திரன் குமுதினி | 416-412-3883 |
| 06. | திரு. கிருஷ்ணன் தவச்செல்வன் | 416358-3883 |
| 07. | திருமதி. அமிர்தலிங்கம் மாலதி | 416-283-1812 |
| 08. | திரு. வைரவநாதன் அமிர்தலிங்கம் | 416283-1812 |
| 09. | திரு. தர்மலிங்கம் மதீஸ்வரன் | 905-290-1131 |
| 10. | திரு. திரவியம் பாலகுமரன் | 416-332-8738 |
| 11. | திருமதி. பாமதி ரகுநாதன் | 416-387-3095 |
| 12. | திருமதி. சிவதர்சினி ஆனந்தரஜா | 416-287-5414 |
| 13. | திரு. பாலையா ஆனந்தராசா | 416-287-5414 |
| 14. | திரு. சி. பிறைசூடி | 416-287-5414 |
| 15. | திரு. ஐயாத்துரை விக்னேஸ்வரன் | 416-930-4600 |
| 16. | திரு. நாகலிங்கம் சிவதீசன் | 416-208-7404 |
| 17. | திரு. யோகராசா ஜெயக்குமார் | 416-284-4192 |
| 18. | திரு. கவிதா ஜெயக்குமார் | 416-284-4192 |
| 19. | திரு. பி. தர்மநாயகம் | 416-561-5258 |
| 20. | திரு. ஆறுமுகம் குமரகுருபரன் | 416-287-7954 |
| 21. | திருமதி. சரோஜினி குமரகுருபரன் | 416-287-7954 |
| 22. | திரு. வேலாயும் சுதாகர் | 905-471-8971 |
| 23. | திருமதி. சோபியா சுதாகர் | 905-471-8971 |
| 24. | திருமதி. விஜயகுமாரி செல்வரட்ணம் | 416-297-6508 |
| 25. | திரு. கிருஷ்ணகுமார் தவரூபன் | 416-317-4212 |
| 26. | திருமதி. கிருஷ்ணபிரபா தவரூபன் | 416-754-1646 |
| 27. | திருமதி. விஜிதா கிருஷ்ணகுமார் | 416-298-8731 |
| 28. | திருமதி. இராஜேஸ்வரி தர்மராஜா | 416-298-8731 |
| 29. | திரு. ந. சுரேஷ்குமார் | 416-769-7587 |
| 30. | திருமதி. மஞ்சுளா செல்வராஜா | 416-284-2407 |
| 31. | திரு. கனகசபை செல்வராசா | 416-284-2407 |
| 32. | திருமதி. பாமதி ரமேஸ் | 416-754-3850 |
| 33. | திரு. ககதிரவேலு இராஜதுரை | 416-754-3850 |
| 34. | திரு. கனகரட்ணம் கனகபாலன் | 416-724-5697 |
| 35. | திருமதி. தங்கா சுப்பிரமணியம் | 416-724-5697 |
| 36. | திருமதி. ரதி சிவயோகம் | 905-607-2683 |
| 37. | திரு. குமாரசாமி சிவயோகன் | 905-607-2683 |
| 38. | திரு. காத்திகேசு காந்தரூபன் | 416-291-3997 |
| 39. | திருமதி. சுமதி காந்தரூபன் | 416-291-3997 |
| 40. | திருமதி கமலேஸ்வரி சிவஞானசுந்தரம் | 416-283-6034 |
| 41. | திரு. குமாரசாமி சிவஞானசுந்தரம் | 416-283-6034 |
| 42. | திரு. ரங்கநாதன் திருநாவுக்கரசு | 416-321-6347 |
| 43. | திரு. செல்வராஜா இளங்கோ | 416-400-7835 |
| 44. | திரு. நடராஜா பாலசுப்பிரமணியம் | 416-284-8826 |
| 45. | திரு. நரசிங்கம் ஞானேந்திரன் | 416-937-8090 |
| 46. | திரு. ஜி. சண்முகேஸ்வரன் | 905-472-9170 |
| 47. | திரு. வீரகத்தி கனகசபை | 416-297-7542 |
| 48. | திரு. சிதம்பரப்பிள்ளை முருகேசு | 416-284-7900 |
| 49. | திருமதி. பவானி முருகேசு | 416-284-7900 |
| 50. | திரு. வி மகாலிங்கம் | 416-609-0274 |
| 51. | திருமதி. சுமித்திரா இளங்கோ | 416-286-0895 |
| 52. | திருமதி. பவானி விஜேந்திரன் | 905-472-6450 |
| 53. | திருமதி. சசிரேகா சிவகுலம் | 416-754-8667 |
| 54. | திருமதி. விஜயமாலினி கிருபானந்தவேல் | 416-299-3041 |
| 55. | திருமதி. ரஜனி நித்தியானந்தம் | 905-579-1329 |
| 56. | திரு. தெட்சணாமூர்த்தி பாஸ்கரன் | 905-678-3258 |
| 57. | திருமதி. இராஜேஸ்வரி சச்சிதானந்தம் | 905-472-7742 |
| 58. | திரு. மாணிக்கம் ஞானேஸ்வரன் | 416-913-2295 |
| 59. | திரு. மாணிக்கம் மனோகரன் | 905-201-1375 |
| 60. | திரு. குமாரசாமி சிவனேஸ்வரன் | 416-724-0597 |
| 61. | திரு. கே சிவாஸ்கரன் | 416-283-2487 |
| 62. | திரு. சுப்பையா குணாகரன் | 416-282-0100 |
| 63. | திருமதி தயாளினி கணேஸ் | 905-585-4835 |
| 64. | திரு. நமசிவாயம் மன்மதன் | 416-438-3517 |
| 65. | திரு. ச பாலசுப்பிரமணியம் | 905-444-9345 |
| 66. | திரு. கமலக்கண்ணன் அனங்கன் | 416-284-5269 |
| 67. | திருமதி. சிவனேஸ்வரி தேவகுமார் | 416-282-8918 |
| 68. | திருமதி. கவிதா தியாகேந்திரன் | 416-2823452 |
| 69. | திருமதி. சோபனா அருமைத்துரை | 905-471-7711 |
| 70. | திரு. எஸ். சிவனேசன் | 905-619-3322 |
| 71. | திரு. கந்தசாமி செவ்வேழ் | 416-479-4479 |
| 72. | திரு. ஐயாத்துரை அருமைத்துரை | 416-471-7711 |
| 73. | திரு. நாகலிங்கம் இராஜேஸ்வரன் | 416-284-9766 |
| 74. | திருமதி. ஜனத்தா தர்மராஜா | 905-471-4363 |
| 75. | திரு. சின்னத்துரை தர்மராஜா | 416-471-4363 |
| 76. | திருமதி. அருணா கிருஷ்ணகுமார் | 905-209-9670 |
| 77. | திரு. சின்னத்துரை கிருஷ்ணகுமார் | 905-209-9670 |
| 78. | திரு. செல்வத்துரை .ரவிச்சந்திரன் | 416-661-6834 |
| 79. | திரு. சின்னத்தம்பி ஶ்ரீதரன் | 416-284-8826 |
| 80. | திருமதி. வான்மதி மதிரூபன் | 416-725-8242 |
| 81. | திரு. பொன்னம்பலம் மதிரூபன் | 416-725-8242 |
| 82. | திரு. சிற்றம்பலம் அம்பிகாவரன் | 416-.792-0662 |
| 83. | திரு. வீரவாகு நாதன் | 416-402-9393 |
| 84. | திரு. வி சந்திரகுமார் | 905-861-9419 |
| 85. | திரு. வேலுப்பிள்ளை விஜயகுமார் | 905-824-4833 |
| 86. | திரு. நாகலிங்கம் கனகலிங்கம் | 905-417-8496 |
| 87. | திரு. புவனேந்திரன் இராஜ்மோகன் | 416-299-0539 |
| 88. | திரு. முருகேசு மாணிக்கவாசகர் | 905-755-0770 |
| 89. | திருமதி. வினிதா மதீஸ்வரன் | 905-290-1131 |
| 90. | திரு. செல்வராசா பிரபராஜ் | 905-554-1714 |

| | | |
|---|---|---|
| 91. | திரு. கே பாஸ்கரன் | 416-505-8592 |
| 92. | திரு. மனோகரன் வேலாயுதம் | 416-282-3748 |
| 93. | திரு. சண்ணுமுகநாதன் கௌரிகாந்தன் | 905-294-7429 |
| 94. | திரு. செல்லையா சண்முகநாதன் | 416-282-3748 |
| 95. | திரு. சண்முகநாதன் இலட்சுமிகாந்தன் | 416-282-3748 |
| 96. | திரு. கயோகநாதன் | 514-334-7993 |
| 97. | திரு. தங்கராஜா ஸ்ரீஸ்கந்தராஜா | 514-684-1814 |
| 98. | திருமதி.வசந்தகுமாரி பாலசுப்பிரமணிய | 514-341-6436 |
| 99. | திரு. சோதிசிங் பாலறமணன் | 514-684-4634 |
| 100. | திரு. மார்க்கண்டு பாஸ்கரன் | 514-684-8021 |
| 101. | திருமதி, சுபத்திரா பாஸ்கரன் | 514-684-8021 |
| 102. | திரு. மயில்வாகனம் ஜெயானந்தராஜா | 514-278-4412 |
| 103. | திருமதி. செல்வராணி ஜெயானந்தராஜா | 514-278-4412 |
| 104. | திருமதி. சரஸ்வதி சோதிசிங் | 514-421-6352 |
| 105. | திரு. ராரஜதுரை திலக்கலாஜ் | 450-689-1759 |
| 106. | திரு. ஜெயராசா | 514-832-0399 |
| 107. | திருமதி. பாமிளா செல்வராசா | 514-832-0399 |
| 108. | திருமதி. செல்வரஞ்சினி சிவபாதம் | 514-345-0554 |
| 109. | திரு. சி கண்ணதாசன் | 514-738-4137 |
| 110. | திருமதி. மங்கயற்கரசி சிவபாதம் | 514-738-4137 |
| 111. | திருமதி. வாணி நிரஞ்சன் | 514-685-6633 |
| 112. | திரு. செல்வராஜா இராஜசேகர் | 416-724-6172 |
| 113. | திருமதி. சசிகலா இராஜசேகர் | 416-724-6172 |
| 114. | திரு. கனகசபாபதி உதயணன் | 416-754-0010 |
| 115. | திரு. கந்தசாமி ஜெகநாதன் | 905-477-4317 |
| 116. | திரு. சற்குணபாலன் இரத்தினசிங்கம் | 416-724-4572 |
| 117. | திரு. ஆறுமுகம் ஆனந் | 416-875-2471 |
| 118. | திரு. சந்திரசேகரம் ஜெயக்குமார் | 416-269-2169 |
| 119. | திருமதி.ஞானேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி | 416-286-1953 |
| 120. | திருமதி. பிரபாகரி உதயகுமார் | 416-609-9588 |
| 121. | திரு. தங்கவேலாயும் நந்தகுமார் | 647-293-1320 |
| 122. | திரு. கிருஷ்ணர் யோகேந்திரராஜா | 416-519-2822 |
| 123. | திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன் | 416-287-6171 |
| 124. | திரு. வீரகத்திப்பிள்ளை சோதீஸ்வரன் | 416-494-8575 |
| 125. | திரு. கணவதிப்பிள்ளை சிவனருட்செல்வன் | 416-287-6171 |
| 126. | திரு. முத்துசாமி பிரேமதாஸ் | 647-284-9422 |
| 127. | திரு. சுப்பிரமணியம் ஸ்ரீமோகன் | 416-266-7710 |
| 128. | திருமதி. தேவகி சிவராஜா | 416-754-7454 |
| 129. | திருமதி. கமலேஸ்வரி கார்த்திகேசு | 416-792-8139 |
| 130. | திருமதி. சரோஜா சத்தியசீலன் | 416-293-5282 |
| 131. | திருமதி. விஜயலட்சுமி மோகனதாஸ் | 416-651-4924 |
| 132. | திருமதி. தயாதேவி சிவகுமார் | 905-472-9428 |
| 133. | திருமதி. தமயந்தி கருணானந்தம் | 905-471-5807 |
| 134. | திரு. சி சிவபாதம் | 514-747-6723 |
| 135. | திரு. தெட்சணாமூர்த்தி தெய்வேந்திரம் | 514-684-2901 |
| 136. | திரு. செல்வராஜா கமலநாதன் | 450-689-7843 |
| 137. | திரு. கதிரவேலா புஸ்பானந்தன் | 514-624-9359 |
| 138. | திருமதி. செல்வி புஸ்பானந்தன் | 514-274-8550 |
| 139. | திரு. க. திருவருட்சோதி | 514-274-8550 |
| 140. | திரு. தங்கராசா சிவபாலு | 416-546-1394 |
| 141. | திரு.மதி. பிரேமரதி ஈஸ்வரன் | 905-882-7487 |
| 142. | திருமதி. ரதி சிவஞானம் | 416-736-3541 |
| 143. | திரு. அந்தோனிப்பிள்ளை போல் ஜோன்சன் | 416-245-1015 |
| 144. | திரு. குமரையா ராமதாஸ் | 416.616-4519 |
| 145. | திரு. துரைாசா குமணராஜா | 416-843-2079 |
| 146. | திரு. சுப்பிரமணியம் கெங்காதரன் | 416-388-0920 |
| 147. | திரு. மயில்வாகனம் செல்வநேசன் | 416-754-9582 |
| 148. | திருமதி. சாரதாதேவி செல்வநேசன் | 416-754-9582 |
| 149. | திருமதி. நந்தினி சத்தியமூர்த்தி | 905-426-9802 |
| 150. | திருமதி. சாந்தினி சந்திரகுமார் | 403-269-0681 |
| 151. | திரு. அருட்பிரகாசம் சிவதாஸ் | 416-269-0681 |

# Braveen Moving & Transport

*Fast & Safty*
*Friendly Care Service*
*Resonable Rate*
*House*
*Apartments*

**Phone : 416 283 1812**
**Cell: 416 704 2606**
**Call: Siva(Amuthu)**






# டாக்டர் யாழினி கருணாநிதி O.D

## கண் பரிசோதனை நிபுணர்

## OPTOMETRIST




கண்களில் ஏற்படும் கோளாறுகளுக்கு
தகுந்த சிகிச்சை வழங்கப்படும். அல்லது
தகுந்த சிகிச்சைக்கு அனுப்பிவைக்கப்படும்.
OHIP, மற்றும்
பிரத்தியேக காப்புறுதி திட்டங்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்.

**Dr. Yarlini Karunanithy O.D**

5200 Finch Ave. East Suite# 112
Scarborough, ON
**Tel: (416) 298-9674**

# உங்கள் கனவு இல்லம் நனவாக!



BUYING ■ SELLING ■ LEASING

## HOMES

HIGHER STANDARDS

**HomeLife / Future Realty Inc.,**
Brokerage*
INDEPENDENTLY OWNED AND OPERATED
262 Markham Road, Scarborough,
ON, M1J 3C5.

**Kumar Rajendram**
Sales Representative
**Dir: 416.602.2509**
**Bus: 416.264.0101**




This is not intended to solicit buyers or sellers currently under contract with a broker.


Apex 416 297 0707

# நெல்லைத் தீபம் 2007
# வெற்றிபெற
# வாழ்த்துகின்றேன்





**Heritage Education Funds**



கல்வி சேமிப்புத்திட்ம் தொடர்பான அனைத்து விடையங்களிலும் நன்கு தேர்ச்சிபெற்றவரும், RESP துறையில் 11வருட கால அனுபவும் உடையவர்.

இத்திட்டத்தை ஆரம்பிக்கும் இடத்தில் அரசாஙற்கத்திடமிருந்து அதிகூடிய தொகையான 7200 டொலர்களை பெற்றுத்தரும் வல்லமைமிக்கவர்

கல்விச் சேமிப்புத்திட்ட முகவர்களாக விரும்புவோருக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் வழங்கப்படும்.

**Direct:416-844-7390**

e-mail:varnacumaaran_kanapathippillai@heritageresp.com

**Varnacumaaran** B.sc .Eng

**Sales Manager**

Seated (L-R): Mrs. M. Amirthalingam, Mrs. N. Sivayogan, Mrs. R. Tharmarajah, Mr. C. Ambihavaran, Mr. K. Kularajendram, Mr. N. Thiraviam
Standing (L-R): Mr. T. Sivabalu, Mr. M. Manoharan, Mr. S. Vinayagamoorthy, Mr. K. Varnacumaaran, Mr. T. Matheeswaran, Mr. T. Ganapathipillai
Absentees: Mr. K. Kantharupan, Mr. K. Thavarupan, Mr. K. Pushphananthan, Mr. S. Ganeshamoorthy





**Sathy Sivasubramaniam**
Sales Representative

**Direct - 416.624.5044**
**Bus - 416.264.0101**

HomeLife/ Future Realty Inc.
262 Markham Road
Scarborough, ON, M1J 3C5

HOMELIFE HIGHER STANDARDS

For all your Real Estate & Mortgage needs...

THE TEAM WORK THAT WORKS!

**Nithy Sathyakumar**
Mortgage Consultant

**Direct - 416.728.2454**
**Bus - 416.548.7475**

BonaFide Mortgage Solutions

1920 Ellesmere Road, Unit - 109
Scarborough, ON, M1H 2V6



# Vision mobile

SOURCE FOR WIRELESS SOLUTIONS



UNLOCKING
REG: $24.99
$19.99

CAR CHARGER
REG: $14.99
$9.99

**We provide services for...**

## Rogers Wireless & Fido

- Cell phone monthly plans (Starting as low as $20/month)
- Hardware Upgrade
- Unlocking & Repairs
- Accessories

- Home Phone
- High Speed Internet
- Cable TV
- Satellite TV





*Upgrade your phone for FREE!*
*some conditioos apply!

**$20/MONTH**

- 200 DAY TIME MINS
- UNLIMITED EVENING & WEEKEND (6PM-8AM)
- CALL WAITING & CONFERENCE

*SEE STORE FOR DETAILS.*

274, MARKHAM ROAD
SCARBOROUGH, ON

**416.644.3566**
SHOP ONLINE: WWW.VISIONMOBILE.CA

# MORTGAGE - 647 836-6502


கனேடிய மோட்கேஜ் துறையில் நீண்டகால அனுபவம்

தற்போது வீடு விற்பனை வாங்கல் சேவையுடன்

18 Years Banking Experience

*Mobile Mortgage Service at your Door Step with Best Rates !*

- 1st Mortgage up to 100% of Purchase Price
- Renewals / Refinancing / Switching
- Self Employed • No Income
- Bank Turn Down
- No Credit / New Immigrants
- Amortization up to 40 Years
- Fast Approval



***Pleasant Service with Lowest Commission!***




Buying or Selling
Residential, Commercial, Land and Investment Properties.

***Meet a Realty Expert***

**Nilani Ravindran (Nila)**
*Sales Representative*

**Direct: 647-836-6502**

RE MAX - ASSOCIATES REALTY INC. BROKERAGE
Independently Owned and Operated
900 Middlefield Road, Suite 4A, Toronto, ON M1V 4X1


கண்கவர் அழகான உறுதியான
Home & Kitchen Furnishing
தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்
KITCHEN
Tel: 416-614-6262 Fax: 416-614-7245
Visit our showroom at
140 Nugget Ave., Scarborough, ON M1S 347

# நாடகமேதை சேக்ஸ்பியர்



**- கவிநாயகர் வி. கந்தவனம்**

### வாழ்க்கைப் பின்னணி

எமது பெரும்பாலான புலவர்களைப் போலவே சேக்ஸ்பியரது வாழ்க்கை வரலாறும் தெளிவற்றுக் காணப்படுகின்றது. அவர் வாழ்ந்த எலிசபெத்திய காலத்தில் மன்னர் அல்லாதவரின் வரலாறுகளைப் பதிவு செய்வதில் எவரும் ஆர்வம் காட்டவில்லை. எழுதப் படிக்கத் தெரிந்தவரும் அக்காலத்திற் குறைவாகவே இருந்தார்கள்.

எனினும் சேக்ஸ்பியரைப் பற்றி ஆய்வாளர்கள் ஆக்கிய வரலாறு பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் அவர் பிறந்த நாள் 23.04.1564 என்றும் இறந்த நாள் 23.04. 1616 என்றும் வழங்கப்படுகின்றன. பெரியவர்கள் பிறந்த நாளிலேயே இறக்கவுஞ் செய்வார்கள் என்ற ஆங்கிலேயரின் நம்பிக்கைக்கும் இக் கணிப்பு ஏற்புடையதாகவுள்ளது.

சேக்ஸ்பியர் என்ற ஓர் ஆசிரியர் இருந்தது உண்மை. ஆனால் நாடகமேதை எனப்படும் சேக்ஸ்பியர் அவர் அல்லர் என்ற கருத்து இங்கிலாந்தில் வலுப்பெற்று வரும் இக்காலத்தில் எமக்குத் தெரிந்த சேக்ஸ்பியரை ஒருமுறை நினைவுகொள்வோம்.

இலண்டனுக்கு 100 மைல் வடக்காகவுள்ள ஸ்ராற்போட் அப்போன் அவோன் (Stratford-upon-Avon) சேக்ஸ்பியர் பிறந்த சந்தைப் பட்டணம். தந்தையார் ஜோன் சேக்ஸ்பியர் தோல் பதனிடும் தொழில் நடத்தியவர். தானிய வியாபாரமும் செய்தவர். தாயார் மேரி ஆர்டன் பெரும் நிலவுடைமையாளரின் மகள். இவர்களுக்கு எட்டுப் பிள்ளைகள். வில்லியம் சேக்ஸ்பியர் மூன்றாமவர்.

சேக்ஸ்பியர் சொந்தவூர்ப் பாடசாலை ஒன்றிற் கற்றுத் தேறினார். பல்கலைக்கழகத்துக்கு அவர் செல்லவில்லை. காரணம் வசதியாக வாழ்ந்த அவரது தந்தையார் கடனாளி ஆனமைதான் என்று சொல்லப்படுகின்றது.

படிப்பித்தல் தொழில் பார்த்த சேக்ஸ்பியருக்கும் ஆன் ஹதவேக்கும் 1582ல் திருமணம் நடந்தது. இவர்களுக்கு சூசானா, ஹம்நெற், யூடித் என மூன்று பிள்ளைகள். ஹம்நெற் 11 வயதில் இறந்துவிட்டார்.

### திருப்புமுனை

1587 சேக்ஸ்பியரின் வாழ்வில் திருப்புமுனை ஒன்றை ஏற்படுத்திய ஆண்டு. இந்த ஆண்டிலேதான் பார்த்த ஆசிரியர் வேலையைத் துறந்து, நடிகர் குழு ஒன்றுடன் சேக்ஸ்பியர் சேர்ந்து இலண்டன் சென்றடைந்தார். அக்காலம் இங்கிலாந்துக்கும் இஸ்பானியாவுக்குமிடையில் அடிக்கடி சண்டைகள் நடந்த காலம்.

நாடகக் குழுவில் ஆரம்பத்தில் இவர் குதிரைக் காவலராகவும் பின்னர் அரங்க நிருவாகியாகவும் பதவி வகித்திருக்க வேண்டும் என்றும் படிப்படியாக நாடகப் பிரதிகள் எடுத்தல், அவற்றைச் சீர்செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் நம்பப்படுகின்றது. இந்தக் காலமே நாடகம் எழுதும் முறை, நாடகத் தயாரிப்பு, அரங்கேற்றம், அரங்க அமைப்பு, நிருவாகம் போன்ற பல நுணுக்கங்களை அவர் கற்றறிந்த காலமாக இருத்தல் வேண்டும்.

1592ஆம் ஆண்டளவில் சேக்ஸ்பியர் நன்கு அறியப்பட்ட நடிகராகவும் நாடக எழுத்தாளராகவும் வளர்ந்துவிட்டார். குளோப் அரங்க(Globe Theatre) தயாரிப்புகளில் சிறு பாத்திரங்கள் தாங்கி நடித்தும் எழுத்துப் பணிகள் புரிந்தும் வெளிச்சத்துக்கு வந்த சேக்ஸ்பியரின் திறமை குறித்துப் பலருக்குச் சந்தேகங்களும் எழுந்தன.

### இரவல் எழுத்தாளர்?

உறொபேட் கிரீன் என்ற நாடக எழுத்தாளர் சேக்ஸ்பியர் பிற நாடக எழுத்தாளர்களின் உத்திகளைத் திருடுபவர் என்று குற்றஞ் சாட்டினார். கிரீன் பல்கலைக்கழகப் படிப்பாளி. எனினும் அந்த அளவுக்குப் படிப்பில்லாத சேக்ஸ்பியரின் எழுத்துக்கள் மக்களைக் கவரவே கிரீன் மற்றும் மார்லோ, கைட். ஜோன்சன் (Marlowe, Kyd, Jonson) போன்ற நாடகப் பிரபலங்களின் பெயர்கள் மங்கத் தொடங்கின. சேக்ஸ்பியர் பணியாற்றிய குளோப் அரங்கத்துக்கு மதிப்பு அதிகரித்தது. அதனால் அவருக்கு எழுந்த எதிர்ப்பு அழுக்காற்றின் விளைவாக இருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

அதேவேளை சேக்ஸ்பியர் பல கதைகளையும் கருத்துக்களையும் பிறரிடமிருந்து எடுத்திருக்கலாம் அல்லது அவர் பணியாற்றிய கம்பனியால் கொடுக்கப்பட்டிருக்கலாம் எனவும் ஆய்வாளர் நம்புகின்றனர். கம்பனி பழைய கதைகளைத் தெரிந்தெடுத்து அவற்றை நாடகம் ஆக்கும்படி சேக்ஸ்பியரைப் பணித்திருக்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. சேக்ஸ்பியரின் நாடகக் கதைகள் பல அவருக்கு முன்னதாகவே Chaucer, Plutarch, Holinshed போன்ற புகழாளர்களால் எழுதப்பட்டவையாகும். நாட்டுக் கதைகளைக்கூட முழுமையாகவோ பகுதிகளாகவோ சேக்ஸ்பியர் தமது நாடகங்களிற் பயன்படுத்தி யிருக்கின்றார்.

இவற்றினால் மட்டும் சேக்ஸ்பியர் பெயர் பெற்றிருப்பார் என்று சொல்வதற்கில்லை. அவர் இயற்கை உணர்வும் உலகியல் வாழ்க்கை பற்றிய அனுபவ அறிவும் மிகுந்த எழுத்தாளர். அதற்கும் மேலாக அவர் ஓர் உன்னத புலவர்.

கவர்ச்சியாகக் கவிதை எழுத வல்லவர். அதனால் அவரது உலக தத்துவங்களும் கவித்துவ வரிகளும் மக்களைக் கவர்ந்திருக்க வேண்டும். பல்கலைக்கழக எழுத்தாளர் உயர்மட்டத்தினருக்கே பெரிதும் எழுதினர். சேக்ஸ்பியர் பொதுமக்களுக்கும் எழுதினார் என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

## கைகொடுத்த கவித்திறம்

1592ல் தொற்றுநோய் காரணமாக நாடகக் கம்பனிகள் மூடப்பட்டன. வேலையிழந்த நிலையில் சேக்ஸ்பியர் பாடல்களை அதிகம் எழுதினார். 1593ல் Venus and Adonis என்ற தொகுதியை வெளியிட்டார். 1594ல் The Rape of Lucree என்ற பெயரில் மற்றுமொரு கவிதைத் தொகுதியை வெளிக்கொணர்ந்தார்.

## The Lord Chamberlain's Men

1594ல் நாடகங்கள் மீண்டும் அரங்கேறத் தொடங்கியபோது இரிச்சட் பேபேஜ் தலைமையிலான வுாந டுழசன ஊாயஅடிநசடயைெ"ள ஆநெ என்ற கம்பனியில் சேக்ஸ்பியர் சேர்ந்து கொண்டார். நடிப்பாலும் எழுத்தாலும் அவருக்கு வருவாய் பெருகியது. வருவாயை நாடகக் கம்பனிகளில் இட்டு அவற்றிற் பங்காளராகினார். காணிநிலங்களிலும் முதலீடுசெய்து செல்வந்தரானார். அவரது நாடகங்களின் உரிமையை அவற்றை மேடையேற்றிய கம்பனிகளே வைத்துக்கொண்டன.

சேக்ஸ்பியரின் நாடகங்கள் பலவற்றை மேடையேற்றிய பெருமை The Lord Chamberlain's Men என்ற கம்பனிக்கே உரியது. இக்கம்பனி 1599ல் குளோப் நாடக மண்டபத்தை தேம்ஸ் நதியின் தென்கரையில் சுவான் நகரத்துக்கு அண்மையிற் கட்டிமுடித்தது. மண்டபம் 3000 பார்வையாளரைக் கொள்ளக்கூடிய அளவுக்குப் பிரமாண்டமாக இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. சேக்ஸ்பியரின் பெயர்பெற்ற ஹம்லட், மன்னன் லியர் போன்ற துன்பியல் நாடகங்கள் இங்குதான் அரங்கேற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று நம்பப்படுகின்றது.

## அரச ஆதரவு

சேக்ஸ்பியர் எலிசபெத் மகாராணியை மகிழ்விக்கவே பெரிதும் எழுதினார். எலிசபெத் மகாராணி 1558 - 1603 க்கு இடைப்பட்ட 44 ஆண்டுகள் இங்கிலாந்தையும் அயர்லாந்தையும் ஆண்டவர். பெயரளவில் பிரான்சுக்கும் இராணியாக இருந்தவர். திருமணம் செய்யாததால் 'கன்னிராணி' என்று போற்றப்பட்டவர். கலைவளர்ச்சிக்குப் பெரும் ஆதரவு அளித்தவர். இவர் 1603ல் அமரத்துவமாக முதலாம் யேம்ஸ் அரசரானார். அதன்பின் அவருக்காகவும் நாடகங்கள் எழுதப்பட்டன. இரிச்சட் பேபேஜ் என்பாருக்கும் அவரது கம்பனிக்கும் மன்னர் அமோக ஆதரவு அளித்தார். அதனால் இரிச்சட் தனது The Lord Chamberlain's Men என்ற நாடகக் குழுவின் பெயரை The King's Men என்று மாற்றினார். அதனைத் தொடர்ந்து அது யேம்ஸ் மன்னரை மகிழ்விக்கும் தலைமை நாடகக் குழுவாயிற்று.

## படைப்புகள்

சேக்ஸ்பியர் 1595ல் நாடகங்கள் எழுதத் தொடங்கினார். தொடர்ந்து ஏறத்தாழ 20 வருடங்களில் அவர் எழுதிய நாடகங்களின் பெயர்கள் வருமாறு:

| இன்பியல் | துன்பியல் | வரலாறு |
|---|---|---|
| All's Well That Ends Well | Antony and Cleopatra | King Edward III |
| As You Like It | Cardenio | King Henry IV, Part I |
| The Comedy of Errors | Coriolanus | King Henry IV, Part II |
| Cymbeline | Hamlet, Prince of Denmark | King Henry V |
| Love's Labour's Lost | Julius Caesar | King Henry VI, Part I |
| Measure for Measure | King Lear | King Henry VI, Part II |
| The Merchant of Venice | Macbeth | King Henry VI, Part III |
| The Merry Wives of Windsor | Othello, Moor of Venice | King Henry VIII |
| A Midsummer Night's Dream | Romeo and Juliet | King John |
| Much Ado About Nothing | Timon of Athens | King Richard II |
| Pericles, Prince of Tyre | Titus Andronicus | King Richard III |
| The Taming of the Shrew | | Sir Thomas More |
| The Tempest | | |
| Troilus and Cressida | | |
| Twelfth Night | | |
| The Two Gentlemen of Verona | | |
| The Two Noble Kinsmen | | |
| The Winter's Tale | | |

சேக்ஸ்பியரின் நாடகங்களின் தொகுப்பு ஒன்று முதன்முதலாக 1623ல் வெளியிடப் பெற்றது. அதில் Pericles, The Two Noble Kinsmen என்னும் இரண்டையுந் தவிர மற்றைய எல்லா நாடகங்களும் இடம்பெற்றிருந்தன.

சேக்ஸ்பியர் களப்பிரிவுகளோ காட்சிப் பிரிவுகளோ குறிப்பிட்டுத் தமது நாடகங்களை எழுதவில்லை. அவரது நாடகங்களைக் களங்களாகப் பிரித்தும் காட்சிகளாக வகுத்தும்

நடிகர் வருகை, செல்கை முதலிய விவரங்களைக் குறிப்பிட்டும் முதன்முதலில் 1709ல் பதிப்பித்தவர் நிக்கலஸ் றோ(Nicholas Rowe) என்பவரே.

**இன்பியல் நாடகங்கள்**

சேக்ஸ்பியரின் இன்பியல் நாடகங்கள் பொதுவாக நகைச்சுவைகளையும் சிலேடைக் கருத்துக்களையும் உவகைதரும் முடிவுகளையும் கொண்டவை. இதுதான் இன்பியல் நாடகம் என்று சொல்லத் தக்க வரைவிலக்கணத்துக்குள் நின்று அவர் நாடகங்களை எழுதியதாகத் தெரியவில்லை. அவருக்கு இன்பியல் என்பது பெரிதும் மட்டி மடயரும் வாழ்க்கையில் வெற்றியீட்டுவதை வெளிப்படுத்துவது. இது மனித இயல்பைச் சாதகமாக நோக்கும் அவரது மனப்பான்மையைக் காட்டுகின்றது. சமுதாயத்திற் காணமுடியாத முழுமையைப் பார்வையாளருக்கு மேடையிற் காட்டுவதில் வெற்றி கண்டவர் சேக்ஸ்பியர். வெனிஸ் வணிகனில் வருவதுபோல குழப்பங்களை உண்டுபண்ணிக் கடைசி நேரத்தில் எதிர்பாராத வகை அவற்றைத் தவிர்க்குஞ் சூழலை உருவாக்குதல் என்பது. யதார்த்தமாக வாழ்க்கையில் நடப்பதரிது என்றாலும், அதனை மேடையில் காட்டி மக்களை மகிழ்விப்பதில் இன்பங் கண்டவர் சேக்ஸபியர். அவ்வகையில் அரங்கம் செயற்கைத் தன்மைக் குரியதுதான் என்பதைச் சொல்லாமற் சொல்லி வைத்தவர் அவர். எங்கள் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் இக்கருத்தைக் கொண்டவர்தாம். கதை அமைப்பில் மட்டுமன்றி நடிப்பிலும் செயற்கை அழகு இருக்க வேண்டும் என்பது அவரது கொள்கையாகவும் செயற்பாடாகவும் இருந்தது.

இயற்கை செயற்கைக் கோட்பாடு ஒருபுறம் இருக்க, சேக்ஸ்பியரின் வெற்றிக்குக் காரணங்களாக அமைந்தவற்றில் ஒன்று மக்கள் விருப்பங்களுக்கும் அவர் தீனி போட்டமைதான். நாடகங்களுக்கு அவர் வைத்த பெயர்களும் மக்களைக் கவரத் தக்கவையாகவே இருந்தன.

All's Well That Ends Well , As You Like It , The Comedy of Errors, Love's Labour's Lost, Measure for Measure, The Merry Wives of Windsor, A Midsummer Night's Dream , Much Ado About Nothing போன்றவை நல்ல உதாரணங்கள்.

**துன்பியல் நாடகங்கள்**

சேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்களில் Hamlet, Julius Caesar, King Lear, Macbeth, Othello, Romeo and Juliet என்பவை பெயர் பெற்றவை. இவற்றையும் அவரது பிற துன்பியல் நாடகங்களையும் நோக்கும்போது, அவரது துன்பியல் தத்துவம் -

1.நாடகம் துன்பத்தில் முடிதல்,

2.அத்துன்பத்துக்குப் பிரதான பாத்திரங்களே(கதாநாயகனோ நாயகியோ) காரணமாக அமைதல்,

3.அவர்கள் பேராற்றல் படைத்தவராகவும் செல்வச் செழிப்பும் செல்வாக்கும் மிகுந்தவராகவும் இருப்பினும் அவர்களிடத்தில் இருக்கும்

- பழிவாங்கும் தாகம் (Hamlet) - காதல் உணர்வு, (Othello, Romeo and Juliet)
- தவறு செய்யுந் தன்மை (King Lear) - அதீத தன்னம்பிக்கை (Julius Caesar)
- பேராசை (Macbeth) போன்றவையே அவர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைதல்,

4. இவற்றை ஊழ்வினை, பேய்பிசாசு ஆகியனவும் உடன் உறவாடும் பொறாமைப் பாத்திரங்களும் தூண்டி விடுதல் என்பவையாக விரிதலைக் காணலாம்.

சேக்ஸ்பியரின் துன்பியல் நாடகங்கள் மனிதரின் பலங்களையும் பலவீனங்களையும் எடுத்துக் காட்டுபவை. அவற்றைக் காட்டுவதற்கான நாடக உத்திமுறைகளை அரிஸ்டாட்டில் நாடகம்பற்றி எழுதியவற்றிலிருந்து சேக்ஸ்பியர் பெற்றிருக்கலாம். கிரேக்க, உரோமர்பற்றிய வாழ்க்கை முறைகளை Plutarch எழுதி Sir Thomas North என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட Lives of Noble Greeks and Romans என்ற நூலைப் படித்து அறிந்திருக்கலாம்.

உரோமியோவும் யூலியட்டும் என்ற நாடகம் ஓர் உண்மைக் கதையை அடிப்படையாகக் கொண்டது. 1303ல் இத்தாலியில் உள்ள வெரோனா நகரத்தில் காதல் கைகூடாததால் காதலனும் காதலியும் இறந்துள்ளனர். இந்தச் சம்பவத்தை ஆதர் புரூக் என்பவர் 1562ல் The Tragical Historye of Romeus and Juliet என்ற தலைப்பில் பாட்டாக எழுதியிருந்தார். அதுவே சேக்ஸ்பியரின் நாடகத்துக்கு ஆதாரமாக அமைந்திருக்க வேண்டும்.

**வரலாற்று நாடகங்கள்**

வரலாற்று நாடகங்களை எழுதச் சேக்ஸ்பியருக்கு உதவியாக இருந்த நூல்களுள் Raphael Holinshed என்பாரின் The Chronicles of England, Scotland and Ireland என்ற பாரிய நூல் முதன்மையானது என்பது ஆய்வாளர் கருத்து. பெரும்பாலான வரலாற்று நாடகங்கள் இங்கிலாந்தின் இராச்சியத்தைக் கைப்பற்ற நடந்த The Wars of the Roses என்ற போர்கள் தொடர்பானவை.

சேக்ஸ்பியரின் வரலாற்று நாடக பாத்திரங்கள் மன்னர் கடவுளால் நியமிக்கப்படுபவரா இல்லையா என்ற கேள்விச் சக்கரத்தில் சிக்குண்டவர்களாகக் காணப்படுகின்றனர். மன்னர் கடவுளின் பிரதிநிதி என்பது மக்கள் மத்தியில் இருந்த ஒரு நம்பிக்கை. மன்னர் கடவுளால் நியமிக்கப்பட்டால் அவரைத் தோற்கடிப்பவர் கடவுளால் தண்டிக்கப்படுவார். இந்த நம்பிக்கையை ஹம்லெட், மைக்பெத், யூலியஸ் சீசர், மன்னர் இரிச்சாட் III போன்ற நாடகங்கள் பிரதிபலிக்கின்றன.

சேக்ஸ்பியரது வரலாற்று நாடக பாத்திரங்களுக்கு அவரது பார்வையாளர் ஓரளவு பழக்கப்பட்டவராகவே

இருந்திருப்பர். தமிழ்நாட்டில் இராச்சியங்களுக்காகச் சேர சோழ பாண்டியர் அடிக்கடி சண்டையிட்டதைப் போலவே இங்கிலாந்திலும் உள்ளூர் மன்னர்களுக்கிடையிலும் பிரான்ஸ், இஸ்பானியா ஆகிய வெளிநாட்டு மன்னர்களுடனும் சண்டைகள் நடந்தன. தமிழர் கலாச்சாரத்தைப் போலவே ஆங்கிலக் கலாச்சாரத்திலும் இராச்சியப் போராட்டங்களும் அவற்றின் வெற்றிகளும் தோல்விகளும் பின்னிப் பிணைந்திருந்த காலகட்டத்தில் இந்நாடகங்கள் மக்கள் மத்தியில் பிரபலியம் பெற்றதில் வியப்பொன்றில்லை.

**சேக்ஸ்பியரின் அபாரதிறமை**

சேக்ஸ்பியர் இங்கிலாந்தில் மட்டுமன்றி உலகத்தின் எல்லா நாடுகளிலும் இன்றும் ஆதிக்கம் செலுத்துகின்ற தனிப்பெரும் படைப்பாளர். உலகத்தின் செம்மொழி இலக்கியங்கள் எல்லாவற்றிலும் அவருக்கும் ஒரு தனியிடம் உண்டு. காலத்தை வென்ற இந்த நாடக மேதையின் அதீத திறமைகள் அளக்க முடியாதவை. அவரது நாடகங்கள் பெயர்பெற்றமைக்கும் இன்றுவரை நிலைத்து வாழ்வதற்கும் காரணங்கள் பல. அவற்றுள் அவரது கவர்ச்சிமிக்கக் கவித்துவ மொழிநடை முக்கியமானது.

சேக்ஸ்பியர் ஓர் ஒப்பற்ற புலவர். அவரது Venus and Adonis, The Rape of Lucree ஆகிய கவிதைத் தொகுதிகள் அவர் வாழ்ந்த காலத்திலேயே பெயர்பெற்று விளங்கின. Sonnet என்னும் ஆங்கிலக் கவிதை வடிவத்துக்கு அணிசெய்யும் வகையில் ஏராளமான கவிதைகளை அவ்வடிவத்திற் பாடிக் குவித்தவர். வெண்பாவுக்குப் புகழேந்தி போல Sonnet க்குச் சேக்ஸ்பியர். அதிக இலக்கண வரம்புகளைக் கொண்ட வெண்பாவைப் போலவே சொனற்றும் விதிமுறைகள் பலவற்றைக் கொண்ட ஒரு செய்யுள் வடிவமாகும். எனினும் நாடகங்களை அவர் Blank Verse வடிவத்திலேயே எழுதினார். Blank Verse எமது ஆசிரியப் பாவை ஒத்த கவிதை வடிவம். விரும்பிய சிந்தனைகளை விரும்பியவாறு விவரிக்க விட்டுக் கொடுக்கும் செய்யுள் வகை. இந்த வகையில் அவர் தமது புலமையைப் புலப்படுத்தினார். கவித்துவ ஆற்றல் இல்லாத பிற நாடக எழுத்தாளரை வெல்ல வேண்டும் என்றவோர் உள்நோக்கமும் இருந்திருக்கலாம். அவரது அழகொழுகும் மொழியைப் பேசுவதில் நடிகர்களும் இன்பங் கண்டனர். கலைஞர் கருணாநிதியின் கற்கண்டு வசனங்களை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அழகுறப் பேசிக் காட்டியது போல அந்தக் காலத்திலும் செவிக்கினிய, சிந்தைக்கினிய சேக்ஸ்பியரது கவித்துவ வரிகளை நடிகர்கள் எடுப்பாகப் பேசிக் காட்டினர். அவற்றை கேட்டுப் பார்வையாளர் பரவசமடைந்தனர்.

ஒரு நாடக அசிரியருக்கு இருக்க வேண்டிய அரங்க அறிவு, தொழில்நுட்பத் திறன் எல்லாமே அவரிடத்தில் இருந்தன. குழு உணர்வு, ஒற்றுமைப் பண்பு, சகிப்புத்தன்மை, நகைச்சுவைப் பேச்சு போன்ற நல்லியல்புகள் உடையவராகவும் அவர் விளங்கினார். இவற்றுக்கும் மேலாக, ஒரு கவிஞராகவும் மொழிப் பற்றாளராகவும் இருந்த சிறப்பியல்பாலும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் போட்டிபோட்ட பிற எழுத்தாளர்களையெல்லாம் முந்திக்கொண்டு அவரால் முன்னேற முடிந்தது.

பிற எழுத்தாளர்களும் சாதாரணமானவரல்லர். Christopher Marlowe(1564-93), Thomas Kyd(1558-94), Ben Jonson(1572-1637), John Fletcher(1579-1625), Thomas Middleton(1580-1627), John Webster(1580-1625) போன்றவரும் பிறரும் பெயர்பெற்ற நாடக எழுத்தாளராகப் பவனி வந்தனர். அவர்களிற் பலர் செக்ஸ்பியரிலும் அதிகம் படித்தவராகவும் அரங்க அனுபவம் அதிகமுள்ளவராகவும் விளங்கினர். அவர்களை எல்லாம் விஞ்சி நிற்பதற்குச் சேக்ஸபியருக்கு உதவியாக இருந்தது அவரது கவர்ச்சியான கவித்துவ மொழிதான் என்பது ஆய்வாளர் கருத்து.




Bread Master Bakery

South Asian Take out & Catering

Tel: 416-299-5083

31 Tapscott Road, #B3
Lower Level,
Malvern Town Center
Scarborough, Ontario M1B 4Y7

Open 7 Days


ராஜாராம்
உணவுச்சாலை
ராஜரீதியில் பணிவுடன்
அறுசுவை உணவை படைத்திடுவோம்
திருமணமா, பிறந்ததினமா, கல்லூரியின் அல்லது ஸ்தாபனங்களின் வருடாந்த விழாக்களா வேறு வைபவங்களா, அந்தியேஷ்டியா, திவஷமா, வீட்டில் நடக்கும் சிறுவைபவமா, எதுவானாலும் கூறுங்கள் வகை செய்வோம்.
தரமான பாகம்
தவறாத நேரம்
தரமோ நிரந்தரம்
RR
www.RajahRam.com
Rajah Ram CATERERS
Tel: 416-299-5200
Fax: 416-299-5795


# DR.K.JEYALINGAM MD, FRCPC, ABIM

## Internal Medicine Specialist

**Medical Clinic**
**Warden – Finch Medical Clinic**
**2858, Ellesmere Road**
**Phone: 416-287-1500**
**Scarborough-Ontario**
**Fax: 416-287-1275**

**3430, Finch Avenue East , Unit 6A**
**Scarborough. Ontario**
**Phone : 416-496-1990**
**Fax : 416-496-1984**



# ROYAL BROKERS




பல்வேறு நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலையில் உங்கள் காப்புறுதியை தெரிவு செய்துகொள்ள

## மருத்துவ பரிசோதனையற்ற ஆயுட் காப்புறுதி

**மிகக் குறைந்த கட்டணமாக $15ல் இருந்து!**

- இருதய நோய்
- இருதய சத்திர சிகிச்சை
- புற்று நோய்
- நீரிழிவு நோய் (இன்சுலின் பாவிப்பவர் உட்பட)
- சிறுநீரக நோய்

போன்ற நோய்கள் இருப்பினும்
எவ்வித மருத்துவ பரிசோதனையுமின்றி மிகக்குறைந்த மாதாந்தக் கட்டணத்துடன் ஆயுட்காப்புறுதியை பெற்றுக்கொள்ள முடியும்.

• சில நிபந்தனைகள் கருத்திற் கொள்ளப்படும்



**Siva Kandiah**
*Managing General Agent, RBC*
*416•992•1259*

**ROYAL BROKERS**
Corporation

80 Nashdene Ave., unit B26 Toronto ON. M1V 5E4
Tel: 416•298•4722 Fax: 416•298•4664

- Premiums as low as $15 per month
- Safe, private and secure
- 100% tax-free benefits

RBC Insurance
Authorized Agent

Industrial Alliance   Canada Life

• Life Insurance/ Income Protection • Disability/ Critical Illness • Mortgage & Mortgage Insurance • Registered Education Saving Plans
• Travel Coverage • RRSP's, Annuities, RIF's GIS's • Tax Sheltered Savings & Investments



# துகிலுரியப் பட்ட திரௌபதைகள் அன்றுமட்டுமா? . . . . .

- முனைவர் பார்வதி கந்தசாமி

வடமொழியில் ஆக்கப்பட்ட காவியமான மகாபாரதம் இன்றுவரை பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது, அது பாரதியின் கையில் "பாஞ்சாலி சபதம்" ஆகியது. 2500 ஆண்டுகளுக்கு முந்திய கதையின் கரு இன்று இவ்வளவு ஆண்டுகளுக்குப்பின்பும் காலணித்துவ ஆதிக்கத்தின் பின்பும் பேணப்பட்டு பெண் அடிமைத்தனம் என்பதில் பாலியல் அடிமைத்தனக் கட்டு பெண்களை ஆளுமைசெய்வததை அவதானிக்கலாம். ஒழுக்கம், வித்தை கற்பிக்கும் ஆசிரியத்துவம் கூட திரௌபதைக்கு நடந்த கொடுமையைக் கண்டிக்கவில்லை. நீதி மன்றம் இருந்தும் அவளின் அவலக்குரலைச் செவிமடுக்கவில்லை. திரௌபதைக்கு நடந்த கொடுமை "பெண் என்றால் சகல அடக்குமுறைளுக்கும் கட்டுப்பட்டவள்" என்பதைக் காட்டுகின்றது.

அரச அமைப்புக்கள், மனிதன் என்ற ஆண்வர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இயங்குபவை. திரௌபதியின் துகில் உரியப்பட்ட செயல் தனிமனிதனால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒன்று அல்ல. இது அரசு என்ற நிறுவனத்தால் பகிரங்கமாகச் செய்யப்பட்ட பாலியல் துன்புறுத்தலாகும். கைதிக்கூட்டில் வைக்கப்பட்டுக் குற்றவாளியாக்கப்பட்டவள் திரௌபதை. தன்னைப் பாதுகாக்க அவள் பல முயற்சிகளை மேற்கொண்டாள். துணியில் தன்னை மறுபுறமாகச் சுழன்றுகொண்டு முழு நீளத்துகிலினுள் மறைக்க முற்பட்டாள். நீதி கேட்டு ஆர்ப்பரித்தாள். விதி என்ற மதியீனத்தை நொந்தாள். பெண் அரசியல் ரீதியில் அடங்கியவளாக, அதிகாரம் அற்றவளாக வாழ்ந்தமையை மகாபாரதம் காட்டுகின்றது.

பாலியல் வன்முறை இந்திய சமூகத்தில் பன்னெடுங்காலமாக இருந்துவரும் ஒன்று. திரௌபதி, என்ற ஆணாதிக்கச் சமூகத்தால் வார்த்து வளர்த்து எடுக்கப்பட்ட பெண், பண்டைய இந்திய ஆணாதிக்க மரபைக் காட்டி நிற்கின்றாள். பல்வேறு தலைமைகள், அரசர்கள், வணிகர்களின் படுக்கை அறைகளை அலங்கரித்துச் சமூகம் அங்கீகரிக்காத கூட்டமாக தேவதாசிகள், ஆலயங்களின் அமைப்பில் இருந்தமை, பெண்கள் போகப் பொருளாகப் பயன்படுத்த ஆலயங்களும் துணைபோனதைக் காட்டுகின்றது. சங்க காலத்து நூல்களிலேயே "பெண்" என்பவளின் இடம் என்ன என்பதை ஆங்காங்கே குறிப்பாகப் புறங்கூறும் நூல்களில் காணமுடிகின்றது. கணவனைக் குறிக்கும் பொழுது *"கற்புள்ள பெண்ணின் கணவன்"* என்று புறம் கூறுகின்றது. *"செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ"* -புறம் 3. *"மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவ"* -புறம் 314. குறுந்தொகையில் *"ஆணைச்சுற்றி வாழும் செக்குமாடுதான் பெண்"* எனப் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது: *"ஞாயிறு அணையன் தோளி! நெருஞ்சி அனைய*
*என்பெரும் பணைத் தோளே"*

"கல்லானாலும் கணவன்" என்ற கருத்தாக்கம் சங்ககால இலக்கியங்களிலே உருவாக்கம் பெற்றுள்ளமையினால் இந்திய நாட்டுச் சமூக அமைப்பில் பெண் அவமானத்திற்கு ஆளாகினாலும், அவனைப் போற்றி அவன்வழி தொடரவேண்டும் எனப்போதிக்கப்பட்டமைக்கு திரௌபதையின் துகில் உரியும் படலம் நல்ல எடுத்தக்காட்டு.

வரலாற்று நாயகிகளை அவர்கள் தழுவியிருந்த கொம்புகள் காப்பாற்றாத போது அவர்கள் "ஸதி" என்ற வழக்கத்திற்குள் தம்மை மாய்த்துக்கொண்டனர்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மக்கள் "சமூக மீளுருவாக்கம்" என்ற புதுவிதியை வகுத்துக்கொண்டு அதற்கான பலிக்கடாக்களாக்கப் பெண்களை ஆக்கிக்கொள்கிறார்கள். பெண்கள் தற்கொலை செய்தாலும், ஆண்கள் தற்கொலை செய்தாலும் பெண் கொலை செய்யப்பட்டாலும் "பெண்தான்" அதற்கான மூலகாரணி என்று சமூகம் கற்பிக்கின்றது. பெண் சமூகத்தின் சீர்குலைவுகளுக்குக் காரணியாகக் கற்பிக்கப்படுகின்றாள்,. வீதிகளில் திரியும் பரதேசிகளாகவும் கருதப்படுகின்றனர். புராணங்கள் மூலம் "பெண"ணின் நிலை தமிழ் சமூகப். பரப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளது. சமூக நிறுவன அமைப்புக்கள் அவற்றிற்கு அரண் செய்கின்றன. ஈழத்தமிழ் சமூகத்தில் இருக்கும் புரையோடிப்போன சாதி, சமயம் முதலாம் சமூக அமைப்புக்கள் போன்றவற்றை மீண்டும் புலம்பெயர்ந்த நாடுகளில் மிகுந்த வலுவுடன் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். "சமூக மீளுருவாக்கம்" செய்யும்போது சாதி முன்னணியில் நிற்கின்றது. ஊர்ச்சங்கங்களும் பாடசாலைச் சங்கங்களும், நிறுவன ரீதியில் சாதிகளையும், பெண்நிலையையும் சந்தேகத்திற்கிடம் இல்லாதவாறு கட்டமைப்புக்கு உள்ளாகி வருகின்றன. கணவனாலோ, கூட வாழும் ஒருவனாலோ பாடசாலை வாழ்வில் சக ஆண்கள் சிலராலோ, வாழ்வில் நுழைந்த சினேகிதனாலோ, பாலியல் துன்புறுத்தலுக்கோ, புற துன்புறுத்தலுக்கோ ஆளான பெண் ஒருத்தி சமூக அவதூறுகளுக்கும் பழிப்புக்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றாள். காம வெறிக்கு பலியாகிய பெண்கள் வாழ்விலும் புயல்தான் வீசுகின்றது. அவமதிப்பைத் தாங்கி வாழ்க்கையில் ஊனமானவர்களாகத் தங்களைத்தாங்களே உளவியல் பிரச்சினைக்கு உள்ளாக்கி வாழ்க்கையை வெறுக்கின்றனர். இவர்களுக்கு ஒத்தடம் கொடுக்க சமூக அமைப்புகள் கூட இடம் கொடுப்பதை அவர்கள் உணர்வதற்கு எத்தனை காலம் எடுக்கும்? பாலியல் துன்புறுத்தல் திரௌபதிக்கு நடந்தது அன்று ஆனால் எத்தனையோ திரௌபதைகள் இன்றும்கூட புலம்பெயர்ந்த நாடுகளில் துகில் உரியப்படுகின்றனர். ஆலயங்களில், கூட்டம் நிறைந்திருக்கும் இடங்களில்

இளம் ஆடவர் கூடுவதன் காரணத்தால் ஒன்றாக இளம் பெண்களை விளம்பரப் பொருளாகப் பார்த்து, தம் பாலியல் வேட்கைக்கு ஒருவித திருப்தியைக் காண்பதுடன், அவர்களைக் கிண்டலும் கேலியும் செய்கின்றனர். பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வீதிகளிலும் தமிழ் இளம்பெண்கள் தமிழ் இளைஞர்களால் பழிப்புக்கு உள்ளாகின்றனர். பெண்களின் பெற்றோர் இதனைக் குறித்து விஷனம் தெரிவிக்கின்றனர். சில பெண்கள் பற்றிய துண்டுப்பிரசுரங்கள் கூட வினியோகிக்கப்பட்டமை அவதானிக்கக் கூடியது. பாலியல் துன்புறுத்தலைத் தவிர்ப்பதற்காக சிலபெற்றோர் வீடு மாறி, இடம்மாறிச் சென்ற வரலாறுகளும் உண்டு.

உருக்குலைந்து போகும் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளில் பெண் என்ற சமூகத்தின் சரிபாதிகளான பெண்கள், பல நெருக்குவாரங்களுக்கு உள்ளாகின்றனர். தற்கொலையை நாடாது காப்பகங்களை நாடியவர்களின் கதைகளைக் கேட்டால் அவர்களில் பலரும் தங்களின் காப்பகம் தேடிய செயலை அவமானமான செயலாக பெண்களும் ஆண்களும் பேசிக்கொள்வதாகக் கூறுகின்றனர்.

பெண்களுக்கு நாணயம் கோர்க்கும் சடங்குகளாக அவர்கள் பருவம் எய்தியதும் பறைசாற்றும் நிகழ்வு நடைபெறுகின்றது. ஈழத்தில் நிகழாத நிகழ்வுகள் எல்லாம் மிக மிக மேலதிகமாகச் செய்கின்ற போக்கைக் காணமுடியும். விளம்பரப் பெண்கள் போல தோழியர் பலர் உடைகளணிந்து அலங்காரப் பவனியில் குத்துவிளக்குகள் ஏந்தி வலம்வருகின்றனர். ஆண் வர்க்கம் வருவாய்க்காக தூண்டிவிட்டுப் பகடைக்காய்களாகப் பெண்குலத்தை ஆக்கித் தங்கள் அலங்கார மண்டபங்களிலே பல்வேறு புதிய புதிய நிகழ்வுகளைச் சேர்த்து இவர்களை மேலும் மேலும் நுகர வைக்கின்றனர். குதிரைகளிலும் கெலிகொப்டர்களிலும் வந்து பூச்சொரிய இறங்குவது விளப்பரப் பலகைகள் அன்றி வேறென்ன என்று கூறுவது. இந் நிகழ்வுகளைப் பெருங்கனடாப் பத்திரிகைகளும் தொலைக்கட்சிகளும் ஏளனம் செய்கின்றன.

பெண்பார்க்கும் போது பாடிக்காண்பிப்பது தென் இந்திய மரபு என ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தாலும் பிராமணிய மரபிலும் காட்டப்படுகின்றது. கனடாவில் புதிய மரபொன்று தோன்றுவது போலத் தோற்றமளிப்பது பரதநாட்டியம் பயின்று ஆயிரக்கணக்கானோர் அரங்கேற்றம் காண்பது. தேவதாசி மரபிலிருந்து வந்து பரதக்கலை இன்று அரச கலையாக வளர்ந்ததை வரவேற்கும் அதேசமயத்தில் பரதக்கலையைப் பயில விரும்பாத குழந்தைகளிடமும், பயில்வதற்கு வலோக்காரப் படுத்தும் போக்கு பெண்குழந்தைகள் மீதான திணிப்புத்தான்.

மட்டக்களப்பிலும் தென் இந்தியாவிலும் யாழ்மாவட்டத்தில் சிற்சில பகுதிகளிலும் திரௌபதை அம்மன் வழிபாடு உண்டு. துகிலுரிந்தாலும் கற்பைப்பாது காத்தமையைப் பெருமையாக்கி பிற்காலப் பெண்களுக்குக் கற்பின் திறம்பை எடுத்துக்காட்டி அவர்களை அவ்வாறே ஒழுக வைக்கவே புராணியப் பெண்கள் தெய்வங்கள் ஆக்கப்பட்டுள்ளன. கனடாவில் திரௌபதை வழிபாடு உருவாக இன்னும் நாள் எடுக்காது. நிலக்கீழ் வீடுகளிலும், பொருள்வைத்துப் பேணும் அம்பலங்களிலும் கோயில் கொள்ள வைத்து நாற்பதுக்கும் மேலான கோயில்கள் ரொறன்ரோவில் திடுமென ஆரம்பிக்கப்பட்டும் பெண் தெய்வங்களைக் குடியமர்த்திப் பணம் உழைக்கின்றார்களே அன்றி அவர்களின் வாழ்வியல் துன்பங்களுக்கு வடிகால்களாக அவ்வாலங்கள் செய்ல்படுவதில்லை. மாறாக நாளாந்தம் அவை பெண்கள் துன்பியலில் சுழலவும் தங்களைச் சிதைத்துக் கொள்ளவும் துணைபோகின்றனவா? நிறுவனங்களுக்கு சமூகப்பொறுப்பு என்ற ஒரு பணிஉண்டு என்பதை உணரவேண்டும்.

புலம்பெயர்ந்த நாட்டில் திரௌபதைகள் எழுப்பும் குரல்கள் பல்வேறு வகையின, அவை தங்கள் அடையாளம், உடல், பாலியல், வன்முறை, நீதி, மொழி, குடிவரவு, கல்வி போன்ற பல்வேறு வகை சார்ந்தன. அடையாளமோ சுவடுகளோ தெரியாது அழித்து எரிக்கப்பட்ட கனடியத் தமிழ்ப் பெண்களின் ஆவிகள் கூறும் கதைகள் மட்டும் எட்டினால் காவியங்கள் பல படைத்துவிடலாம். பண்பாட்டின் இரு துருவ நோக்கும் கண்டிக்கப்படவேண்டியதே!.


## "Suber 7" Cleaning and Maintenance

Office and Restaurant

Contact: Siva **416.505.2461**
Ranga **416-540-8431**








HOMELIFE
HIGHER STANDARDS

*Higher Standards Agents... Higher Results!*

**Ragu Thambippillai**
Sales Representative

**HomeLife/Future Realty Inc.,** Brokerage*
262 Markham Rd., Scarborough, ON M1J 3C5
**Bus: (416) 264-0101**
Cell: (416) 819-9043 • Fax: (416) 261-1519
Email: ragubama@sympatico.ca
*Independently Owned and Operated. REALTOR®


DUNDAS DENTAL CENTRE
அனைத்து பல் மருத்துவ சேவைகளையும்
மிசிசாகவில் பெற்றுக்கொள்ள...
Dr. Vanathy T. Jeeva D.D.S
Associates:
Dr. Quis Kazala D.D.S
Dr. Boris Zivanovic D.D.S
Dr. Giris Deshpande D.D.S., MDS (Orthodontic)
Dr. Mustafa Abouzqia D.D.S., Dip OMFS, MSE, FRCD (Oral Surgeon)
Dr. Beena Kurien D.D.S
Dr. Annamaria Shieh D.D.S
General Dentistry Including Braces & Implants
Mavis Rd
Hurontario
Dundas Dental Centre
Cawthra Rd
Dundas East
Office Hours
Monday—Friday
10:00 am—8:00 pm
Saturday
10:00 am—5:00 pm
Tel: 905-281-0273
Fax: 905-281-8792
29C Dundas Street East
Mississauga, Ont, L5A 1C9
(Hwy 10 / Dundas)



அன்றும்
இன்றும்
என்றும்..
For professional videography
JEYA VIDEO
production
Jeya
bus: 416 492 7777
cell: 416 436 6666
fax: 416 754 2687
www.jeyavideo.com
e-mail:video@jeyavideo.com
91 havendale road
scarborough on m1s 1e6
JEYA VIDEO
416 492 7777
Panasonic
DVCPRO

2007.10.05
தலைவர் / செயலாளர்
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
அபிவிருத்தி ஒன்றியம் - கனடா

அன்புடையீர்!
கல்லூரியின் அபிவிருத்தி

மேற்படி நமது கல்லூரியான யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மீண்டும் தனது அபிவிருத்திப்பாதையில் வெற்றிகரமாக முன்னேறிச்செல்வதனை தாங்கள் அறிந்திருப்பீர்கள். நவீன கல்வி இலக்குகளை அடைவதற்கு ஏதுவான கட்டுமானங்களையும் செயற்பாடுகளையும் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன்விரும்பிகள் முதலானோரின் உதவிகளுடனும் ஒத்துழைப்புடனும் செறிவாக மேற்கொண்டு வருகின்றோம். கல்லூரியின் அடிப்படைத்தேவைகள் பல நிறைவுசெய்யப்பட்டுள்ளன. கணனிக்கல்வி உட்பட்ட அனைத்துப்பாடவிதான நடவடிக்கைகளும், மென்பந்து துடுப்பாட்டம் உள்ளிட்ட அனைத்து இணைப்பாடவிதானச்செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டு நல்ல விளைவுகளையும் அனுபவித்து வருகின்றன. இந்நிலையில் அபிவிருத்திக்குத் தேவையான பல பாரிய அத்தியாவசியத் தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டியுள்ளது என்பதனைத் தங்களுடன் தொடர்புகொள்ளும்போதெல்லாம் நாமும் பழைய மாணவர் சங்கத் தாய்ச்சங்கத்தினரும் தங்களுக்கு தெரியப்படுத்திவந்துள்ளோம். நம் அனைவரினதும் எமது கல்லூரி தொடர்பான நோக்கு (Vision) நாடளாவியரீதியில் தரம்மிக்க பாடசாலைகளில் ஒன்றாக எமது கல்லூரியை அபிவிருத்தி செய்வதாகும். இதனைத் தாங்களும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

இதேபோன்று எமது கல்லூரிச்சமூகத்திடம் மிகநீண்டகாலத்திற்குப் பின்னர் ஏற்பட்டுவரும் இந்த விழிப்புணர்வுநிலையைப் பயன்படுத்தி கல்லூரியின் அடிக்கட்டுமானத் தேவைகளை நிறைவுசெய்து உண்மையான நிலைத்துநிற்கின்ற (Sustainable Development) அபிவிருத்தியினை ஏற்படுத்தவேண்டியது நம் அனைவரது கடமையுமாகும். இதன்பொருட்டு அத்தியாவசியமான பின்வரும் தேவைகளைத் தங்கள்முன் விரைந்த நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கின்றோம்.

தேவைகள்:-

01) பௌதிகவளம் :-

1.விளையாட்டு மைதானம் :-

தற்போதுள்ள விளையாட்டு மைதானம் 410அ ஓடுதளம் அமைப்பதற்கு போதுமானதன்று. அத்துடன் துடுப்பாட்டம் முதலான அனைத்து விளையாட்டுக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அவற்றுக்கான பயிற்சிகளை எடுப்பதற்கு இருக்கின்ற மைதான அளவு போதுமானதாக இல்லை. மேலும் பார்வையாளர் அரங்கு, புள்ளிப்பலகை (Score Board) முதலான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் மைதானவிஸ்தரிப்பு அவசியமாகும். இதில் முதற்கட்டமாக தற்போதுள்ள மைதானத்தின் கிழக்கு தெற்கு பகுதிகளில் 17 பரப்புக்காணி கொள்வனவு செய்யப்படவேண்டியுள்ளது. இதற்கான முயற்சிகளில் நமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினர் தற்போது முழுமனதோடு ஈடுபட்டு வருகின்றனர்.

2.உள்ளக விளையாட்டரங்கு :-

கல்லூரியில் தற்போது ஒரு பிரமாண்டமான ஆராதனை மண்டபத்திற்கான கட்டுமானவேலைகள் உலகவங்கி நிதியுதவியுடன் நடைபெற்றுவருகின்றன.

முன்னர் இருந்த ஆராதனைமண்டபமான இராஜலிங்கம் மண்டபம் யுத்த அனர்த்தத்தினால் சேதமுற்றிருந்தது. அதன் பார்வையாளர் அரங்கு (பல்கணி) கடும்சேதத்திற்குள்ளானமையால் அதனை பாரிய பொருட்செலவில் அகற்றித் துப்பரவுசெய்து அதன் எஞ்சியபகுதியினை உள்ளக விளையாட்டரங்கு ஒன்று அமைப்பதற்கேற்றமுறையில் வைத்திருக்கின்றோம். அதன் சுவர்களை திருத்தஞ்செய்து கூரை போடுவதற்கு ரூ. 1,000,000/= தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

02) கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்பானவை :-

1. ஆசிரியர், ஆளணிப் பற்றாக்குறை :-

கல்வி நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் சில பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. குறிப்பாக ஆங்கிலம், கணனிக்கல்வி போன்ற பாடங்களை கற்பிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லை. கல்வித்திணைக்களத்திலும் இவ்வகை ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடுகள் நிலவுகின்றன.

எமது பாடசாலையில் ஏற்கனவே ஆங்கில ஆசிரியர் ஒருவரும் கணனி ஆய்வுகூட உதவியாளர் ஒருவரும் லண்டனில் வதியும் திரு. செ. செல்வச்சந்திரன் மற்றும் இங்குள்ள அவரது சகோதரர் திரு. செ. இராசேந்திரம் ஆகியோரின் நிதியுதவியுடன் கடமையாற்றி வருகின்றனர். எனினும் தகவல் தொழில் நுட்பப் பாடங்களைக் கற்பிப்பதற்கு உரிய தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் போதாதுள்ளது. இதற்குப் பொருத்தமான ஆளணியினரின் சேவையை வெளியிலிருந்து பெறக்கூடியதாகவுள்ளதெனினும் அவர்களுக்கான வேதனக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான வசதிவாய்ப்புக்கள் எதுவுமற்ற நிலையில் நாமுள்ளோம்.

இவ்வாறே பாடசாலையின் அலுவலகக் கடமைகளை மேற்கொள்வதற்கென நியமிக்கப்பட்டிருந்த முகாமைத்துவ உதவியாளர்கள் இருவர் இலங்கை அரசின் கொள்கை மாற்றத்திற்கமைய கடந்த ஜூன் மாதம் முதல் ஆசிரியர்களாகப் பதவி மாற்றப்பட்டு வேறு பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். நமது பாடசாலை போன்ற பெரிய பாடசாலைகளில் அன்றாட அலுவலகக் கடமைகள் பெரும் சுமையாகவே காணப்படுகின்றன. ஏற்கனவே பெரும் வேலைப் பழுவுடன் பணியாற்றிவரும் ஆசிரியர்களே தற்போது இவ் அலுவலக்க் கடமைகளையும் சேர்த்துச் செய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதனால் அவர்களது ஆசிரியக் கடமைகள் பாதிப்படைய வாய்ப்புள்ளது. அலுவலகக் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதற்குப் பொருத்தமான ஒருவரை வெளியிலிருந்து நியமிப்பதே இதற்கு மாற்றீடாக அமையும்.

எனவே தகவல் தொழில்நுட்பப் பாட ஆசிரியர் ஒருவரையும் அலுவலக முகாமைத்துவ உதவியாளர் ஒருவரையும் நியமித்து அவர்களுக்கான வேதனத்தினை வழங்குவதற்கு தங்களது பழைய மாணவர் சங்கக் கிளை ஆவன செய்துதவ வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்க்குடா நாட்டில் முன்னணிப் பாடசாலைகள் பலவற்றிலும் முகாமைத்துவ உதவியாளர்கள் பழைய மாணவர் சங்கங்களின் நிதியுதவியுடனேயே நியமிக்கப்பட்டு பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2.நூலக அபிவிருத்தி:

இக்கல்லூரிக்கென ஒரு கவர்ச்சியான நூலகம் அமைக்கப்பட்டுள்ளபோதிலும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பயிலும் எமது கல்லூரியில் குறித்த அளவான மாணவர்களே அதனைப் பயன்படுத்தக் கூடிய சூழலே காணப்படுகின்றது. இதனை நிவர்த்திக்கும்பொருட்டு கனிஷ்ட பிரிவினருக்கான நூலகமொன்றை (Junior Library) உருவாக்குவதென முடிவுசெய்யப்பட்டு அதற்குரிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளபோதிலும் போதிய நூல்களோ தளபாடங்களோ இல்லாத நிலையில் அதனை முறையாகப் பயன்படுத்த முடியாதுள்ளது.

எவ்வாறாயினும் கடந்த 2005 ஆம் ஆண்டில் வடமராட்சிப் பிரதேசப் பாடசாலை நூலகங்களிலேயே சிறந்த நூலகமாக எமது நூலகம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பரிசு வடக்கு - கிழக்கு மாகாணசபையினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

3.கற்பித்தல் உபகரணங்கள், துணைச் சாதனங்கள் :

நவீன கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இன்று இலத்திரனியல் சாதனங்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. எம்மிடமிருக்கின்ற இலத்திரனியல் சாதனங்களைக் கொண்டு இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பாடசாலைக்கென ஓர் Digital ஏனைநழ Camera, Digital Still Camera உம் தேவைப்படுகின்றன. இவை கிடைக்கப்பெறுமாயின் பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழா முதலான விழாக்களை படம் பிடிப்பதற்கு ஏற்படும் செலவுகள் மீதப்படுத்த முடியும் அத்துடன் இக்கருவிகள் கிடைக்கப்பெறுமாயின் பாடசாலையில் ஒரு தொடர்பாடல் நிலையம் (Media Unit) ஆரம்பித்து மாணவருக்கு பயிற்சி வழங்கவும் முடியும்.

கடந்த காலங்களில் எமது பிரதேசம் பெரும் நெருக்கடி நிலைக்குள் இருந்தபோது எமது பிரதேசப் பாடசாலைகளில் தவணைப் பரீட்சைகளை நடத்துவதற்கான வள வசதிகள் இல்லாத நிலையில் எமது பாடசாலையின் வளங்களையும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பினையும் பயன்படுத்தி பெரும் பிரயத்தனத்துடன் பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்டு வழங்கி எமது தேவையையும் நிறைவு செய்ததோடு எமது பாடசாலைக்கு பொருளாதார ரீதியான இழப்புக்கள் இல்லாதவாறு அயலிலுள்ள பெரிய பாடசாலைகளினது தேவையையும் நிறைவுசெய்ய முடிந்தது. இதன்மூலம் எமது பாடசாலையின் முக்கியத்துவமும் செயற்றிறனும் பல்வேறு மட்டங்களிலும் உணரப்பட்டது. இவையனைத்தையும் இரட்டித்தல் பிரதியெடுக்கும் இயந்திரத்தின் உதவியுடனேயே (Ronio Mechine) செய்யப்பட்டன.

இந்நிலையில் எமது பாடசாலைக்கு இலத்திரனியல் பிரதியெடுக்கும் இயந்திரத்தின் (Electronic Copier) தேவை உணரப்பட்டது. இவ்வாறானதொரு இயந்திர வசதி கிடைக்குமாயின் தற்போது பெரும் பொருட்செலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் எமது பாடசாலையின் பல்வேறு அச்சிடல் தேவைகளும் இலகுவாக பெரும் நிதிச்செலவின்றி நிறைவேற்றப்படமுடிவதோடு தவணைப் பரீட்சை வினாத் தாள் அச்சிடல் மூலம் நிதி வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

03) விளையாட்டுச் செயற்பாடுகள் :

இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறப்பாக விளையாட்டுக்களிலும் மெய்வல்லுநர் நிகழ்வுகளிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தனக்கென ஓர் தனியான இடத்தில் கல்லூரி தக்கவைத்திருப்பதனை தங்களுக்கு அறிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். பங்குபற்றும் விளையாட்டுக்களில் மாகாணமட்டத்தையும் தாண்டி தேசிய மட்டம் வரையில்

போட்டியிடுவதற்கான தகுதிகள் வருடாவருடம் ஏற்பட்டு வருகின்றன. உதைபந்தாட்டம், சதுரங்கம், மேசைப்பந்து, துடுப்பாட்டம், மெய்வல்லுநர் போட்டிகள் என்பவற்றில் இவ்வருடமும் சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. இவற்றுக்கென ஒரேயொரு உடற்கல்வி ஆசிரியர் மாத்திரம் தொழிற்பட்டு இவற்றை சாதித்துவருகின்றார் (திரு. இ. இராஜசீலன்) பயிற்சியாளர்கள் நியமிக்கப்படவேண்டிய அத்தியாவசிய தேவையுள்ளது. தற்போது ஒரு பயிற்சியாளர் துடுப்பாட்டப் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோதிலும் இவருக்கான கொடுப்பனவு எதனையும் வழங்கமுடியாத நிலையிலுள்ளோம். இவர் எமது கல்லூரியில் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை துடுப்பாட்ட உபகரணங்கள் அனைத்தும் அதிக விலையுள்ளனவாகக் காணப்படுவதோடு பயிற்சியின்போதும் போட்டிகளின்போதும் பழுதடைந்தும் தேய்மானத்திற்குட்பட்டும் பயன்பாட்டுக்கொவ்வாத நிலையை அடையும்போது அவற்றுக்கு மாற்றீடு செய்வதில் பெரும் நிதிச்சுமையை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

உதைபந்தாட்டத்திற்கென ஒரு பயிற்சியாளர் தற்போது இல்லாத நிலையில் கடந்த காலங்களில் யாழ்ப்பாணப் பாடசாலைகளிடையே உதைபந்தாட்ட ஜாம்பவான்களாகத் திகழ்ந்த எமது கல்லூரி அணிகள் தற்போது சற்று தொய்வுநிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. பொருத்தமான பயிற்சியாளர் ஒருவரை நியமிப்பதினூடாக இந்நிலையை நிவர்த்திசெய்யலாம். இவர்களுக்கு மாதாமாதம் நிதி ஊக்குவிப்புக்கள் வழங்கப்படவேண்டிய தேவையுள்ளது.

கல்லூரியின் ஏனைய தேவைகள் :

1. பாண்ட் வாத்தியக்கருவிகள் (மேலைத்தேயம்)
2. பாண்ட் வாத்தியக்கருவிகள் (கீழைத்தேயம்)
3. உதைபந்தாட்ட உபகரணங்கள்
4. துடுப்பாட்ட உபகரணங்கள்
5. மெய்வல்லுநர் பயிற்சி உபகரணங்கள்
6. உடற்பயிற்சி உபகரணங்கள்
7. மைதான பராமரிப்பு உபகரணங்கள்
   உ-ம்: Grass Cutter Machine
8. மேசைப்பந்து உபகரணங்கள்

எமது பாடசாலையின் மேற்படி தேவைகளைக் கருத்திற்கொண்டு இவற்றினை நிவர்த்தி செய்வதற்கு கனடாவிலுள்ள கல்லூரியின் பழைய மாணவர்களாகிய தாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஆவன செய்யவேண்டும் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.

செ.சேதுராஜா
அதிபர்

VEERAR
Take Out & Catering
வீரர் கேற்றரிங்

பிரதி செவ்வாய் வெள்ளி
தோறும் 10
மரக்கறிகளுடன்
சாப்பாடு 3.99 மட்டுமே!

* Birthday
* Anniversary Parties
* Wedding
* Anthiyedi
* Puberty&All Special Events

திருமண விழாக்களா?
பிறந்தநாள் விழாக்களா?
பூப்புனித நீராட்டு விழாக்களா?
வீட்டுக்கு விருந்தினர் வருகையா?
தரமான உணவுவகைகளுக்கு
அழையுங்கள்..

வீரரின் புதிய அம்சம் காலை 8மணிமுதல்
புத்துணர்வூட்டிடும் கோப்பியும் வடையும்.



416-299-4541
5790 Sheppard Ave E, Unit3
Scarborough,Ontario M1B 5J7

உங்கள் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி.

RE/MAX®

#1 NEGOTIATORS

THINKING TO BUY OR SELL YOUR HOME

call DEVA for

friendly & professional service

416.570.6448

dgasperson@hotmail.com

RE/MAX DEVA GASPERSON

Sales Representative

Above the Crowd! RE/MAX®

Executive Realty Inc [1996] Brokerage

MLS

416.285.8555

*Never satisfied.. until you are!*




WIRE Magic
SOUND & SECURITY Inc.
416.754.9792
5210 Finch Ave., East. Unit #25
Scarborough, Ont., M1S 4Z8
www.wiremagic.ca
REMOTE STARTERS
CAR ALARMS
HID LIGHTS
CAR AUDIO
MOBILE VIDEO
FOG LAMPS
AUTO TINTING
AUTO ACCESSORIES
PERFORMANCE ACCESSORIES
ANY AUTO ELECTRICAL WORK
Cell: (416) 910.3121
Ratheesh Ratnam

# நீங்காத நெல்லியடி நினைவுகள்

வித்துவான் ஆ. தா. ஆறுமுகம் B.A
முன்னைனாள் ஆசான்.

அரசாங்கப் பாடசாலை ஆசிரியனாகவே முழுக்காலமும் சேவை செய்தேன். முதல் நியமனம் பெற்றிருந்த வெலிமடையிலிருந்து அரைச் சம்பள லிவில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்துக்கான இரண்டாண்டுகால வதிவிடப் பயிற்சி நிறைவெய்தியபோது, நெல்லியடி ம.ம.விக்கு தந்தியில் இடமாற்றம் பெற்றேன். வித்தியாலயத்தின் அயலில் திரு. ஐயாத்துரையின் வீட்டில் வாழ்ந்து கொண்டு சேவையில் ஈடுபட்டிருந்தேன். சில நாளில் திருவாளர்கள் குமாரசாமி, மனுவேற்பிள்ளை, இராசையா, தியாகராசா என்போரும் இணைந்துகொண்டனர். முதலிருவருக்கும் வித்தியாலயத்துக்கு அண்மையில் வாடகைக்கு வீடுகள் கிடைத்தன. மற்றைய இருவரும் ஆண்கள் விடுதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். நாங்கள் நால்வரும் நாலு அல்லது ஐந்து மணிமுதல் ஏழெட்டு மணிவரை ஆண் பிள்ளைகள் விடுதிப் பொறுப்பாளர் அறையில் அல்லது சூழலில் கூடியிருந்து பல்வேறு அபிவிருத்திப் பணிகளில் அல்லது நல்ல பொழுதுபோக்குகளில் ஈடுபடுவோம். திரு. மனுவேற்பிள்ளை நல்ல சிந்தனையாளர். ஆங்கிலம், விஞ்ஞானம், விளையாட்டு என எலலாத்துறைகளிலும் பொதுவான திறமை பெற்றிருந்தார். அவருடைய அநுபவமும் ஆற்றலும் எங்கள் கூட்டுச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தன. சில ஆண்டுகளின்பின் திரு. சச்சிதானந்தமும் சேர்ந்து கொண்டார். ஆண்கள் விடுதி மாணவர்க்கென, தனியான விளையாட்டுப் போட்டி நடத்தினோம்! நல்ல பலனும் கிடைத்தது. மூன்று இல்லங்களாகப் பிரித்தபோது சங்கரலிங்கம் ஒரு இல்லத் தலைவராகியிரந்தார். மேற்பிரிவில் ஓடுவதற்குப் போதிய ஆளில்லை. அதனால் சங்கசரலிங்கமும் ஓட்டப்போட்டியிற் பங்குகொண்டாக வேண்டியிருந்தது. போட்டி நிகழ்ந்தது. பல செக்கன் முன்னணியில் முதலாக வந்தவர் சங்கரலிங்கம்! அதுவரை, தான் ஓடக் கூடியவன் என அவருக்கே தெரியாது. அடுத்து நிகழ்ந்த வித்தியாலயங்களுக் கிடையேயான ஓட்டப் போட்டியிற் பங்கு பறறிப் பரிசும் பெற்றார். சீதாதேவியைத் தேடிவந்த வானரர் கடல் கடந்து இலங்கையிலும் போய்த்தேட வேண்டியிருந்தது. கடலைக் கடக்கும் ஆற்றல் கொண்டவர் அநுமார்தான் என மற்றையோர் முடிவு செய்தனர். அநுமார் தன்னால் அது முடியும் என்று நம்வில்லை. தன்பலம், திறமை தனக்குத் தெரியாதிருந்தார். தூண்டுதலுக்கிணங்கிப் பாய்ந்தபோதுதான் அவருக்குப் புரிந்ததாம். அந்த நிலைதான் சங்கரலிங்கத்துக்கு இருந்தது.

சிறந்த வீரனுக்கான வெள்ளிக் கிண்ணம 'TRAKM' கம்பனியின் நன்கொடை என அறிவிக்கப்பட்டது. கூடியிருந்த அதிபர், ஆசிரியர், மாணவர் இந்தக் கம்பனி எங்கிருக்கின்றது என ஆச்சரியப்பட்டனர். அடுத்த மாதம் விடுதி மாணவர் மன்றக்கூட்டத்திலேயே 'TRAKM' எமது பெயர் முதல் எழுத்துக்களால் ஆக்கப்பெற்ற கம்பனி எனத் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுப் போட்டிகளுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்கு மாலை நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளுவேன். விடுதி மாணவர் மட்டுமன்றி வீட்டிலிருந்து வந்து போகின்ற மாணவர்களும் நின்று பயிற்சி பெறுவர். குறித்த எழுத்துக்களை, சொற்களை நீட்டி அழுத்தி உச்சரிக்கும் பயிற்சி அளிக்க வகுப்பு நேரத்திலும் மாலை நேரம் உகந்ததாய் இருந்தது. எமது மாணவர் பலர் போட்டிகளில் பரிசு பெற்றனர். குறிப்பாக, வடமாகாண ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சுப் போட்டிகளிற் பரிசில்கள் பெற்றதுடன் மேற்பிரிவில் கரவெட்டி சி. ஸ்ரீஸ்கந்தராஜாவும் அடுத்த ஆண்டு அல்வாய் பஞ்சலிங்கமும் முதலாமிடம் பெற்றமை சாதனையாகக் கருதப்பட்டது.

அப்போது அதிபராயிருந்த திரு. ஏ.ரி.சபாரத்தினம் சிறந்த ஆளுமையும் சாணக்கியமும் வாய்ந்தவர். எவரிடமும் வேலை வாங்குவதில் திறமைசாலி. அவர் வந்தபோது புலமைப்பரிசில் பெற்றுப் படித்துக்கொண்டிருந்த பரஞ்சோதி என்ற மாணவன் சித்திரம் ஒரு பாடமாக எடுத்து, க.பொ.த.ப. (சாதா) சித்தியடைந்தார். அந்த மாணவன் நல்ல திறமையாளன் என மட்டிட்டுக் கொண்டார். அந்நாளில் புலமைப் பரிசில் பெறுபவர் ஒரு வகுப்பில் இரண்டு ஆண்டு இருக்கலாம். வேறுமாணவர்களையும் சேர்த்து. க.பொ.த.ப. உயர்தர விஞ்ஞான வகுப்புத் தொடங்கினார். சிறந்த ஆசிரியர்கள் எனத் தெரிந்தவர்களை அல்லது யாராவது சிபார்சு செய்தவர்களை நெல்லியடிக்கு மாற்றிவித்துவிடுவார். வேலணை ம.வி., மலையகம் முதலான இடங்களில் புலமைப்பரிசில் படிக்கும் மாணவர்களையும் மாற்றி எடுத்து மாணவர் தரத்தையும் உயர்த்தி இருந்தார். பௌதிகம், இரசாயனம், உயிரியல் என்பவற்றிற்கு தனித்தனி ஆய்வு கூடங்கள் நிறுவினார். ஒரு நாள் அதிபருடன் உரையாடியபோது க.பொ.த.ப (சாதா) வகுப்பில் மாணவர் தலைவனாயிருந்த நெல்லியடி தருமராசாவின் ஆளுமை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அம்மாணவன் உயர்தர வகுப்பில் இருந்தபோது "ஆய்வு கூடத்திற்கு ஒரு உதவியாள் தேவை; உங்கள் தருமராஜா விரும்பினால் விண்ணப்பிக்கச் சொல்லுங்கள்" என்றார் அதிபர். எனக்குப் பெரும் வியப்பும் மகிழ்ச்சியும். யாழ். கல்வித்திணைக்களத்தில் பணிப்பாளருடன் அதிபரும் இருந்து நேர்முகத் தேர்வு செய்தார். வேறு பாடசாலைகளில் கற்று விஞ்ஞானக் கல்வியில் திறமை பெற்றவர்களும் விண்ணப்பித்திருந்தனர். பணிப்பாளரே தருமராஜாதான் தகுதியானவர் என்று

தீர்மானிக்கத்தக்க வாறு கேள்வி கேட்டார் அதிபர். நியமனம் பெற்ற தருமராஜா, அதிபர் என்னிடம் பாராட்டுத் தெரிவிக்கும் அளவிற்கு சிறப்பாக நிருவகித்தார். பின்னர் எழுதுநராக தெரிவு செய்யப்பட இந்தச் சேவை பெரிதும் பயன்பட்டதாம்.

முதன் முதல் தமிழிலே விஞ்ஞானம் கற்பிக்கத் தொடங்கியவர் இந்த அதிபர்தான். தமிழிற் படிப்பித்தாலும் ஆங்கிலத்தை முற்றாகக் கைவிட்டு விடவில்லை. இவர் துணிந்து தொடங்கிய தமிழில் விஞ்ஞானக் கல்வி வெற்றியளித்தது கண்டு மற்றை கல்லூரிகளிலும் அங்கனம் செய்யத் தொடங்கினர். பரஞ்சோதி, குலத்துங்கம், இந்திராணி முதலானோர் மருத்துவத்துக்கும் கோபாலபிள்ளை, சங்கரலிங்கம் என்போர் கணிதத் துறைக்கும் முதன் முதல் தெரிவாகினர். முருகேசு, அன்னமுத்து, தனபாய்க்கியம், சரோஜினிதேவி என்போர் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகினர். நெல்லியடி ம.ம.வியின் பெயர் பிரகாசிக்கத் தொடங்கிற்று.

நெல்லியடி ம.ம.வி வேற்றூர் மாணவர்களையே முன்னேற்றியிருக்கிறது என்ற கருத்து ஊரவர் சிலரிடத்தில் விதைக்கப் பெற்றறது. ஓடுகிற மாட்டோடு ஓடினால்தான் மற்ற மாடும் ஓடும்; வேற்றூராயினும் அவர்களோடு போட்டியிட்டதனால் ஊரவரும் கல்வியில் ஊக்கம் பெற்றனர்; அவர்களும் வந்தமையாலேதான் தனித்தனி விஞ்ஞான ஆய்வு கூடங்கள் முதலான பல விசேட வசதிகளைக் கல்வித் திணைக்களம் நெல்லியடிக்குத் தந்தது. தெரிவானோரிற் பலர் பேற்றூரவராயினும் பெருமையும் புகழும் நெல்லியடிக்கே என்ற உண்மைகளைப் பின்னர் ஏற்றனர்.


க.பொ.த.ப(சாதா) வகுப்பில் மூன்று நாலு பிரிவுகள் இருந்தன. அந்நாளில் பெற்றோர் எல்லேரும் தங்கள் பிள்ளைகள் விஞ்ஞானப் பிரிவற் சேர்ந்து படிக்கவேண்டும் என்ற ஆசையலை மிகப்பலமாக வீசிக்கொண்டிருந்தது. ஆசிரியர் சங்கக் கூட்டத்திற் கலந்துரையாடி கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் C பெற்றவர்கள்தான் விஞ்ஞானப் பிரிவுக்குத் தகுதிபெறுவர் என்ற விதியை ஏற்படுத்தினோம். C பெறாதவர்களை விஞ்ஞான பாட ஆசிரியர்கள் ஏற்கமுடியாது என்று உறுதியாக நின்றனர். உயர்தர வகுப்புக்குத் தகுதியுடையவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பை ஆசிரியர் சங்கம் என் தலைமேற் சுமத்தியது. விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரிவு செய்யப்படாத சில பிள்ளைகளின் பெற்றோர் என்னைக் குற்றம் சொன்னதுமுண்டு. இதன் மறுதலையும் நிகழ்ந்தது அப்போதன்று; பின்னொருநாளில்.
பேரன் என்ற புனை பெயரிற் சிறுகதை எழுத்தாளனாகப் புகழ் பெற்றிருந்தவர் எமது பழைய மாணவன் நெல்லியடி பேரம்பலம். தபால் திணைக்களத்திற் பதவி வகித்துக் கொண்டிருந்தார். கொழும்பிற் சந்தித்தபோது நெல்லியடி வாழ்க்கை பற்றிக் கலந்துரையாடி மகிழ்ந்து கொண்டிருந்தோம். இடையிலே, “Sir, நீங்கள் என் வாழ்க்கையைப் பிழையான வழியிலே திருப்பிவிட்டீர்கள். விஞ்ஞான வகுப்புக்குப் போகமால், கலைப்பிரிவிற் படித்திருந்தால் பல்கலைக் கழகத்தில் உயர்வான பட்டங்கள் பெற்றிருப்பேன்; அதிபரும் நீங்களும் வகுத்த தெரிவுத்திட்டத்தின் பிழை” என்று நாகரீகமாகச் சொன்னார். அப்போது “உங்களை விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரிவுசெய்தேனே தவிர அப்பிரிவிலேதான் படிக்கவேண்டும், கலைப்பிவுக்குப் போகக் கூடாது என்று தடுக்க வில்லையே!” என்றேன்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் இதே வகையான பொறுப்பு எனக்கிருந்தது. கௌசலை என்ற மாணவி மிகப் பாராட்டுக்குரிய வகையில் தமிழ்க் கட்டுரை எழுதுவார். கற்பனை வளம் மிக்கதாக இருக்கும். கணித விஞ்ஞானங்களிலும் ஓரளவு திறமை இருந்தது. அவர் விஞ்ஞான பிரிவுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தபோதும், அவருடைய பெற்றோரிடம் “கலை வகுப்புக்கு விடுங்கள், கலாநிதிப்பட்டம் பெற்றுச் சிறந்த அறிஞராகப் போற்றப்படுவார்” என்று கூறினேன். அவர்கள் எனது ஆலோசனையைப் புறந்தள்ளவில்லை. பலருடனுங் கலந்து ஆராய்ந்தனர். பின்னர் சாதகத்தின்படி செய்வோம் என முடிவு செய்து, சாதக பலன்படி விஞ்ஞான பிரிவிற் சேர்த்தனர். அந்தப்பிள்ளை வைத்திய கலாநிதியாகத் தேறியிருக்கிறார்; ஆனால் அதற்குமேற் போனதாகத் தெரியவில்லை. எமது உறவினரான ஸ்ரீபதியைக் கலைப் பிரிவிற் படிக்கவிடும்படி பெற்றோருக்குச் சொன்னேன்; தீவிர ஆலேசனையின் பின் விஞ்ஞான பிரிவிலேதான் சேர்த்தனர். அவரத் இரசாயனப் பேராசிரியராக விளங்குகிறார். ஆயினும் இவ் விருவரும் கலைப்பிரிவில் படித்திருந்தால் இன்னும் பிரகாசித்திருப்பர் என இன்றும் நான் கருதுகிறேன். பெற்றார் தமது ஆசையை அடக்கிக்கொண்டு, பிள்ளைகளின் ஆற்றல் ஈடுபாடு என்பவற்றுக்குத் தகவே பாடந் தெரிவு செய்யவேண்டும் என வலியுறுத்திக் கூறுகிறேன். வேறும் பல அநுபவங்களை முன்னிறுத்தி இக்கருத்தை இன்றைய பெற்றாருக்கு அறிவுரையாகத் தெரிவிக்கின்றேன்.


நெல்லியடி நினைவுகள் இன்னும் ஆயிரம்; ஆயிரம். எழுதினால் அளவுக்கு விஞ்சிவிடுமே!

# AMAX

## Auto Repair & Collision Ltd



- Air Bags Diagnostic & Replants
- Body Works
- Car Wash
- Drive Clean
- Exhaust Repair
- Fuel Injector Clearance
- Gas Tank New & Rebuild
- Heating & Air Conditioning
- Inspection & Diagnostic
- Japanese Used Parts & New Parts
- Kit for Model Car
- Lights
- Mufflers (Performance)
- Oil Change
- Painting
- Quality Service & Parts
- Radiator (New Only)
- Starter Motor & Alternators
- Transmission (Rebuild & Used)
- Under Car Coating
- Vehicles Sales
- Wheel Alignment




We do provide **Towing Services** in the Greater Toronto Area,
All of our services are handled by **Certified Professional**

**2250 Markham Road, Unit #8, Scarborough, ON M1B 2W4**
**Tel: 647 892 5142 Fax: 416.321.0749**
**www.amaxauto.ca E-mail: service@amaxauto.ca**

# SKL LIQUIDATION

**All Kinds of Electronics Wholesale/Retails**

**உங்களுக்குத் தேவையான**
**சகல எலக்ரோனிக்ஸ் பொருட்களுக்கும்**
**மலிவு விலைகளில் நம்பிக்கையுடன் நாடுங்கள்**




கனடாவின் தமிழ் வானொலி அலை வரிசைகள் பெற்றுக் கொள்ளக்கூடிய வானொலிகள் மலிவாகக்கிடைக்கும்.

**Tel: 416-291-2299**

**1220 Ellesmere Rd., Unit: 6, Scarborough (Midland & Ellesmere)**


SUNOCO
CountryStyle
With Drive Thru
Retailer: Raj Jeyakumar
TOUCHFREE
ecowash
entrance
Touch Free Car Wash
OPEN 24HR
ULTRA
94
7635 Markham Road, Markham, L3S 3J9
tel: 905.201.6087

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் அபிவிருத்தி ஒன்றியம் - கனடா

# Nelliady Madhya Maha Vidyalayam Development Ontrium – Canada

A Registered Non-Profit Organization – Reg. OCN-1746090


**Executive Committee**

**President**
Mr. C. Ambihavaran
416-792-0662

**Vice President**
Mr. K. Kantharupan
416-291-3997

**General Secretary**
Mr. K. Kularajendram
416-286-0895

**Asst. Secretary - Arts**
Mrs. N. Sivayogan
416-999-3405

**Asst. Secretary - Sports**
Mr. T. Ganapathipillai
416-412-3883

**Treasurer**
Mr. N. Thiraviam
416-332-8738

**Asst. Treasurer**
Mr. K. Varnacumaaran
416-844-7390

**Committee Members**
Mr. T. Matheeswaran
Mr. K. Thavarupan
Mr. S. Vinayagamoorthy
Mr. K. Pushphanathan
Mr. M. Manoharan
Mr. S. Ganeshamoorthy
Mrs. R. Tharmarajah
Mrs. M. Amirthalingam

**Auditors**
Mr. K. Sivagnanam
Mr. A. Rasaratnam

**Editor**
Mr. T. Sivabalu


செயலாளரின் எழுதுகோலிலிருந்து. . . .

எமது மத்திய மகாவித்தியாலய கனடா ஒன்றியம், தாய்மண்ணுக்கும் வாழ் மண்ணக்கும் பெருமை சேர்க்கின்ற கலைவிழாவிற்கும் வருகைதந்துள்ள அனைத்து எமது பாடசாலை உறவுகளையும், புலம்பெயர்ந்து வாழ் இனிய உள்ளங்களையும், "நெல்லைத் தீபம்-2007" ஏற்றப் பலவழிகளிலும் உறுதுணையாக இருந்த இனியவர்களையும் நினை விருத்திக்கொள்கின்றேன்.

ஒரு விழா எடுப்பது என்பது மிகச் சிரமமான ஒன்று. அத்துணை சிரமங்கள் மத்தியிலும் எமது வித்தியாலய பழையமாணவர்களை ஒன்றுசேர்த்து பெருவிழாவாகக் கொண்டாட முடிவு செய்து நாம் ஒரு குழுவாக இயங்கினோம். இந்த விழாவை முன்னெடுப்பதில் முனைப்புக் காட்டியவர்கள் எமது மகாவித்தியாலயம் வளர்த்தெடுத்த அருந்தவப்புதல்வர்கள் என்றால் மிகையாகாது. "ஒருமைக்கண் தான் கற்றகல்வி எழுமையும் ஏமாப்படைத்து" என்கின்றார் வள்ளுவப் பெருந்தகை. எமக்கெல்லாம் பெருமைதேடத்தக்க கல்வியறிவையூட்டிய அத்தாயின் பெயரால் நாம் இன்று ஒன்றாகக் கூடி மகிழ்வதோடு மட்டுமன்றி எமது அன்னையை நினைவுகூரும் ஒரு நன்னாளாகவும் இதனை ஏற்பாடு செய்துள்ளோம்.. எமது கல்வித்தெய்வத்தின் தேவைகள், நாம் செய்யவேண்டிய பணிகள் பற்றிச் சிந்தித்துச் செயற்படத் தூண்டும் வகையில் இந்த விழா எமக்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு.

இந்த விழாவை ஒழுங்கு செய்வதற்கு நேர, கால பொருள்வகையாகப் பல வழிகளிலும் உதவி செய்த அன்பர்களுக்கும், கலைவிழாவுக்கான அரங்கத்தை ஒழுங்குசெய்வதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட M R S KITCHEN, நிகழ்ச்சிகளை ஒளிப்படப் பதிவு செய்வதற்கான ஆதரவை நல்கிய SKC Canada Inc., மேடையமைப்புக்கு ஆதரவு நல்கிய MEGA FINANCIAL GROUP. ஒலி, ஒளி அமைப்புச் செய்து உதவிய ஸ்ரீ துர்க்கா சவுண்ட் பத்மராஜன், எம்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், உறுப்பினர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கும்,

நெல்லைத் தீபம் 2007 மலருக்கு விளம்பரங்களைத் தந்து விழாவையும் மலர் வெளியீட்டையும் சிறப்புற இடம்பெற நிதி உதவி செய்த அனைத்து அன்புகூர் வர்த்தகப் பெருமக்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும், மலருக்கு விடயதானங்களைத் தந்துதவிய பெருந்தகைகளுக்கும், மலரைச் சிறப்புறத் தயாரித்த மலர்க்குழுவினருக்கும், கலை நிகழ்ச்சிகளைத் தந்து விழாவைச் சிறப்பித்த கலைஞர்களுக்கும், மாணவர்களை நெறிப்படுத்தி மேடையேற்ற அரும்பாடுபட்ட ஆசிரியர்களுக்கும், அவர்களுக்கு ஆதரவாக இருந்து உற்சாகத்தோடு ஈடுபடத்தூண்டிய குடும்பத்தினருக்கும், விளம்பரம் செய்து எங்கள் விழாப் பற்றி வெளிபடுத்த உதவிய தொலைக்காட்சி நிறுவனங்கள், செய்தி இதழ்கள், வானொலிகள் போன்ற ஊடகங்களுக்கும்

மலரை மிகக் குறுகியகாலத்தில் அழகுற அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும், இசை நிழக்சிசகளை வழங்கிய இசைக்குழுவினருக்கும், புகைப்படப்பிடிப்பாளர்களுக்கும், ஏனைய நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கிய அனைத்து அன்புகூர் உள்ளங்களுக்கும் எமது ஒன்றியத்தின் சார்பாக நன்றியைத் தெியத்தருவதோடு எமது விழாவிற்கு வருகை தந்து பார்த்து மகிழ்ந்ததோடு, கலைஞர்களையும், எம்மையம் உற்சாகமூட்டிய அனைத்து ரசிக உள்ளங்கள், பெற்றோர், கலை விரும்பிகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியினைத் தெரியத்தருகின்றேன்.

க.குலராஜேந்திரன்
பொதுச் செயலாளர்,


*Address: 19 Canmore Blvd, Scarborough, Ontario, M1C 3T3, Canada   Web: www.nmmv.ca   E-mail: nmmv.canada@gmail.com*



## பசுமை நிறைந்த நினைவுகள்

- வே. கனகசபை

எமது வாழ்க்கையின் இளமைக் காலத்தைத் திரும்பிப்பார்க்கும் போது இனிமையான, ஆரோக்கியமான எண்ண அலைகளை மனதில் பாயவிடுவது நாம் பிறந்த வீடே. அது எந்தக் கிராமத்தின் மூலையில் அல்லது நகரத்தின் மத்தியிலாவது இருக்கலாம், அல்லது காட்டுப் பிரதேசமான குக்கிராமமாகவும் இருக்கலாம். எமக்கு வாழ்வதற்கான பயிற்சியும், சிந்தனையும் அத்திவாரம் இடப்படுவது வீட்டிலேயே. இவை தன்னிச்சையாகவே ஊட்டப்படுகின்றன. வீட்டுக்கு அடுத்தபடியாக அமைவது வீட்டின் அயலில் அமைந்துள்ள ஆரம்பப்பாடசாலை. எமது வீட்டுச் சூழலில் இருந்து சமுதாயத்திற்கு எம்மை அழைத்துச் செல்வது இந்தப்பாடசாலை. ஏடெடுத்து, அடியெடுத்து எம்க்குக் கல்விக்கு வழிகாட்டுவன ஆரம்பப்பாடசாலைகளே. ஆரம்பப் பாடசாலையைத் தொடர்ந்து எம்மை உயர்நிலைக் கல்விக்கு இட்டுச்செல்வது இரண்டாந்தரப் பாடசாலைகள் அல்லது உயர்நிலைப் பாடசாலைகளாகும்.

எனக்குக் கல்வியூட்டி என்னை நெறிப்படுத்திய பாடசாலைகளைச் சற்றுத்திரும்பிப் பார்க்கிறேன். 1960ம் ஆண்டு, நான் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் 5ம் வகுப்பு சித்தியடைந்த பின்பு, எனது பெற்றோரும் சகோதரர சகோதரிகளும் தீர விசாரித்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைத் தேர்ந்தெடுத்து என்னை அனுமதிப் பரீட்சைக்குத் தோற்ற வைத்தார்கள். இதனால் 1961இல் இருந்து அங்கு படிக்கும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டேன்.

இது கரவெட்டி, வதிரி, புலோலி, அல்வாய், திக்கம், மண்டான், துன்னாலை கரணவாய் போன்ற ஊர்களைச் சேர்ந்த பிள்ளைகள் வந்து கல்விகற்பதற்கு வசதியாக 'மாதிரிப் பாடசாலை'யாக அமைக்கப்பட்டிருந்த இந்தப் பாடசாலை பின்னர் மத்திய மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. இங்கு நெல்லியடியைச் சுற்றியுள்ள அயல் கிராமங்களில் இருந்து மாணவர்கள் வந்து கல்விகற்றதோடு மட்டுமன்றி மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம் போன்ற வெளி மாவட்டங்களிலிருந்தும், யாழ் மாவட்டத்திலுள்ள பல பாகங்களிலிருந்தும் குறிப்பாக நெடுந்தீவு, வேலணை, புங்குடுதீவு போன்ற தீவகப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து தங்கியிருந்து கல்வி பயின்று வந்தனர். இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன ஒன்று ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு அரசினால் இந்தப்பாடசாலையில் இடம் ஒதுக்கித் தரப்பட்டது. மற்றது தூர இடத்துப் பிள்ளைகள் விடுதியிலும் பாடசாலைச் சுற்றாடலிலும் உள்ள வீடுகளிலும் தங்கி இருந்து படிக்கும் வாய்யும் கிட்டியது என்பதுமாகும்.

இந்தப் பாடசாலை அரசாங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்ட மத்திய மகா வித்தியாலயமானதும் எல்லா வசதிகளையும், கொண்டு விளங்கியது. விளையாட்டு மைதானம், விஞ்ஞான ஆய்வு கூடங்கள், வகுப்பறைகள், சிற்றுண்டிச் சாலை, நூலகம் என்பன இங்குள்ள வசதிகளாகக் காணப்பட்டன. இப்பிரதேசத்தில் உள்ள எனைய பாடசாலைகளில் இல்லாத வாய்ப்புக்கள் பலவற்றை இந்தப்பாடசாலை பெற்றிருந்தது.

இங்கு பல பட்டதாரி ஆசிரியர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் கல்விக்காகத் தங்களை அர்ப்பணித்து கடமையாற்றி வந்தனர். சங்கீதம், மரவேலை, சித்திரம் போன்ற பாடங்களும் கற்பதற்கு ஏற்ற வாய்ப்புகளும் வசதிகளும செய்து தரப்பட்டிருந்தது. விளையாட்டுத்துறைக்குப் பெயர்பெற்ற ஆசிரியர்கள் இந்தப் பாடசாலையில் பயிற்சி அளித்துவந்துள்ளனர். சாரணர் (Scouts) இயக்கம், இளம் இராணுவத்தினர் (Cadet) பயிற்சியையும் அளிப்பதற்காக இரண்டு ஆசிரியர்கள் அங்கு மிகத் தீவிரமாக ஈடுபட்டுவந்துள்ளனர். இவற்றை இந்தப்பாடசாலை மிகச் சிறந்தமுறையில் கையாண்டு வந்துள்ளமைக்கு அதற்காகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பொறுப்பேற்று நடத்தி வந்தமையே காரணமாகும். இத்துறைகளைப் பொறுத்தவரை ஏனைய ஆசிரியர்களும் தங்களாலான உதவிகள், ஒத்தாசைகளை நல்கியும் வந்துள்ளனர். க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையிலும் உயர்தரப் பரீட்சையிலும் குறிப்பிடத்தக்களவு பெறுபேறுகளைப் பெற்றுத்தர அங்கு சேவையாற்றிய ஆசிரியர்களும் அதிபர்களுமே காரணமாக இருந்தனர். இந்த இடத்தில் எனது ஞாபகத்தில் வரும் சில ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமாக அமையும் என நினைக்கின்றேன். 1961இன் முற்பகுதியில் ஏ.ரி. சபாரத்தினம் அவர்கள் அதிபராக இருந்தார். 1961ஆம் ஆண்டு பிற்பகுதியிலிருந்து 1967ம் ஆண்டுவரையும் எம். இரத்தினசபாபதி அதிபராகவிரந்தார். ஒரு சிறந்த நிருவாகி மட்டுமன்றி கணிதம்,பௌதிகவியல் கற்பிப்பதிலும் சிறந்த ஒரு ஆசானாகவும் அவர் திகழ்ந்தார்.

1968ஆம் ஆண்டு கே. சிவசிதம்பரம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். அவர் இரசாயனவியல் கற்பிப்பதில் கைதேந்தவராவார். அவர் பாடசாலையை முன்னேற்றுவதில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டுவந்தார். கரவெட்டியைச் சேர்ந்தவராயினும் பாடசாலைக்குள் தங்கியிருப்பதே பாடசாலை அபிவிருத்திக்கும், நிருவாகத்திற்கும் உகந்தது என எண்ணி அங்கேயே தனது குடும்பத்தினரோடு குடியேறினார். சிவப்பிரகாசம், சபாரத்தினம், இரத்தினசபாபதி, ஆகியோர் வரிசையில் சிவசிதம்பரம் அவர்களும் பாடசாலையை முன்னேற்றப்பாதையில் இட்டுச்சென்ற அதிபர்கள் வரிசையில் ஒருவராகத் திகழ்கின்றார்.

இவ்விதமே என்நினைவில் வ்ரும் சில ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடுவதும் பொருத்தமாக அமையும்

‘செய்யும் தொழிலே தெய்வம்’ என்று சேவை மனப்பான்மையோடு தங்களை அர்ப்பணித்துச் செயற்படும் ஆசிரியர்கள் பலர் நெல்லைக் கலைக்கோயிலைக் கட்டி எழுப்பவும், அங்கு கல்வி பயின்ற மாணவர்களை ஈடேற்றவும் அரும்பாடுபட்டு உழைத்துள்ளனர். நெல்லியடியைச் சேர்ந்த ஆசிரியர் தாமோதரம்பிள்ளை அவர்கள் அன்பாலும் சேவைத்திறத்தாலும் மாணவர்கள் அனைவரது உள்ளத்திலும் இடம்பெற்றுக்கொண்டவர். அவர் கண்ணியம், கட்டுப்பாடு, சேவை மனப்பான்மை கொண்ட ஒரு தலை சிறந்த ஆசிரியர். அவரும் அவரது துணைவியாரும் இந்தப்பாடசாலையில் கல்வி கற்பித்து வந்தனர். தாமோதரம்பிள்ளை ஆசிரியரிடம் க.பொ.த. (சாத) வில் தூய கணிதத்தைப் படித்தேன். இப்பொழுது நினைத்தாலும் அவரின் கற்பிக்கும் திறன் என்மனதில் நிலைத்து நிற்கின்றது என்றால் அவரின் குணப்பண்புகளேயாம். மணி அடிக்கவும் அவர் வகுப்புக்குள் நுழையவும் நேரம் சரியாகவே இருக்கும். வகுப்புத் தொடங்குமுன்னர் ஒவ்வொருநாளும் “ஆறின கஞ்சி பழங்கஞ்சி” “கற்கக் கசடற” என்பன போன்ற அறிவுரைகளை மாணவர்களுக்குக் கூறி அவர்களை நெறிப்படுத்துவதில் வல்லவராகவும் அவர் திகழ்ந்தார். தூர இடங்களில் இருந்து வந்துள்ள மா மாணவர்களைப் பார்த்து “போன மச்சான் திரும்பிவந்தான் பூமணத்தோடு” என்று ஊரவர்கள் உங்களைப் பாராட்டத்தக்கதாக கற்றுத் தேறி வல்லவர்களாகவும் கல்விமான்களாகவும் வரவேண்டும் எனத் தட்டிக்கொடுப்பார்.

ஆசிரியர் இராமகிருஷ்ணன், வெள்ளை உடையில் உயர்ந்த தோற்றம் கொண்ட மனிதராகக் காட்சி தருவார். கணித பாடம் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இவர் பாடசாலை விளையாட்டுத் துறையில் முன்னணிக்கு வருவதற்கு பாடசாலை முடிந்ததும் மாணவர்களோடு விளையாட்டுத் திடலில் நின்று பயிற்சி அளிப்பதோடு உற்சாகமூட்டியும் வருவார். விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாக தியாகராசா அவருக்குப் பின்னர் ஜெகசோதி போன்ற சிறந்த ஆசிரியர்கள் இருந்தவேளைகளிலும் அவர்களோடு இணைந்து செயற்பட்டு வந்துள்ளார். உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கரபந்தாட்டம், மெய்வல்லுனர் (Athletic), போன்ற பிரதான விளையாட்டுக்களில், மாணவர்கள் பங்குபற்றி சிறப்பிடம் பெற்றுக்கொண்டதோடு யாழ் மாவட்டப் பாடசாலை மட்டத்திலும், அகில இலங்கை மட்டத்திலும் பங்குபற்றியவர்களில் சிலர் முன்னைய சாதனைகளையும் முறியடித்தும் உள்ளனர். எனது காலத்தில் (1961-1969) ஸ்ரீதரன், பொன்னுத்துரை, இராமநாதன், சிவானந்தன் ஆகியோர் விளையாட்டுத்துறையில் சாதனை படைத்தவர்களாவர்.

விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பாக இருந்த ஆசிரியர் ஜெகசோதி, பாடசாலை இளம் இராணுவப்(Junior Cadet) பயிற்சி நெறிக்கும் பொறுப்பாகக் கடமையாற்றினார். இவரின் முயற்சியால் சிரேஷ்ட(Senior Cadet) இராணுவப் பயிற்சி நெறியும் பாடசாலையில் மேற்கொள்ளப் பட்டது. யாழ் மாவட்ட விளையாட்டுப் போட்டியில் 1965ம் ஆண்டு அவர் ஈட்டி எறிதல் போட்டிக்கு நடுவராகக் கடமையாற்றிய வேளை இவர் மீது பாய்ந்த ஈட்டி இவரின் உயிரைக் குறிவைத்தது. இவரின் இடத்தை ஆசிரியர் பாலேந்திராவும், ஆசிரியர் அருளையாவும் பொறுப்பேற்று நடத்தினர். இவர்கள் இருவருமே எமது இளம் இராணுவப் பயிற்சியாளர்கள், தியத்தலாவ இராணுவ முகாமில் பயிற்சி பெறுவதற்கான வசிதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததோடு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் அந்த இடத்தைப் பெற்றுக்கொள்ள வைத்தது இவர்களின் முயற்சியே.

கலைத்துறை மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தவர்களில், தமிழ் மொழி, இந்திய நாகரிகம், இந்து சமயம் என்பனவற்றில் பாண்டித்தியம் பெற்றிருந்த நாடறிந்த ஆசிரியர்கள் பண்டிதர் வீரகத்தி, வித்துவான் குமாரசாமி, வித்துவான் ஆ.தா. ஆறுமுகம், சுகுணா கணபதிப்பிள்ளை, வி.கே. நடராசா, வீரவாகு, ஜனகன், குகதாசன் ஆகியோர் மாணவர்கள் மனங்களில் இடம் பிடித்துக்கொண்ட சிறந்த ஆசிரியர் வரிசையில் போற்றத் தக்கவர்களாவர். இவர்களின் காலத்தில் கலைத்துறை மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லும் தொகையில் அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இவ்விதமே விஞ்ஞானத்துறையில் துணையதிபராகவும் பௌதீகவியல் ஆசிரியராகவும் பணியாற்றிய சிவலிங்கம், இரசாயன ஆசிரியரான ம. குகதாசன், செல்வி மாணிக்கம், இராஜரட்ணம், செல்வி முத்துக்குமாரு போன்றோர் சிறந்த ஆசிரியர்களாகப் சேவையாற்றினர்.

“அடியைப் போல அண்ணன் தம்பி உதவான்”, “அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்” என்ற தாரக மந்திரத்தைத் தனது கையில் தூக்கிக்கொண்டு மாணவர்களைக் கதிகலங்க வைத்திருந்த ஒரு கட்டை உருவம் ஏரம்பு ஆசிரியர். கீழ் வகுப்புக்களின் ஒழுக்கத்தில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டவர். அவரை அங்கு படித்தவர் கள் யாருமே மறக்கமாட்டார்கள். அவரைக் கண்டால் மாணவர்கள் அனைவருமே ஓடி ஒழிந்துகொள்வார்கள். ஆனால் அவர் தான் தண்டனை அளித்தவர்களுக்கு முன்னால் உள்ள தெட்சணாமூர்த்தியின் தேனீர்க்கடையில் சிற்றுண்டியும் தேனீரும் வாங்கிக்கொடுத்துச் சாந்தப்படுத்தும் இரக்க உள்ளமும் கொண்டவர்.

அரச உதவி பெற்றுப் புலமைப் பரிசில் கிடைத்த மாணவர்களோடு தூர இடத்து மாணவர்களும் இங்கு தங்கியிருந்து கல்விகற்க ஆண், பெண் மாணவர்களுக்கான விடுதிகள் கைகொடுத்து உதவின. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் பல புதிய நண்பர்களை எனக்குப் பெற்றுத் தந்திருந்தது. வடமராட்சியின் மத்தியில் கல்விக் கலங்கரை விளக்கமாகத் திகழும் எமது பாடசாலையில் தரம் மேலும் உயர பழையமாணவர்கள் ஓரணி திரண்டு உதவவேண்டும். எமக்குக் கல்வியறிவூட்டிப் கல்விப்பசியைத் தீர்த்த எமது அன்னை நெல்லியடி மத்திய மாகாவித்தியாலயமே.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அபிவிருத்தி ஒன்றியத்தினர் எடுக்கும் விழா வெற்றி பெறுவதற்கும் நோக்கம் ஈடேறவும் நாமனைவரும் இணைந்து பங்களிப்போம்.

## கனவு எனும் ஒருவர் பார்த்து அனுபவிக்கும் நாடகம்



பொ.கனகசபாபதி
மகஜனக் கல்லூரி முன்னைனாள் அதிபர்

" I have a Dream." இக்கூற்றினைப் பற்றி அறியாதவர்கள் பலர் இருக்கமுடியாது. நீக்கிரோக்களின் நல்வாழ்விற்காகக் குரல் கொடுத்து மடிந்த மார்ட்டின் லூதர் கிங் (Martin Luther King) என்ற பெருமகன் 1963ஆம் ஆண்டு அமெரிக்காவில் வாஷிங்ரன் நகரில் உள்ள லிங்கன் ஞாபகார்த்த சதுக்கத்தில் ஆற்றிய பிரபலமான உரையின் ஆரம்ப வாசகம் தான் இது. இங்கு அவர் கண்ட கனவு என்பது,



அது நனவாக வேண்டும் என்ற உள்ளத்தில் எழும் கற்பனை. இதற்கு உறங்க வேண்டிய தேவை இல்லை. "கனவு- நினைவு" இப்படி அற்புதப் பொருத்தமான இரு பதங்கள் வேறு எந்த மொழியிலாவது உள்ளதோ எனக்குத் தெரியவில்லை. இது வேறு கனவு. இன்றைய ஈழத் தமிழர்களின் கனவு தமிழ் ஈழம். இதுவும் அது போன்ற இன்னொரு வகையான கனவு.

நான் சொல்ல வரும் கனவு தான் என்ன? உறங்கும் போது நடைபெறும் நிகழ்வு. அதற்கு ஒன்றோ டொன்று தொடர்புடைய நான்கு அர்த்தங்கள் உள்ளன.

*1.கனவின் போது மிகச் சிறிய அளவிலே மூளை இயங்கச் செய்கிறது. வெளியே இருந்து ஏதாயினும் தூண்டல்கள் மூளையை வந்தடைவது தடுக்கப் படுகிறது. "நான், எனது" என்ற "சுய தொகுதி" கனவின்போது தற்காலிகமாக இல்லாமல் போய்விடுகிறது. உறக்கத்தின் பேதும் கனவின் போதும் மனித உடல் பெரும் அளவிலே சக்தி விரயத்தை மட்டுப்படுத்திக் கொள்கிறது எனபர் ஆய்வாளர்கள்.*



*2. கனவு என்பது நாம் அனுபவிப்பது. நிகழ்ச்சி நடக்கின்ற போது எமது புலன்களைச் சம்பந்தப் படுத்துவாகவும் அமைகிறது. நாமே கனவின் பிரதான நடிகராக ஆவோ அல்லது பார்வையாளராகவோ அமைவதால் சில சமயங்களிலே அது மிக உணர்வு பூர்வமானதாகவும் அமைந்து விடுகிறது .*

*3.அதிகாலையில் நாம் எழுந்திருக்கும் போது பொதுவாக இந்தக் கனவு எமக்கு நன்றாக நினைவில் உள்ளமையால் கனவு அனுபவத்தை நினைவாற்றலில் பதித்துள்ளோம். சில சமயங்களிலே, நாளின் பொழுது போகக் கனவினை முற்றாகவே நினைவு கூர முடியாமலும் போய் விடுவதும் உண்டு.*

*4. எமது கனவு அனுபவத்தை நாம் எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ இன்னொருவருக்குச் சொல்கின்றோம். ஆகவே கனவு எனும் நாடகத்தை நாம் ஒருவர் மாத்திரமே அனுபவிக்கிறோம். இன்னொருவர் காண்பதற்கோ கேட்பதற்கோ சந்தர்பம் கிடைப்பதில்லை. நாம் சொல்லித் தான் இன்னொருவருக்குத் தெரிய வருகிறது. ஆகவே கனவு என்பதை உறக்க நிலையில் நாம் அனுபவிக்கும் உணர்வினை நினைவுக்குக் கொண்டு வருதல் எனலாம் அல்லது எமது சுய தொகுதி வெளி உலகத்துடன் தொடர்பற்ற நிலையில் இருக்கும் சமயத்திலே எமது மனத்தில் நடைபெறும் சிறுசிறு நாடகங்கள் எனலாம்.*

சாதாரணமாக சராசரியாக ஒருவருக்குத் தினசரி மூன்றோ நான்கோ கனவுகள் வரலாமாம். குழந்தைகள் கூடிய நேரம் உறங்குகின்றமையால் அவர்களுக்குத் தினசரி இன்னும் அதிக கனவுகள் தோன்றலாம். குழந்தைகள் உறங்குகின்ற போது அவதானித்தீர்கள் என்றால் அவர்கள் இடையிடையே புன்முறுவல் பூப்பதைக் காணலாம். "நரி வெருட்டுகிறது" என நமது பாட்டிமார் சொல்வதையும் கேட்டிருப்பீர்கள். இக்கனவுகள் யாவும் குழந்தை தனது உறக்கத்திலே காண்கின்ற நாடகங்கள். சிலசமயங்களில் அது திடுக்கிட்டு அழுகிறதையும் காண்டிருப்பீர்கள். அது எதனைக் கண்டு முகம் மலர்ந்தது அல்லது எதனைக் கண்டு அல்லல் பட்டது என்பதை யாவராலும் கண்டறிய முடியாதது. குழந்தையால் அதனை வெளியே எடுத்துச் சொல்ல முடியாதவை. குழந்தைக்கு தனது ஐந்தாவது வயது வரை முற்பிறப்பு அனுபவங்கள் நினைவுக்கு வரும் என அமெரிக்கப் பல்கலைக்கழகத்துப் போராசிரியர் ஒருவர் கூறுகிறார். ஆகவே அந்த ஞாபகங்கள் கூடக் குழந்தையின் கனவில் வருமோ தெரியவில்லை. நாம் உறங்குகின்ற சமயங்களிலே REM என அழைக்கப் படும் Rapid Eye Movement நடைபெறுகிறது. அச் சமயத்தில் மூடப்பட்ட கண் இமைகளின் பின்னே நமது கண்கள் முன்னும் பின்னுமாக அசைகின்றன, என 1950ம் ஆண்டிலே ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அப்போது தான் கனவுகள் ஏற்படுகின்றதாக உளவியலாளர்கள் சொல்கிறார்கள். நமது உறக்கத்தின் ஆரம்பத்தில் தோன்றும் கனவுகள் சிறியவையாகவும் பின்னர் நேரம் போக நீண்டு கொண்டும் போகுமாம். சிறப்பாக பிந்தி வரும் கனவுகள் நெடியவையாக இருப்பதுடன் மிகத் தெளிவானவையாகவும் அதிகம் போலித்தனமானவையாகவும் அமையலாம். நம்மவர்கள் இதனாலேயே காலையில் கண்ட கனவு பலிக்கும் எனப் பயந்தடித்தபடி இருப்பதைக்காணலாம். உறக்கம் ஆழமானதாக அமைகின்ற பொழுது கனவு நீண்டதாகவும் தெளிவானதாகவும் அமைகிறது. பகலிலே உறக்கம் ஆழமானதாக இருப்பதில்லை. எனவே கனவு தெளிவானதாக அமைவதில்லை. ஆகவே தான் பகற்கனவு என அதனை மட்டம் தட்டி விடுகின்றனர். பெரிதான ஜதார்த்தமற்ற கற்பனை உலகிலே சஞ்சரிப்பவரை ஆங்கிலத்தில் Day-dreamer என்பார்கள்

கனவு பற்றி வெவ்வேறு கொள்கைகள் விஞ்ஞானிகளால் சொல்லப் பட்டுள்ளன. சிக்மண்ட் புறோயிட் (Sigmund

கனவு பற்றி வெவ்வேறு கொள்கைகள் விஞ்ஞானிகளால் சொல்லப் பட்டுள்ளன. சிக்மண்ட் புறோயிட் (Sigmund Freud) எமது மனத்திலே நம்மால் அடக்கப் பட்ட ஆசைகள் வேறோரு அடையாளத்தில் புலப்பட்டு எமது மனத்திற்கு அந்த ஆசையை நிறைவேற்றிய மனச் சாந்தியைத் தருவதுடன் அந்த எண்ணம் மீண்டும் எமது வாழ்வில் குறுக்கிடாமல் செய்கிறது என்கிறார். காதல் வயப் பட்டவர்கள், சிறப்பாக ஒரு தலைக் காதல் வயமானோர், இக் கொள்கையினை ஏற்பார்கள் என நம்பலாம். மறுதலைக் கற்றல் (Reverse learning அல்லது unlearning) என்பார்கள். இந்தப் பொறிமுறையானது மறத்தலில் இருந்து வேறுபடுவது. முற்த்தல் என்பது பின்னொரு சமயம் நிவைுக்கு வரலாம் ஆனால் இது அந்த எண்ணத்தை முற்றாகவே அகற்றி விடுதல்.
அமெரிக்க பூர்வ குடிமக்களின் கனவு பற்றிய கொள்கை நம்மவர்களுக்குப் பெரும் அளவிலே ஒத்து வரும் போலத் தெரிகிறது. கனவுகள் உண்மை நிகழ்வுகள் என்பார்கள் அவர்கள். தமது கனவுகள் தம்மைப் பற்றிய உண்மைகளையும் தமது வாழ்வு பற்றிய செய்திகளையுமே சொல்வதாக அவர்கள் கருதுகிறார்கள்.
இன்னொரு கொள்கை மிகவும் ஜதார்த்தமானது. அதன் படிக்கு எமது நாளாந்த அனுபவங்கள் எமது ஆழ்மனத்திலே (Sub conscious mind) தங்கியுள்ளன. நாம் உறங்குகின்ற போது இவற்றில் சிலவற்றை எமது மூளை தொகுத்து ஒரு சிறு நாடகமாக எமக்குக் கனவு மூலமாக அளிக்கின்றது. இரவிலே அதி பயங்கரமான திரைப்படம் ஒன்றினை உங்கள் பிள்ளைகள் பார்த்தார்கள் என்று வையுங்கள். அன்று இரவு உங்கள் தூக்கம் நிம்மதியாக இருக்கும் என்பதற்கு உத்தரவாதமே இல்லை. நடு இரவில் பிள்ளைகள் உங்களைத் தட்டி எழுப்பி உங்களுடன் உறங்கப் போகிறேன் பயங்கர கனவுகள் வருகின்றன என்று கெஞ்சுவார்கள். ஏன் பெரியவர்கள் கூட இத்தகைய கனவுகளைக் காண்பது உண்டு. ஆனால் அனுபவங்கள் அன்றன்றே கனவில் வரவேண்டும் என்ற அர்த்தம் இல்லை. அனுபவங்கள் எமது ஆழ்மனதிலே வருடக் கணக்கிலே புதையுண்டு இருக்கலாம். இந்தப் புதையலை கிண்டி எடுத்து தெர்குத்து நீக்க வேண்டியதை நீக்கி தேர்ந்த தொகுப்பாளராக (Editor) நமது மூளை ஒரு நாடகத்தை அமைத்து பல வருடங்களின் பின்னே உங்களைப் பார்க்க வைக்கலாம். சில வருடங்களுக்கு முன்னர் இங்கே நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்றது. 28 வயதுப் பெண்மணி ஒருவர் தனது சிறிய தந்தையார் தன்னைப் பால்முறை வன்செயலுக்கு ஆளாக்கினார் எனக் குற்றம் சாட்டினார். அப்போது தனக்கு 7 வயது எனவும் கூறினார். தனது அறியாப் பருவத்தில் நடந்த இந்த நிகழ்ச்சி தனது உறக்கத்தை இப்பொழுது கனவுகள் மூலமாகக் கெடுப்பதாகக் கூறினார்.
எத்தகைய கனவுகள் என்பதை நீங்கள் அறிந்தால் ஆச்சரியப் படுவீர்கள். அப்பெண்ணுக்கு அதிக கனவுகளிலே தனது பற்கள் வீழ்வதாக இருக்குமாம். நம்மவர்கள் பல் விழுவதாகக் கனவு கண்டால் இறப்பு நடைபெறும் என்பார்கள். பல்விழுவதாகக் கண்ட கனவுக்கும் பாலியல் வன்முறைக்கும் என்ன தொடர்பு என்கிறீர்களா. கனவுகள் தத்ரூபமாக நடந்த நிகழ்வுகளைக் காண்பிக்க வேண்டும் என்பதில்லை. அவை சங்கேதங்களாகவோ குறியீடுகளாகவோ (Symbolic) அமையலாம். இப்பெண்ணை அக்கொடியவன் பாலியல் வன்முறைக்கு ஆளாக்குகின்ற பொழுது அதற்கு ஏழு வயது. அப்பொழுது தான் அதன் பாற்பற்கள் விழுந்து நிரந்தரப் பற்கள் தோன்றுகின்றன. எனவே கனவு நிஜநிகழ்ச்சியைப் புலப்படுத்தாது சங்கேதமாக நடந்த காலத்தைப் பிரதிபலித்துள்ளது.
கனவுகள் வாழ்க்கைக்கு இறியமையாதவையா என்ற வினா எழுகிறது. இது அவரவர்கள் மனப் பான்மையிலேயும் அவர்கள் வாழ்கின்ற கலாசாரத்திலேயுமே தங்கி உள்ளது. ஆனால் சில பிரபலங்களைக் கனவுகள் வழிநடத்திய உண்மை பதிவுகளில் உள்ளன. ஆபிரஹாம் லிங்கன் அமெரிக்காவின் குடியரசுத்தலைவராக இருந்த போது படுகொலை செய்யப் பட்டார். அவர் படுகொலை செய்யப்படுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் அவர் ஒரு கனவு கண்டாராம்." வெள்ளைமாளிகையிலும் அதற்கு வெளிப் புறத்திலும் மக்கள் பெரும் தொகையாக நின்று பெருமளவில் தமது துயரத்தைக் காட்டியபடி இருந்தார்களாம். அங்கே ஒருவரின் உடல், (அதனைக் குடியரசுத் தலைவர் என்றே லிங்கன் இனம் கண்டார்,) காணப்பட்டதாம்." லிங்கன் கனவு கண்ட சில நாட்களில் கொலை செய்யப் பட்டார். நான் நைஜீரியாவிலே கடடமையாற்றி காலத்தில் விடுமுறையின் போது சென்னை சென்றிருந்தேன். எனது அபிமானத்துக்குரிய தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் அங்கு வாழந்து கொண்டிரந்தார் அவரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்த போது அவர் காலம் சென்ற தமிழ்த் தலைவர் இ.மு.வி நாகநாதன் தன்னை அங்கே வருமாறு அழைப்பதாகத் தான் அடிக்கடி கனவு கண்டதாகக் கூறினார். சிறிது காலத்தில் அவர் கொலை செய்யப் பட்டார். இவர்கள் அரசியல் வாதிகள் ஆகவே அவர்களுக்கு உயிராபத்து ஏற்படும் என்ற பயம் தொடர்ந்து இருந்து கொண்டே வரும் ஆகவே மனப் பிராந்தியையே கனவு பிரதிபலித்துள்ளது எனச் சிலர் கூறலாம். ஆனால்..
நான் காங்கேசந்துறையில் வாழ்ந்த காலத்தில் எனது இல்லத்தில் கிணற்றடியில் இருந்து மலகூடம் செல்வதற்காகப் பாதை அமைத்து அதன் இருபுறங்களிலும் கமுக மரங்கள் நட்டிருந்தேன். ஒரு இரவு அந்தக் கமுகமரத்தில் ஒன்று வட்டுடன் முறிந்து வீழ்வதாகக் கனவு கண்டேன். இதை எனது தாயாரிடம் சொன்னேன். குடும்பத்தில் ஒரு துயரச் சம்பவம் நடைபெறலாம் என்றார். ஒரு வாரத்தில் எனது மைத்துனர் இறந்தார். இப்படியாக நிஜமாக நடக்கவுள்ள நிகழ்ச்சிகள் பல உங்கள் வாழ்க்கையில் கனவுகளின் பிரதிபலிப்பாக அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

Robert Louis Stevenson என்பவர் சென்ற நூற்றாண்டின் பிரபலமான எழுத்தாளர். அவருடைய மிகப் பிரபலமான கதைகளில் ஒன்று "Dr. Jeckell and Mr. Hyde" இந்தக் கதைக்கான கரு அவருக்குக் கனவிலே தான் தேன்றியதாம்.

1960களில் மிகப் பிரபலமாயிருந்த BEATLES இசைக்குழுவினரில் ஒருவரான Paul McCartney க்கு Yesterday என்ற பாடலுக்கு இசை கனவிலே தான் உதித்ததாம். இப்படிப் பல உதாரணங்கள் சொல்லலாம். ஏன் உங்களுக்கக்கூட இத்தகைய பல அனுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே கனவுகள் வாழக்கைக்கு இன்றியமையாதவையா என்பதற்குப் பதில் கூறு முடியாது. அவரவர்கள் மனப் பாங்கினைப் பொறுத்தது. கனவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பவரும் உள்ளனர் அதனை உதாசீனப் படுத்தி உடனடியாக மறந்து விடுபவரும் உளர்.

ஆழ்மனத்திலே உள்ள வாழ்க்கை அனுபவங்கள் வெகுகாலத்தின் பின்னர் கனவுகளாக வருவதாகக் கூறியிருந்தேன். அதே போன்று சில சமயங்களிலே கனவுகள் கூட ஆழ்மனத்திலே புதையுண்டு விடுவதும் உண்டு. இரவினிலே கண்ட கனவு, கனவு முடிந்து கண் முழித்ததும் நினைவுக்கு வரும் ஆனால் மீண்டும் உறங்கிக் காலையில் எழுந்ததும் அரைகுறை ஞாபகமே வருவதும் உண்டு. ஆனால் பின்னர் ஒரு பொழுது அது நினைவுக்கு வரலாம்.

எது எப்படியாயினும் நாம் காண்கின்ற கனவுகள் யாவும் வேற்றுமைகளிலும் பார்க்க ஒற்றுமையுடையவையாகவே இருக்கும். கானவுகள் வாழ்க்கை சம்பந்தமான விடையங்கள் பற்றிய மனித கருதுகோள்களையும் ஆதங்கங்களையும் புலப்படுத்துபவையாகவே உள்ளமையால் அவை நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் வேறுபட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவற்றினை வேறு படுத்துபவை கலாசார, பொருளாதார,சமய பிற்புலங்களாக அமையமுடியும். ஒருவரின் மனத நிலையினை சுய தேவைகள் அக்கறைகள், கவலைகள், விசாரங்கள், மன உணர்ச்சிகள், தொழில் பற்றிய ஏக்கங்கள், குடும்பம் மற்றும் நண்பர்கள் பற்றி பற்றிய சிந்தனைகள்,மன உளைச்சல்கள், சமூக வாழ்கை பற்றிய உணர்வுகள், பொழுது போக்குகள் தவிர ஆட்கொள்பவை வேறேன்ன. இவைதான் கனவின் காட்சிக்குரிய கதைக் கருக்கள். ஆகவே கனவுகள் காலம் காலமாக அரைத்த மாவேயே அரைக்கின்ற கதையே தான்.

இரண்டு கண்களும் பார்வை அற்றவர்கள் கனவு காணமுடியுமா என எண்ணலாம். கனவு என்பது கண்கள் மூலம் காண்பது இல்லையே. அது ஒரு அகத் தோற்றம் எனவே கண்பார்வை இல்லாமலே பார்க்கக் கூடியது ஒன்று உண்டென்றால் அது கனவு மாத்திரமே.

விலங்குகளால் கனவு காணமுடியுமா என்பது இன்னொரு சந்தேகம். REM உள்ள எல்லா விலங்குகளாலுமே கனவு காண முடியுமாம். வீட்டிலே படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் நாயினை அவதானித்தீர்களானால் அதன் கால்கள் சில சமயங்களில் அசைவதைக் காண முடியும். அப்போ அது கனவு காண்கிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

கனவு மெய்ப்பட வேண்டும் காரியமாவது விரைவில் வேண்டும் (பாரதி)

## நெல்லியடி மத்திய மகா வித்தியாலம்
## அபிவிருத்தி ஒன்றியம் - கனடா

### வருமானச் செலவுக்கணக்கு
### ஜீலை 22, 2007தொடக்கம் ஒக்டோபர் 22, 2007 வரை

| வரவு | | | செலவு | | |
|---|---|---|---|---|---|
| அங்கத்துவம் பணம் -சாதாரணம் (10 X 145) | $ 1450. | 00 | ஒன்றியம் பதிவுக் கட்டணம் | $ 277 | 50 |
| அங்கத்துவம் - ஆயுட்காலம் (100 X 16) | $ 1600. | 00 | அலுவலகப் பாவனைப்பொருட்கள் | $ 207 | 97 |
| | | | செலவுபோக மீதி | $ 2564 | 53 |
| | $ 3050 | 00 | | $ 3050 | 00 |

### இருப்புக்
### காசுக் கூற்று

| | | |
|---|---|---|
| 22/07/2007 இருப்பு | $ 1303 | 12 |
| செலவுபோக மீதி. | $ 2564 | 53 |
| | $ 3867 | 65 |

நா.திரவியம்
பொருளாளர்
22/10/2007


Thinking of Selling?
List With
The Home Team
& Consider it
"SOLD"
Shan Thayaparan
Sales Representative
Dir: 416.567.7675
Web:www.shan123.com
Your peace of mind is Our goal.....
Kumar Muthusamy
Sales Representative
Dir: 416.518.0118
E-mail: muthus5@hotmail.com
"FREE MARKET EVALUATION"
"FLEXIBLE COMMISSION"
Viki Velauthan
Sales Representative
Dir: 416.457.7162
E-mail: vvelauthan@yahoo.com
HomeLife GTA Realty Inc. Brokerage
Bus: 416.321.6969 Fax: 416.321.6963
206 - 1711 McCowan Rd., Scarborough, ON. M1S 3Y3
Not Intended to solicit properties currently listed for sale or buyers under contract.
*Each office is Independently owned and oprerated.
HOMELIFE
HIGHER STANDARDS

# Image Floor Coverings

## Sales & Installations


*www.imagefloorwhitby.ca*

Oak HardWood | Laminate | Granite

Kampass Cherry | Bamboo "A" | Merbeau


Brazilian Cherry | Tile | Beech


Carpet














**Hardwood - Granite - Ceramic - Laminate - Carpet**
**Tile - Kitchen Counter-top - Oak Stairs - Fireplaces**

**3500 Brock Street North, Unit 8**
**Whitby, Ontario**
**L1R 3J4**

**Tel.: 905-683-9260**
**Tel.: 416-830-3515**
**Fax: 905-666-0411**

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் - கனடா

**Web:www.nmmv.ca**